# ஆசிரியம்

பட்டப்பின் கல்வி டிப்ளோமா
மாணவ அமைப்பு
தேசிய கல்வி நிறுவகம்
யாழ்/இந்து மகளிர் கல்லூரி நிலையம்
யாழ்ப்பாணம்
1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய கீதம்

முத்து முத்தான இரத்தினங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை — நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாம் - அவன்
தன்னம் தனிமையைப் போக்கி - உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்

எண்ணும் எழுத்தும் உணத்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே - நல்ல
கட்டுப் பாட்டுடன் வகுப்பறையில்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தினை நாம்படைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியம்

தூண்டி–1 1995 துலங்கல்–1

கற்றனைத்தூறும் அறிவு

இதழாசிரியர்
திரு. பெ. பிரான்சிஸ் *B.A. (Hons)*

பட்டப்பின் கல்வி டிப்புளோமா
மாணவர் அமைப்பு
தேசிய கல்வி நிறுவகம்
யா/இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ĀSIRIYAM

*Editor:*
*Mr. F. Francis* ***B. A.*** *(Hons)*

Journal of the

**STUDENTS' COUNCIL**

POST GRADUATE DIPLOMA IN EDUCATION
N. I. E. JAFFNA CENTERE (No. 08)
J/HINDU LADIES' COLLEGE
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ அமைப்பினர் 94/95

| | |
|---|---|
| காப்பாளர்: | திரு. திருநாவுக்கரசு கமலநாதன் M.A. Dip. in Ed. |
| ஆலோசகர்: | திரு. கு. சண்முகநாதன் B. Ed. M.A. |
| தலைவர்: | திரு. ஏ. சி. ஜோர்ஜ் |
| உதவித் தலைவர்: | திரு. பரமேஸ்வரன் |
| செயலர்: | திரு. எஸ். சந்திரன் |
| உதவிச் செயலர்: | திரு. பா. தனபாலன் |
| பொருளர்: | திரு. ம. மரியதாஸ் |
| உதவிப் பொருளர்: | செல்வி. சுகந்தி சுப்பிரமணியம் |
| இதழாசிரியர்: | திரு. பெ. பிரான்சிஸ் |

## செயற் குழு உறுப்பினர்

திரு. ரி. நாகரத்தினம்

செல்வி த. செம்மணச்செல்வி

திரு. வி. நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *மலர்க்குழுவினர்*

*காப்பாளர்:* திரு. தி. கமலநாதன் M.A. Dip. in Ed.

*ஆலோசகர்:* திரு. கு. சண்முகநாதன் B.Ed. M.A.

## மலர் ஆசிரியர்

திரு. பெ. பிரான்சிஸ்

## மலர்க்குழு உறுப்பினர்

திரு. ஏ. சி. ஜோர்ஜ்

திரு. எஸ். சந்திரன்

திரு. எம். மரியதாசல்

திரு. வி. நடராசா

திரு. பரந்தாமன்

திருமதி. தெய்வநாயகி கிருஷ்ணசாமி

திருமதி. தையல்நாயகி சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Students' Council Members



*Left to right* (*Seated*) T. Kamalanathan (*Senior Lecturer*), K. Shanmuganathan (*Students' Counsilor*), M. Mariyathas, (*Treasurer*), A. C. George (*President*), S. Chandran (*Secretary*), F. Francis (*Editor*)

" " (*Standing*) T. Suburumaniam (*Member*), T. Krishnasamy (*Member*), V. Nadarajah (*Member*), T. Semmanachelvi (*Member*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR BELOVED PATRONS

We thank the following resurce personnel for their unstinting guidance and Counselling envisaging the improvement of our professional efficiency.

| | |
|---|---|
| **Director P. G. D. E.**<br>N. I. E. Maharagama | *Mr. A.D. Gunasekara*<br>***B. Sc. Dip. in Ed.*** |
| **Chief Project officer P. G. D. E.**<br>N. I. E. Maharagama | *Mrs. T. Sithamparanathan*<br>***B. Sc. Dip. in Ed.*** |
| **Project officer P. G. D. E.**<br>N. I. E. Maharagama | *Mr. M. Thangavel*<br>***B. Sc. Dip. in. Ed.***<br>***Dip. in Maths & Com.*** |
| **Our Supervisor**<br>D. E. Zone-2 Jaffna | *Mr. K. Kandasamy*<br>***M. A. Dip. in Ed. SLEAS.*** |
| **Our Co-ordinator**<br>Deputy D. E. Zone-2 Jaffna | *Mr. E. Sivananthan*<br>***B. A. Dip. in Ed. SLEAS.*** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR LECTURERS

| | |
|---|---|
| **Our Senior Lecturer**<br>Lecturer Kopay Teachers' College | *Mr. T. Kamalanathan*<br>**M. A. Dip. in Ed.** |
| **Our Lecturer**<br>Principal J/K. N. S. M. V. Jaffna | *Mr. K. Shanmuganathan*<br>**B. Ed. M. A.** |
| **Our Lecturer**<br>Principal Emeritus<br>Palaly Taachers' College | *Mr. R. S. Nadarajah*<br>**M. A. Dip. in Ed. SLEAS** |
| **Our Lecturer**<br>Sectional Head J/Athiyar Neervely | *Mr. T. Amirthalingam*<br>**M. A. Dip. in Ed.** |
| **Our Lecturer**<br>Principal J/ Allaipiddy P. V. | *Mrs. A. Shanmugananthan*<br>**M. A. Dip. in Ed.** |
| **Our Lecturer**<br>Deputy Principal<br>J/ Hindu Ladies College | *Miss. Y. Kandiah*<br>**M. A. Dip. in Ed.** |
| **Our Lecturer**<br>Lecturer Kopay Teachers' College | *Mr. M. Paramsothy*<br>**B. Sc .Dip. Ed. SLEAS** |
| **Our Lecturer**<br>Lecturer Kopay Teachers' College | *Mr. S. Senthilmani*<br>**B.Sc. Dip. in Ed. Sp. Trd. (Maths)** |
| **Office Assistants** | *Mr. T. Varatharaiah*<br>*Miss. R. Rangini*<br>*Mr. M. Muthurajah* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Staff



*From Left to right* **(*seated*)** **A. Shanmugananthan, R. S. Nadarajah, T. Kamalanathan** (*Senior Lecturer*), **K. Shanmuganathan, Y. Kandaiya**

" " **(*Standing*)** **T. Varatharajah** (*Office Assistant*), **S. Senthilmany, M. Paramsothy, R. Rangini** (*Clerk*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message of Felicitation*



I am very pleased to give this message to the first issue of the Annual Magazine published by the Students Council of the Post Graduate Diploma in Education Course at the Jaffna Hindu Ladies College.

We are happy that with the assistance of the Department of Education we were able to conduct the Post Graduate Diploma in Education Course at your centre very successfully. Though we are unable to supervise the activies at your centre we are confident that the lecturers and the officials of the Ministry of Education are doing their best to make this course a very effective one for your professional development.

We are also grateful to the lecturers who come for training to Maharagama amidst various difficulties inorder to impart you a better education.

Following this course needs sacrificing your leisure hours for the benefit of the students with a will to improve the teaching learning activities in the classroom. I thank all the teachers for the sacrifices they make and the hardships they undergo while following this course.

A Magazine of this nature is an essential item for a student body mainly as a medium of communication to disseminate knowledge and information among the students, the lectures and others interested in education. This will also be an item you will treasure to keep as a reminder of the course you followed and also of the personnel involved.

I am very thankful to the Students Council for the initiative taken in publishing this Magazine which is a difficult task involving a lot of expenditure, devotion, sacrifice and commitment.

**A. D. Gunasekera**
Director
Department of Post Graduate
Teacher Education
N. I. E.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்கள் வழங்கும் ஆசி

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ளும் ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் "ஆசிரியம்" எனும் சஞ்சிகை வெளியிடப்படுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

கல்வித் திணைக்களம், யாழ் வலயம் இரண்டின் மேற்பார்வையில் ஆசிரிய பயிற்சியில் பங்கு கொள்ளும் பட்டதாரி ஆசிரியர்களால் வெளியிடப்படும் இச்சஞ்சிகை வளர்ந்து வரும் கல்வித் தேவைகளையும், ஆசிரியத் தொழில் விருத்திக்கான கருத்துக்களையும் கொண்ட கட்டுரைகளைத் தாங்கி வருகின்றது. இக்கட்டுரைகள் ஆசிரியர் எதிர்நோக்கும் கல்வி சம்பந்தமான பிரச்சனைகளைத் துல்லியமாக எடுத்து விளக்குவதால் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் அனைவருக்கும் இது மேலதிக அறிவு வளத்தை வழங்கும் வகையில் அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது.

ஆசிரியர்களின் வாண்மை வளர வாழ்த்துகிறோம். இவ்வகையான சஞ்சிகைகள் ஆண்டு தோறும் மலர வேண்டுகிறோம்.

க. கந்தசாமி
கல்விப்பணிப்பாளர்

கல்வித் திணைக்களம்
வலயம் 2
இருபாலை
கோப்பாய்
10-04-95

செயற்திட்ட அதிகாரி வழங்கும்

# ஆசி



உலகின் கண் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரிடமும் யாதாயினும் ஒரு செயலைச் செய்து தமது குறிக்கோளை அடைய வேண்டுமென்ற ஆவல் காணப் படுவது இயற்கையே! ஓர் உயர்ந்த இலக்கை அடைய வேண்டுமென்ற எண்ண மும் ஆவலும் மட்டும் இருந்து விட்டால் போதாது' அதனை அடைவதற்கு எடுக் கப்படும் முயற்சிகள் பலப்படுத்தப்பட வேண்டும். ஒருவன் தன்னுடைய இலக் குகளை அடைவதற்கு முதலாவதாகவும் முக்கியமானதாகவும் காணப்பட வேண்டிய சிறப்பியல்பு முயற்சியாகும். அத்துடன் இலக்கைஅடைவதற்கு அவன் கொண்டுள்ள நாட்டம், ஆர்வம், தைரியம், நேர முகாமைத்துவம். சரியான மனப்பாங்கு ஆகியவையும் அவனது முயற்சிகளைப் பலப் படுத்துவதற்கு உதவுகின்றன.

அகில இலங்கை ரீதியில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பட்டப்பின் கல்வி டிப்புளோமா பயிற்சி நெறியினை நடத்துகின்ற தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித்துறை, தொழில்சார் பயிற்சியை விருத்தி செய்யும் நோக்குடன் இந்நெறியினைப் பின்பற்றும் ஆசிரியர்களது முயற்சிகளைப் பலப்படுத்த உறு துணையாக விளங்குகிறது என்று கூறினால் மிகையாகாது. 1993 / 94ம் ஆண்டுகளிற் பயின்ற ஆசிரிய மாணவர்கள் தமது இலக்கை ஓரளவிற்கு அடைந் துள்ளார்கள் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

எனது பிறந்த மண்ணாகிய யாழ் மாவட்டத்தில் நிறுவப்பட்டிருக்கும் எம் மத்திய நிலையங்களுள் ஒன்றான யா / இந்து மகளிர் கல்லூரியில், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்யும் 1993/94 ம் ஆண்டு மாணவர்கள் வெளியிடும் இச்சிறப்பு மலருக்கு எனது இதயங்கனிந்த நல்லாசிக ளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். இப்பயிற்சி நெறியினைத் திறம்பட நடாத்துகின்ற சிரேட்ட விரிவுரையாளர் திரு. தி. கமலநாதன் அவர்கள், அறிவுசால் விரிவுரையாளர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகிய யாவரும் பாராட்டுக்குரியவர்கள். மேலும், குறித்த நேரத்தில் மொடியூல்கள், அறிவுறுத்தல்கள் ஆகியவை கிடைக்கப்பெறாத நிலையிலும், பல இடர்பாடுகளின் மத்தியிலும் பயிற்சி வகுப்புகளில் ஒழுங்காகப் பங்கு பற்றி இரு வருட கல்வியாண்டுப் பயிற்சி நெறியை நிறைவு செய்யவிருக்கும் எமது ஆசிரிய மாணவர்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ஒருவன் குறித்த சந்தர்ப்பத்தில் சரியான சிந்தனையையும், சரியான தொழிற்பாட்டையும் மேற்கொள்வானேயானால் வாழ்க்கையில் அவன் புரியும் தொழிலிலும் வெற்றி காண்பது நிச்சயம். இதனை நம் ஆசிரிய மாணவர்கள் மனதிற் கொண்டு தமது தொழில்சார் தகமைக்குரிய அறிவு, திறன் மனப் பாங்குகளைச் சிறப்புற விருத்தியடையும் வகையிலே செயற்படுவார்களாக!

ஆசிரியர் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவனம்
மகரகம

திருமதி. திவ்வியராணி சிதம்பரநாதன்
செயற்றிட்ட அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தினது பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பாடநெறியினை [ 1994-1995 ] யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி நிலையத்தில் பயிலும் மாணவர்கள் வெளியிடவுள்ள '' ஆசிரியம் '' சஞ்சிகையின் முதலாவது மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மகரகம தேசிய கல்வி நிறுவகம் நடாத்தும் ஆசிரியக் கல்வித் திற விருத்திக்கான நாடளாவிய '' பட்டப்பின் கல்வி டிப்ளோமா '' பாட நெறிக்கான நிலையங்களுள் ஒன்றே யாழ் இந்து மகளிர் கல்லூரி நிலையமாகும்.

அக,புற நிலைகளில் பல்கலைக்கழகங்களில் பெற்ற நூற்கல்வியுடனேயே பட்டதாரி ஆசிரியர் பலர் சேவையில் இணைந்து பணியாற்றுகின்றனர்.

இவர்கள் தம் துறைசார்ந்த வாண்மையை விருத்தி செய்ய வேண்டியவர்களாயிருப்பினும், முழுநேர படிப்பு லீவில் பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பயிலும் வாய்ப்பற்ற பெருமளவினரான இத்தகைய ஆசிரியர்களின் தேவை சேவைக்காலப் பாடநெறியாக இதன் மூலம் நிறைவு செய்யப்படுகின்றது.

தனது செயற்பாடுகளில் துரித முன்னேற்றம் பெற்று சிறந்த பெறுபேறுகளைக் காட்டி வரும் இந் நிலையத்தின் போதனாசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள் அனைவரும் எமது பாராட்டிற்குரியவர்கள். இம் மாணாக்கர் தாம் பெற்ற வாண்மையை மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு பிரயோகித்து மகிழ வேண்டும் என்பதே என் அவா.

இந்நிலையம் தொடர்ந்தும் புலம் சார் சேவையைச் சிறப்புற ஆற்றவும் அதன் விளைவாக எமது ஆசிரியருலகு நற்பயனைப் பெற்றுச் சிறந்த ஆசான்களாக விளங்கவும் வாழ்த்துவதோடு '' ஆசிரியம் '' மலரின் வளர்ச்சிக்கும், நிலையத்தின் வளர்ச்சிக்கும் அருள இறைவனை இறைஞ்சுகிறேன்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம் - வலயம் 1
1995.02.15

செல்வி. தி. பெரியதம்பி
கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம் - வலயம். 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்திட்ட அதிகாரி வழங்கும் ஆசி



தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா யாழ் பிராந்திய நிலைய (இந்து மகளிர் கல்லூரி) மாணவர்களின் சஞ்சிகை வெளியீட்டிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியர்கள் வெறும் சற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு மட்டும் நின்று விடாது இவ்வாறான வெளிக்கள வேலைகளிலும் ஈடுபட்டு ஒரு நல்ல அனுபவத்தைப் பெற்று மாணவர்களுக்கும் பயனுள்ள விதத்தில் இவ் அனுபவத்தை பகிர்ந்தளிப்பதற்கு ஏற்ற பயிற்சியைப் பெறும் ஒரு முயற்சியாக இச் சஞ்சிகை வெளியீடு அமைய வேண்டும். நீங்கள் இக்கற்கை நெறியில் கற்கும் விடயங்களை வகுப்பறை மட்டத்திற்கு எடுத்துச் செல்வீர்கள் என்பதில் எமக்கு எவ்விதஐயப்பாடும் இல்லை ஆசிரியன் எனப்படுபவன் வாழ்நாள்முழுவதும் அவ்வப்போது அறிமுகப் படுத்தப்படும் நவீன கருத்துக்கள், நுட்ப முறைகள் பற்றி பரந்த அறிவைப் பெற விரும்பும் ஒரு நல்ல மாணவனாக திகழ வேண்டும். அப்போதுதான் ஆசிரியன் மாணவர்களின் அபிலாசைகளையும், சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றக் கூடிய ஆளுமை பொருந்தியவராக தன்னை மாற்றியமைக்க முடியும். இக்கருத்துக்களுக்கமைய நீங்களும் உங்கள் பணிகளை மிகத் திறம்பட மேற்கொள்ள வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்,

திரு. முத்துத்தம்பி தங்கவேல்
செயற்றிட்டதிகாரி

பட்டப்பின் ஆசிரியர்
கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் கல்விப் பணிப்பாளரின் ஆசி

எண்ணும் எழுத்தும் வண்ணமுற ஆசிரிய வாண்மை விருத்தியடைய வேண்டும். பயில் தொறும் நூல் நயம் என்பதற்கொப்ப பயிலுவதால் ஆசிரியன் பண்படவேண்டும். அப் பயன்பாடு மாணவ சமுதாயத்திற்கு அமுதமெனச் செறிய வேண்டும். அத்தகைய பெருநோக்கு முற்றி நல்முத்தென ஒளிர வித்தகத் துறையில் விழைந்து நின்று வினைபுரியும் நிலையப் பொறுப்பாளரை ஈண்டு நினைவு கூருகின்றேன். சிரேஸ்ட போதனாசிரியர் திரு தி. கமலநாதன் போன்ற கற்றறிந்த சான்றோர் தலைமைத்துவப்பணி சிறக்க, ஆசிரிய வாண்மை செழிக்க உருவாக்கப்பட்டதே பட்டபின் படிப்பு டிப்ளோமாப் பயிற்சி நெறியாகும். "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு" என்ற வள்ளுவப் பெருந்தகையின் இலக்கு இப் பயிற்சி நெறியால் எய்தப் பெறுகின்றது.

அற்றை நாட்களில் ஆசிரியர்கள் பல வருடக் கற்பித்தல் அனுபவத்தின் பின் போட்டிப்பரீட்சை என்ற இறுகிய நுழை வாயினூடாக டிப்ளோமாப் பயிற்சி நெறிக்குத் தயார் செய்ய வேண்டும். அந்தச் சுருங்கிய, வாய்ப்பற்ற நிலையினை மாற்ற எழுந்ததே இப்பயிற்சி நெறியாகும் இன்று பல்கலைக்கழகப் பட்ட அறிவு ஆறாத ஒரு நிலையில் ஊக்கத்தோடு கல்வி ஆக்கம் தேடும் ஆசிரியர் களை இந்த மண்ணிலே உலவ விடுவதைக் காணும் போது பேருவ கையடைகிறேன்.

ஆசிரியன், பாலகனாய்த் தூக்கிய நூற்கரம் செழுமையடைய நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், என்றும் அச் செந்நெறிப் பனுவல்களைத் தூக்க வேண்டும். தூக்கம் தொலைக்கும் பேராற்றற் பேராசானாக மாணவனின் தன் மதிப்பைப் பெறத் தன்னைத் தயாராக்க வேண்டும். அத்தகைய ஆயத்த நிலைக்கு அருப்பு கட்ட எழுந்து பணியாற்றும் பயிற்சி நிலையத்தைப் பாராட்டுகின்றேன்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் என்ற நிலையில் கால் கோள் செய்த திருப்பணியை, நிறைவெய்திய காலகட்டத்தை எண்ணிப் பார்க்கிறேன். கால வெள்ளத்தே அழியாது அளியாக மொய்க்கும் அறிவுத்தேன் பருகும் ஆசிரியர்களை அணைத்துக் கொள்வதாக. அணையா விளக்காய் நாற்றிசையும் புகழ் பரப்பி நல்ல தொண்டு ஆற்றுக. நும் புகழ் அறிவு குன்றிலிட்ட தீபமென ஒளி காலுக.

"பெருமைக்கும் எனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்"

இரா. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட விரிவுரையாளர்

**தி. கமலநாதன்** *M. A., Dip in Ed.*



# வழங்கும் ஆசி

*ஆசிரியர்கள்:*
*எதிர்காலச் சமூகத்தின்சிற்பிகள்*
*அதை*
*''ஒரு சமூகத்தின் தலைவிதி*
*ஆசிரியர்களால் தீர்மானிக்கப்படுகின்றது''*
*என்றும் கூறலாம்.*
*அந்த விதி*
*வலிமையானதாக,*
*ஏற்படப் போகின்ற மாற்றங்களை*
*உள்வாங்கக் கூடியதாக,*
*சமூக வளர்ச்சிக்கு வேண்டிய*
*சகல பரிமாணங்களையும்*
*உள்ளடக்கியதாக,*
*அமைய வேண்டுமானால்*
*ஆசிரியரிடம்,*
'ஆசிரியம்'
*ஆழமானதாகவிருத்தல் வேண்டும்*
*அந்த ஆழமாக்கும் செயற்பாடு*
*ஆசிரிய பயிற்சிகளால்*
*ஆற்றப்படலாம் என்பது*
*அறிஞர் கருத்து.*
*இதற்கு செயல் வடிவம் கொடுக்க*
*தேசிய கல்வி நிறுவகம்*
*ஆசிரிய பயிற்சியிலே*
*அக்கறை கொண்டு கருமமாற்றுவது,*
*யாம் அறிந்ததொன்றே.*
*ஆசிரியரொருவர் - ஆசிரியத்திற்குப்*
*பயிற்றப்பட்ட பின்னரே*
*வகுப்பறைக்குச் செல்ல வேண்டும் என்ற*
*குறிக்கோள் அடிப்படையில்*
*நிறுவகம் தனது செயற்பாட்டை*
*ஆற்றி வருகின்றது.*

*இந்த வரிசையிலே*
*தேசிய கல்வி நிறுவகத்தின்*
*யாழ் பிராந்திய நிலைய (08) மாணவர்கள்*
*தாங்கள் கற்றவற்றை,*
*தங்கள் உணர்வுகளை,*
*தாங்கள் ஆசிரியத்தில் பெற்ற*
*அனுபவங்களை,*
*தங்கள் வெளிப்பாடுகளை,*
*''ஆசிரியம்'' என்ற சஞ்சிகை மூலம்*
*வெளியிடுகின்றனர் - ஆசிரியர்களுக்கு*
*உரமேற்றுகின்றனர்.*
*அவர்கள் முயற்சி பாராட்டுதற்குரியது.*
*எழுதியவற்றையே*
*தமக்கேற்ப மாற்றி,*
*இலாபம் தேடும் இக் காலத்தில்*
*தமது உணர்வுகளை,*
*தமது சாதனைகளை,*
*எழுத்துருவில் அமைத்து விட*
*ஆசிரிய மாணவர்கள் எடுக்கும்*
*இம் முயற்சி வ வேற்கப்பட*
*வேண்டியது.*
*ஆசிரியம், வெளியிடும் ஆசிரியர்கள்*
*ஆசிரியத்தில் சிறந்திடவும் இந்த ஆசிரியம்*
*அந்த ஆசிரியத்துக்கு ஆக்க பூர்வ*
*பணியாற்றிடவும் எல்லாம் வல்ல*
*இறைவனை வேண்டுகின்றேன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ தலைவரின் இதயத்திலிருந்து...

எமது மாணவ அமைப்பின் பெருமுயற்சியின் பயனாய் "ஆசிரியம்" என்னும் சஞ்சிகை முதல் வெளியீடாக இன்று உங்கள் முன் வெளிவருகின்றது. தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி நெறியினைப் பயிலும் நாம் வெறுமனே வார இறுதி நாட்களில் காகங்கள்போல் ஒன்றுகூடி பின் கலைந்து விடுவதுமட்டுமல்லாமல் இது ஒரு ஆசிரிய திறன் விருத்தி நிறுவனம்! கல்வி அறிவூட்டுவது மட்டுமல்ல ஆக்கத்திறன் விருத்தியிலும் நாம் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதினை "ஆசிரியம்" இதழ் கல்வி உலகிற்கு எடுத்துக் காட்டும். அத்துடன் இது காலத்தின் பதிவாகவும் அமையும் எனக்கூறி, தொடர்ந்து எதிர்வரும் தலைமுறைகளாலும் இப்பணி தவறாது மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையுடன் "ஆசிரியம் இதழுக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

ஏ. சி. ஜோர்ஜ்
மா. அ. தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் உள்ளத்தில் இருந்து...

தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ். இந்து மகளிர் கல்லூரி நிலையத்தில் பட்டப் பின் கல்வி டிப்புளோமா கற்கை நெறியை பயிலும் இரண்டாம் வருட மாணவ அமைப்பு பல இடர்களுக்கு மத்தியில் "ஆசிரியம்" என்னும் இச் சஞ்சிகையை முதன் முதலாக வெளியிடுவதில் பெரும் உவகையடைகிறது. ஆசிரிய மாணவர்கள் தமது சுய ஆக்கங்களை வெளியிட ஒரு உந்து சக்தியாக இவ் விதழ் விளங்குகிறது. எதிர்வரும் காலங்களிலும் இது ஒரு தொடர்ச்சியான வெளியீடாகக் கல்விச் சமூகத்தில் அமைய வேண்டும் என்பது எமது பேரவா.

இன்று உலக நாடுகளில் எல்லாம் ஆசிரிய திறன் விருத்தியடைந்த பின்னர்தான் வகுப்பறைக்குள் நுழைய முடியும். ஆனால் எமது நாட்டில் பட்டதாரி ஒருவர் ஆசிரிய நியமனம் பெற்று குறைந்தது 10 ஆண்டுகளுக்குப் பின் அதுவும் போட்டிப் பரீட்சை என்ற ஒடுங்கிய நுழைவாயினூடாக கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு, பல்கலைக் கழகம் புகவேண்டிய அவலநிலை இருந்து வந்தது. இவ்விடர்ப்பாட்டைக் களையும் ஆபத் பாந்தவனாக இன்று தேசியக் கல்வி நிறுவகம் விசுவரூபமெடுத்துள்ளது. ஆசிரிய நியமனம் பெற்ற உடனேயே பகுதிநேரப் பயிற்சியாக கல்வி டிப்ளோமாவைப் பெற வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக தேசிய கல்வி நிறுவகத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விதழ் கருக்கட்டுவதற்கு வழிவகுத்து, தமது ஆசிச் செய்திகளையும் வழங்கிய தே. க. நிறுவக ஆசிரியர் கல்வித்துறை அதிகாரிகளுக்குப், எமது சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. தி. கமலநாதன் அவர்களுக்கும் எமது நன்றிகள். யாழ் மாவட்டத்திலிருந்து ஆசிச்செய்திகள் தந்து எம்மை ஊக்குவித்த கல்வி அதிகாரிகளையும் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

இக்கரு வளர்வதற்கு ஊட்டமான ஆலோசனைகள் வழங்கிய விரிவுரையாளர் திரு. கு. சண்முகநாதன் அவர்களுக்கும், கட்டுரைகள், மற்றும் உதவிகள் தந்த ஏனைய விரிவுரையாளர்களுக்கும், யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா அவர்களுக்கும் எமது நன்றிகள். இவ்விதழின் முன் அட்டைக்கான சின்னத்தை வரைந்து உதவிய எனது ஆசிரிய நண்பர் திரு. சிறிலோகநாதனுக்கும், எனது வேலைகளில் பாதியைப் பகிர்ந்து கொண்ட எமது மாணவ அமைப்பின் தலைவர் திரு, ஏ. சி. ஜோர்ஜ் அவர்களுக்கும், ஏனைய மலர்குழு உறுப்பினர்களுக்கும், கட்டுரைகள் எழுதி ஊக்குவித்த சகல ஆசிரிய மாணவர்களுக்கும், தாராள மனத்தோடு விளம்பரங்கள் மூலம் ஆதரவு தந்த நிறுவனங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இச்சஞ்சிகையை பூரணமாக்க சிறந்த முறையில் நிறைந்த ஆதரவுடன் படப்பிடிப்பைச் செய்து உதவிய "பேபி" படம்பிடிப்பாளருக்கும் நன்றிகள்.

ஈற்றில் எவ்வளவோ நெருக்கடியான வேலைப் பழுவின் மத்தியிலும், எமது வேண்டுகோளை ஏற்று, உரியகாலத்தில் மிகவும் சிறப்பாக இவ்விதழை அச்சிட்டு மலர உதவிய யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் நிர்வாகி, மேன் முறையாள், மற்றும் ஊழியர்களுக்கும் எமது மலர்க் குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெ. பிரான்சிஸ்
(ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Post Graduate Diploma in Education 1992/1993 (1st Batch

Mrs. R. Kularajah
, S. Pararajasingham
Miss T. Casinathan
Mrs. R Srikathirgamanathan
,, J. I. Gnanasegaram
Miss V. Velupillai
Mrs. Thenmoli Ramachandran
,, S. Theivendran
,, R. Krishnarajah
,, J. Kalatharan
,, I. B. Anandarajah
,, S. Tharmakulasingam
,, V Naguleswarathasan
,, P. Ahilaloganayagam
,, R. Thevaranee
,, Sarojinidevi Sathiyadevan
Miss Bavani Shanmuganathan
,, K. Nadarajah
Mr. R. Sarveswaran
,, S. Piranatarthikarasarma
,, V. Nadrajah
,, V. Vinasithamby
Miss S. Thavanayaki
,, S. Sinnathambe
Sr. Mary Thasnevis Ladislaus
Miss P. Subramaniam
,, P. Ramanathan
Mr. K. Sathasivamoorthy
Mrs. V. Sivakumaran
,, J. Varatharajan
,, R. Sivalingam
Mr. S. Uthayakumar
,, K. Arulananthan
,, K. Ragunathan
Mrs. N. Selvarajah
,, K. Nadarajah
Mr. K. Kugeswararajah
,, N. Thurairajasingam
,, K. Sabaratnam
,, R. Vasanthakumar
,, S. Nadarajah

Mr. T. Sathiyadevan
Mrs. K. Surendra
,, S. Paramalingam
Miss R. Vinnasithamby
,, T. Vinnasithamby
Mrs. N. Thababalan
,, P Selvanayagam
Miss S. Vanniasingam
Mrs. K. Suntharesan
Mr. S. Selvarajah
,, K. Kanapathy
,, A. Gunaratnam
Miss P. Theivanayaki
Mrs. P. Mangaleswaran
,, M. Ponnampalam
Miss Kalanithy Balasundram
Mr. S. Ponnampalam
,, P. Ahilaloganayagam
,, A. Eeswaranathan
Miss T. Sarosamalar
Mrs. K. Sivasithamparam
,, Eswary Jeyarajah
,, R. Sundarajah
,, M. M. A. Yogarajah
Mr. N. Balachandran
Mrs. K. Mahalingam
Mr. S. Tissnayagampillai
Mrs. R. Vivekanandan
,, Eswary Kudithamy
,, Rajani Gunathasan
,, S. Ratnarajah
Mr. V. Navaratnarajah
,, S. Thirunavukkarasu
Mrs. S. Yogarajah
,, K. Rathakrishnan
Mr. M. Kulasegaram
Miss V. Markandu
Mr. S. Sothilingam
Mrs. S. Thavarajah
,, V. Kulanthaivelu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The 1st Batch (1992/93) with their Supervisor and Lecturers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கங்கள் உள்ளே...


☐ அகலிக்கும் ஆசிரிய வாண்மை

ஆர். எஸ். நடராசா

☐ ஆசிரிய வாண்மையை விருத்தி செய்வதில் தே. க. நி. பங்கு

செல்வி. பவளம் அண்ணாமலை

☐ உளநிரற் கோலம் (SHEMA)

கலாநிதி சபா. ஜெயராஜா

☐ சமகாலத்தில் கல்வியும் சமயமும் திரு. கு. சண்முகநாதன் B.Ed.M.A.

☐ இலங்கையில் அளவு ரீதியான கல்வி வளர்ச்சியும்
தரமான கல்வி வளர்ச்சியும் திரு. ஏ. சி. ஜோர்ஜ்

☐ விழுமியக் கல்வியினை வழங்குவதில் பாடசாலை ஆசிரியரின் பங்கு

திரு. பெ. பிரான்சிஸ்

☐ கவிதை – வாண்மை என்பது

☐ ஆசிரியரிடத்தே காணப்பட வேண்டிய பண்புகள்

செல்வி. க. நடராரராஜா

☐ கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் துணைச் சாதனங்களைப்
பயன்படுத்துவதன் முக்கியத்துவம் திரு. வ. நடராசா

☐ அபிவிருத்திப் பாதையில் செய்முறைப் பாடசாலைகளின்
முக்கியத்துவம் திரு. தா. அமிர்தலிங்கம் M. A.

☐ அறிவு, திறன், மனப்பாங்கு. திருமதி. தெய்வநாயகம் கிருஷ்ணபிள்ளை

☐ "ஆசிரியன்" தமிழ் மரபில் திருமதி. கு. பசுபதீஸ்வரன்

☐ மாணவரின் ஆளுமையை வளர்ப்பதில் ஆசிரியரின் பங்கு

செல்வி யோகேஸ்வரி கந்தையா B.A. Dip. In Ed. M. A.

☐ மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் கல்வியின் பங்கு

பா. தனபாலன்

☐ பிஞ்சின் முறிவு (சிறுகதை) செல்வி தி. செம்மனச்செல்வி

☐ விரிந்த சிறகுகள் (சிறுகதை) திரு. செல்வபாலா

☐ சிறுவர் உளநலத்தின் சமூகப்பரிமாணங்கள்

செல்வி இ. சத்தியகலா

☐ செயலர் பேனாவிலிருந்து...

☐ சங்கீதாமிர்தம் திரு. இ. பரமேஸ்வரன்

☐ எங்கள் நெறி [Our Course]

☐ நன்றியுரை — செயலர் திரு. சி. சந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகலிக்கும் ஆசிரிய வாண்மை

ஆர். எஸ். நடராசா M.A. Dip. in Ed. SL.E.A S.
முன்னாள் அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை.

ஆசிரியத் தொழில் ஓர் உயர் தொழில் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை எனலாம். ஆனால் நடைமுறையில் இவ்வுயர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர் நடத்தைக் கோலங்களை ஆராய்ந்தால் கோட்பாட்டுக்கும் செயற்பாட்டுக்கும் இடையே காணப்படும் தொடர்பற்ற நிலை கவலை தருவதாயுள்ளது. அறிவாற்றலும் அர்ப்பணிப்பும் மிக்கவரே இவ்வுயர் தொழிலுக்கு அருகதையானவர். அவர்களே தம் உயர்தொழில் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ற நடத்தையினை மேற்கொண்டு சமூகத்தின் வழிகாட்டிகளாக வாக்கும் வாழ்வும் ஒன்றிக்கச் செயற்பட்டு சமூக ஒளியாகவும் தோணியாகவும் அரும்பணி ஆற்றக் காணலாம்.

பொதுவாக ஆசிரியர்களுக்கு நாகரீகமடைந்த சமூகங்களிலெல்லாம் மதிப்பிடம் இருந்து வந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் அதிகம் உள்ளன. "ஆசிரியர் எவ்வழி சமூகம் அவ்வழி" என்ற நிலை இருந்தது. தமது உயர் தொழில் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிய ஆசிரியர்கள் என்றும் வணக்கத்துக்குரியவராகப் பல பரம்பரைகளிலும் பாராட்டப்பட்டே வந்துள்ளனர். "அறிவுடையான் வழி அரசும் செல்லும்" என்னும் நிலையில் சென்ற இடமெல்லாம் சிறப்புப்பெற்று ஆசிரியர் வாழும் நிலை அற்றுப்போய்விடவில்லை.

விஞ்ஞான தொழில் நுட்ப அறிவும் சாதனைகளும் அதிகரிக்க அதிகரிக்க மனித வாழ்வின் சிக்கல்தன்மையும் அதிகரிக்கலாயிற்று. பெருகும் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வாழும் திறனைக் கல்வியே வழங்கவேண்டிய நிலை உருவானது. அறியாதவர்கள் அழியவேண்டியதால் "கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்" என்றாயிற்று. மக்கள் அறைகூவல்களுக்கு ஈடுகொடுத்து வாழும் திறனை விருத்திசெய்துகொள்ள ஊக்குவித்து உதவுவதே ஆசிரிய வாண்மையின் எதிர்பார்ப்பாயிற்று. தொடர்ந்து பெருகிவரும் வாழ்க்கைச் சிக்கல்களுக்கு உதவும் வகையில் ஆசிரியவாண்மையும் அகலமும் ஆழமும் உள்ளதாக வேண்டியது அவசியமானதே, இவ்வெண்ணக்கருவின் அடிப்படையிலேயே முன்னேற்ற முனைப்புள்ள வளர்ச்சியடைந்த நாடுகள் எல்லாம் "கல்வி ஆய்வுகூடங்களாகச் செயற்படும் நிலை" உருவானது. இக்கல்வி ஆய்வுகளின் பெறுபேறாக ஆசிரியவாண்மை புதுப்புதுப் பரிமாணம் பெறக் காணலாம். "எழுத்தறிவிப்பவன்" என்ற நிலையிலிருந்து கல்விச்சூழல் திட்ட வல்லுநராக, ஒழுங்கமைப்பாளராக, முகாமையாளராக, வழிகாட்டியாக, ஆலோசகராக, மாணவரின் "முழு" விருத்திக்கும் உதவும் "பொறுப்புள்ளவராக" ஆசிரியர் எதிர்பார்க்கப்படுகின்றார்.

இவ்வாசிரிய வாண்மை அகலிப்பினை எமது சமூகத்தின் இன்றைய பின்னணியில் நோக்கும்பொழுது மலைபோல் உயர்ந்து நம் மனக்கண்முன் தோன்றி நம் சிந்தனையைத் தூண்டுவதை சமூக உணர்வுள்ள எவரும் காணத் தவறமாட்டார். பற்பல துறைகளில் வேதனைதரும் அழிவுகள் சிதைவுகள் எமது மக்களில் உள, உடல், சமூக. பொருளாதார பண்பாட்டு ரீதியில் பாதிப்பை உண்டாக்கியுள்ளதைக் காணலாம். இந் நிலையிலிருந்து மக்களை மீட்டல் ஆசிரிய வாண்மையின் மிகப்பெரிய அறைகூவலாகக் கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் தாம் "செய்யும் தொழிலே தெய்வம்" என்னும் மனப்பாங்குடன் திரிகரண சுத்தியோடு சமூகப் புனரமைப்புப் போராட்டத் தளபதிகளாகச் செயற்படுவதன் மூலமே சமூக மறுமலர்ச்சி சாத்தியமாகும் என்பதை உணரவேண்டும்.

"ஆசிரியர்கள் பிறப்பதில்லை. அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்" என்னும் உண்மையினை உணர்வது அவசியம். தம்மால் நிறைவேற்றப்படவேண்டிய பணியின் பாரிய பரிமாணத்தினை உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மறுமலர்ச்சிக்கு அவசியமான அறிவு திறமை மனப்பாங்கினை ஆசிரிய பயிற்சிக் காலத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். பிறர்வாழத் தம் இன்னுயிரை ஈந்தவர்கள் படைத்த வீரவரலாற்றுப் பின்னணி பயிற்சி பெறும் ஆசிரியருக்கு உந்து சக்தியாய் அமையத்தக்கது. உண்மை நிலையை உணரும் உணர்ச்சியுள்ள ஆசிரியராய் ஓயாது உழைத்துப் பிற்படுத்தப்பட்ட எமது சமூகம் மீண்டும் உயிர்த்தெழ உறுதி பூண்பதே பொதுவான சமூக எதிர்பார்ப்பாயுள்ளது. எமது பிரதேசத்தை மீளக் கட்டி எழுப்பும் பணியில் ''வேலை அதிகம் ஆனால் உண்மை ஊழியரோ குறைவு'' என்ற இழிநிலை அகற்றப்பட வேண்டுமானால் ''அகவிக்கும் ஆசிரிய வாண்மை'' என்னும் எண்ணக்கரு தெளிவாக உணரப்படல்வேண்டும்.

இலவசக்கல்வி என்பதால் வறுமை கல்விக்குத் தடையாகக் கூடாது. கல்வியில் சமவாய்ப்பு, கல்வியில் பின்தாங்கி பிரதேசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. கல்வி வளங்களில் சம சந்தர்ப்பம் உண்டு அதனால் எல்லோருக்கும் கல்வி பெறும் வாய்ப்பு உள்ளது என்பதெல்லாம் கற்பனையே. ஆசிரியர் தமது காலத்துக்கேற்ற கடமைக் கூறினை உணராது அரசையும் அதிகாரிகளையும் குற்றம் சொல்லித் தப்பிக்கொள்ள முயற்சிப்பது பொறுப்புணர்வற்ற செயலன்றோ.

''வரலாறு, சமயம், அனுபவம் என்பன மனிதனின் முன்னே அறிவுப்புத்தகத்தினைத் திறந்து வைக்கின்றன. ஆனால் மனிதன் அதனை வாசிப்பதில்லை.'' என்பது எமது நிலைக்கு நன்கு பொருந்தும் பொன்மொழியாகும். இந்தியா சுதந்திரம் பெறுவதற்குக் காலாண்டுக்கு முன்பே மகாத்மா காந்தியடிகள் மனித சக்தியைத் திறமை உள்ளதாக்கத் தனது ஆதாரக் கல்வித் திட்டத்தினை ஆர்வத்தோடு அமுல்படுத்த முன்வந்தார். உலகம் வியக்கும் வேகத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் கண்ட ரூஷியா பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகம் வரை உற்பத்தி சார்ந்த தொழில் நுட்பத்தினைப் பொதுக் கல்வியோடு இணைத்து வியத்தகு வெற்றி கண்டது. தன்சானிய நாடு சுயவிருத்தித் திட்டங்களின் மூலம் நாட்டுக்குகந்த கல்வியை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டது. ''வேலை வெறி உள்ள படைப்பாளிகளை உருவாக்கும் கல்வி மூலம் யப்பான் உலகில் முதன்மை நாடானது. இக்கல்விக் கருமவரலாறு இன்று எமக்குப் போதிய தூண்டிகளாக அமைய வேண்டாமா?

ஆசிரியர்கள் தமது வேதன உயர்வினையும் வேறுபல சலுகைகளையும் பெறுவதில் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு அக்கறை காட்டுவதை விடுத்து தமக்குள்ள கடமையை உணர்ந்து விடிவை வேண்டிநிற்கும் எமது சமூகத்தைக் கட்டி எழுப்பும் கல்விப் பணிக்கே தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டியதை உணர வேண்டும். இன்றைய எமது கல்வித்தேவை மனித சக்தியைத் திறமை உள்ளதாக உருவாக்குவதோடு சமவிருத்தி ஆளுமை உடையவராக மக்களை உருவாக்க வேண்டியதாகும். அறிவும் ஆவல் உள்ள ''கற்கும் சமூகத்தை'' உருவாக்குவதே முக்கியமாகும். மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் பண்பும் பணித்திறனுமுள்ளவராக மக்கள் விருத்தியுற ஆசிரியர் நெறிப்படுத்த வேண்டும். பாடச் செயற்பாடுகள், பாட இணைச் செயற்பாடுகள் என்பன வகுப்பறை, பாடசாலை, சமூகம் ஆகிய மூன்று சூழல்களிலும் ஆசிரியர் கல்விச் சூழலை உருவாக்கித் தம் வாக்கும் வாழ்வும் ஒன்றித்த உதாரண வாழ்வுமூலம் கலங்கரை விளக்காய்த் திகழலாம்.

ஆசிரிய உயர்தொழில் ஒரு முழுநேரப் பணி, அப்பணி தாக்கமான பயன் தர வேண்டுமானால் ஒவ்வொரு ஆசிரியரும் தன்னலமறுப்பு, அறிவுக் கூர்மை, நீதி உணர்வு, சகிப்புத்தன்மை, அடக்கம், ஈடுபாடு என்னும் விழுமியங்களை உறுதியாகப் பற்றிச் சமூக முன்னேற்றமே கல்விப் பணியின் இறுதி நோக்கமாகக் கொண்டு தாமின்புறுவது உலகின்புறக் கண்டு உவக்கும் நிலையினை உருவாக்கிக்கொள்வது அவசியமாகும். ஆசிரிய பயிற்சியின் கல்விக் கருமத்தொடரினை அகலிக்கும் ஆசிரிய வாண்மையினை உத்தேசித்து அமைத்துக்கொள்வதன் மூலமே நம் சமூகப் புனர்வாழ்வுக்கு நம்மால் அரும்பணி ஆற்றி இன்புறும் நிலை உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சாயிராம்

# ஆசிரிய வாண்மையை விருத்தி செய்வதில் தேசிய கல்வி நிறுவகத்தின் பங்கு:

செல்வி. பவளம் அண்ணாமலை
இரண்டாம் வருட மாணவி,
யா / சென் அன்ரனீஸ் றோ. க. ம.

ஆசிரிய வாண்மையின் முன்னெடுப்பு, தொடர்ந்து செல்லும் 'கல்விக்கான வாய்ப்பினோடும், வளங்களோடும் ஒன்றிணைந்தது. ஆசிரியர் கல்வியை வளம்படுத்துதல் கல்விச்செயல் முறையின் மேம்பாட்டுக்குரிய அடிப்படையான இயக்கக் கூறு. ஆசிரியர்களுக்கான கல்வி வாய்ப்புக்களும் அவற்றிலே பங்குபற்றலும் அதிகரிக்க, கல்வித்தரம் நேரடியாகவும் மறைமுகமாகவும் மௌனமாகவும் உயர்ந்துகொண்டு செல்கிறது. ஆசிரிய கல்விக்குப் பொறுப்பான முகவருள் தேசியகல்வி நிறுவனம் இன்று முக்கிய பங்கை வகிக்கின்றது.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 1985 இன் 25-ம் இலக்கச் சட்ட மூலத்தின் மூலம் தேசிய கல்வி நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆசிரிய வாண்மையை விருத்தி செய்வதில் இந்நிறுவகத்தின் பங்கு அளப்பரியது.

தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியர்களிடத்தே தொழில்சார் அபிவிருத்தியை ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டது. பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை நடாத்துகின்றது. ஆசிரியர் கல்விதொடர்பான ஆராய்ச்சி கருமங்களில் ஈடுபடுகின்றது. கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், ஆலோசகர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்காக கல்விப்பட்டப் பாடநெறியொன்றினை அமுல்படுத்தியுள்ளது. ஆசிரியர் கல்வியியலாளர்களின் தொழில்சார் அபிவிருத்திக்குரிய கருத்தரங்குகளையும், செயலமர்வுகளையும் ஒழுங்கமைத்துக் கொடுக்கிறது. ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் கலைத்திட்டங்களைப் பதிப்புச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. ஆசிரியர் கல்வி தொடர்பான சஞ்சிகைகளையும் புதினத் தாள்களையும் வெளியிடுகின்றது. ஆசிரியர் கல்வியாளர்களின் தொழில்சார் அபிவிருத்திக்காக மேலதிக வாசிப்புக்கான பொருள்களை விநியோகிப்பதும் ஆசிரியர் கல்வி தொடர்பான புத்தறிவைப் பெற்றுக்கொடுக்கிறது. ஆசிரியர் கல்வி தொடர்பான புத்தறிவைப் பெற்றுக் கொடுக்கிறது. ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் ஆலோசனைச் சேவைகளை வழங்குகிறது.

கல்வி அமைச்சின் கீழ் உள்ள பயிற்றப்படாத ஆசிரியர்கள், ஆசிரியப் பயிலுனர்கள் ஆகியோருக்காக தொலைக் கல்விச் சேவை முறையிலான தொழில்சார் விருத்திவேலைத் திட்டங்களை அமுல்படுத்துகிறது. இரண்டு வருடப் பாடநெறியாக விவசாயம், மனையியல் அழகியல் கல்வியும், மூன்றுவருடப் பாடநெறியாக ஆரம்பக் கல்வி, விஞ்ஞான கணிதம், ஆங்கிலம் ஆகியனவற்றை இந் நிறுவகம் அமுல்படுத்துகின்றது.

புதிய ஆசிரிய பயிலுனர்கள் 25,000 பேருக்கும் அதன் பின்னர் ஆட்சேர்ப்பிக்கப்பட்ட பயிலுனர்களுக்கும் தொலைக்கல்வி முறையின் கீழ் பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் 1991 தை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், விசேட கல்வித்துறை, ஆரம்ப கல்வித் துறை ஆங்கிலக்கல்வித்துறை அழகியல் கல்வித்துறை, மொழிகள், சமயங்கள், சமூகக் கல்வித்துறை, உயர்கலைப்பிரிவு, விஞ்ஞான கணிதந்துறை, ஆங்கிலப்பிரிவு செயல் திட்டம் 2, மதிப்பீட்டுத்துறை, தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை, ஆராய்ச்சிப் பிரிவு, வெளியீட்டு செய்திட்டம் போன்ற பல துறைகளிலும் தேசிய கல்வி நிறுவகம் தனது செயல்திட்டங்களை, ஆக்கப்பணிகளை பன்முகப்படுத்தி ஆசிரியவாண்மையை விருத்தி செய்ய அரும்பாடுபட்டு வருகின்றது.

முதலாம் நிலை, இரண்டாம் நிலை ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி, பட்டப் பின் கல்வி டிப்ளோமா பயிற்சி, நெறி, மூன்றாண்டுகுரிய பகுதி நேர கல்விமாணி நெறி முதலிய வற்றைத் தேசிய கல்வி நிறுவகம் ஒழுங்கமைத்து வருகின்றது.

ஆசிரியர் தாமாகவே தமது வாண்மையை விருத்தி செய்யவும், செயற்படக் கூடிய ஒரு வடிவம் (Modules) தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சிறு நூல்களும், வழிகாட்டிகளும் தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்படுகின்றன. இவை யாவும் ஆசிரிய வாண்மையை விருத்தி செய்ய நிறுவகம் தமது பங்களிப்பை செய்து வருகிறது.

இன்றைய உலக கல்வி இயக்கங்கள், ஆசிரிய வாண்மை மேம்பாட்டிலே முனைப்பட, செயற்படத் தொடங்கியுள்ளன. ஆசிரியர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதன் வாயிலாக மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்த முடியும் என்பது இலகுவான உபாயமாக கருதப்படுகின்றது,

இலங்கையில் மிகப் பெரிய அளவிற் காணப்படும் அரச ஊழியர்கள் ஆசிரியர்களாவர். கல்விக்குரிய நிதியில் எண்பது விழுக்காட்டுக்கும் கூடுதலான தொகை ஆசிரியர்களின் ஊதியமாக வழங்கப்படுகின்றது, ஆசிரியரைப் பற்றிய மாணவரின் புலக்காட்சியே கற்றலுக்கு அடித்தளமாகின்றது. கடந்த காலங்களில் ஆசிரியர் தகைமைகள் நியமனங்கள் தொடர்பான உறுதி வாய்ந்த நடைமுறைகள் அரசாங்கத்தினால் பின் பற்றப்படாமையினால் ஆசிரியர் தொடர்பான புலக்காட்சி பாதிக்கப் பட்டுள்ளது.

இந் நிலையில் ஆசிரியர் தொடர்பான புலக் காட்சியை மேம்படுத்துவதற்குரிய உபாயங்களுள் ஆசிரியர் கல்வி விரிவாக்கலும், உயர் கல்வியை நோக்கிய அசை வியக்கத்தைத் தூண்டுதலும் முன்னுரிமை பெறுகின்றன. வினைத்திறன் மிக்க ஆசிரியச் சேவையின் உருவாக்கம் எமது நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆசிரியர்கள் பணியில் இருந்து கொண்டேபடித்து உயர்வதற்கான வாய்ப்புக்கள் விரிவடைந்து வருகின்றன. ஆசிரியர்களின் திறன்கள் மேம்பாடு அடைகின்றன, 70% முதல் 80% வரையிலான ஆசிரியர்கள் பொறுப்புணர்சியுடனும் செயலாற்றுபவர்களாகவும், பல சிரமங்களுக்கு மத்தியிற் பாடசாலைக்குச் சமூகமளிப்பவர்களாகவும் தமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை தம்மால் முடிந்தளவுக்கு நிறைவேற்றுபவர்களாகவும் உள்ளனர்,

ஆசிரியர் நிமிர்ந்து எழும்போதுதான் சமூகமும் நிமிர்ந்து எழும், எனவேதான் சிறந்த ஒரு மாணவ சமூகத்தை உருவாக்க ஆசிரியர்களின் வாண்மையை விருத்தி செய்வதில் தேசிய கல்வி நிறுவகம் அயராது முயற்சித்து வருகின்றது. இந் நிறுவகத்தின் தன்னலமில்லாத சேவையால் இன்று பட்டப் பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி யாழ் நகரில் கொடி கட்டிப் பறக்கிறது என்றால் மிகையில்லை.

சிறந்த விரிவுரையாளர்களின் கற்பித்தல் முறை, கட்டுப்பாடான நிர்வாக ஒழுங்குமுறை, நற்பண்பு மிக்க ஆசிரியர் குழாமும் தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப் பின் டிப்ளோமா பயிற்சி நெறியில் காணப்படும் சிறப்பம்சங்கள்.

இது வரை காலமும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறியை பல்கலைக் கழகங்களே தமது ஏகபோக உரிமையாக்கி வந்தன. அங்கே தெரிவு செய்யப்படாத ஆசிரிய மாணவரின் வாண்மையை விருத்தி செய்ய இந்த தேசிய கல்வி நிறுவகம் கை கொடுத்து உதவியது.

யாழ்ப்பாணத்தில் பட்டப் பின் டிப்ளோமா கற்கை நெறி தனது மூன்றாம் ஆண்டை நிறைவு செய்கின்றது. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி மாணவர் டிப்ளோமா பயிற்சியை முடித்து வெளியேற அடுத்த தொகை ஆசிரிய மாணவர்கள் தொடர்ந்து இப்பயிற்சி நெறியில் நம்பிக்கை கொண்டு பயின்று வருவது மகிழ்ச்சிக்குரிய செயற்பாடாகும்.

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி தனது கால்களை ஆழமாகவும், உறுதியாகவும், ஊன்றி நிற்பதை பார்க்க மனதுக்கு மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. ஆசிரிய வாண்மையை விருத்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்தி வரும் இந்நிறுவகம் இன்னும் பல பயிற்சி நெறிகளை அறிமுகப்படுத்தி உள்ளது.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியினால் ஆசிரிய வாண்மை விருத்தி உற்று செழித்து வளர்வதை எம்போன்ற ஆசிரியர்களால் உணர முடிகிறது. பாடசாலை செல்லும் அனைத்து ஆசிரியர்களும் கற்பித்தல் பயிற்சி பெற்றே வகுப்பறைக்குள் நுழைய வேண்டும் என்ற புதிய கல்வி நடைமுறைக்கு அமைவாகவே பட்டதாரி ஆசிரியர்களையும் பயிற்றுவிக்க எண்ணம் கொண்டு இந்த தேசிய கல்வி நிறுவகம் தனது அயராத முயற்சியால் ஆசிரியரின் வாண்மையை விருத்தி உற செய்வதில் முன்னணி வகித்து வருகின்றது.

கற்பித்தல் பயிற்சி முறை, முகாமைத்துவம், கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும், மொழித்திறன், சமூகவியல், உளவியல். தத்துவம், கல்வி வரலாறு போன்ற முக்கிய விடயங்களை ஆசிரியர்களுக்கு போதிப்பதால் அல்லது பயிற்சி செய்வதால் ஆசிரியர் வாண்மை மேலும் விருத்தியுற தேசிய கல்வி நிறுவகம் துணை புரிகின்றது.

மாணவர் உள்ளங்களை புரிந்து அதற்கமைய கற்பிக்க ஆசிரியருக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது. குழுமுறை பயிற்சியால் நிறைந்த பயனை ஆசிரியர்கள் தமது பயிற்சி நெறியில் அடைகின்றனர். இங்கு செய்திட்ட முறைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, இது ஆசிரிய வாண்மையை மேலும் உயர்த்த, வழிவகுக்கின்றது, இந்த வகையில் தேசிய கல்வி நிறுவகம் பல பயிற்சி முறைகள் மூலம் ஆசிரிய வாண்மை விருத்தி செய்கின்றது.

தேசிய கல்வி நிறுவகம் சமகாலத் தேவைகளுக்கு இயைய புதுப்பிரிவுகளையும் செய்திட்டங்களையும் ஆரம்பிக்கும், அல்லது மீளமைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. தற்போது தமிழ் மொழி பிரிவொன்றினை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றது,

ஆசிரியர் கல்வி தொடர்பான புதுத் தொழில் நுட்ப அறிவை செயலமர்வுகள், கருத்தரங்குகள் என்பவற்றின் ஊடாக வழங்குதல், ஆங்கில ஆசிரியர் கல்வி தொடர்பான தற்கால சமகால அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிராந்திய மட்டத்திலான செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துதல் பாடசாலை ஆசிரியர்கள் ஒவ்வொரு வருடமும் தமது மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்வது தொடர்பான அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொடுப்பதற்கான வழி வகைகளை மேற்கொள்கிறது, இந் நிறுவகம், விசேட கல்வி தொடர்பான கல்வியியல் பட்டப்பாட நெறியொன்றினை ஒழுங்கமைக்கிறது.

மேற் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் தேசிய கல்வி நிறுவகம் ஆசிரிய வாண்மையை விருத்தி செய்வதில் அதனுடைய பங்களிப்புக்களை ஆராய்ந்தோம், இத்தகைய சிறப்பான செயல் திட்டங்களைக் கொண்டே முழுமையான கல்வியியலில் ஆசிரியரின் வாண்மை விருத்திக்கு உன்னதமான உயர்வையும் முன்னேற்றத்தையும் கொடுக்க வல்லது இந் நிறுவக செயல்பாடாகும்.

எனவே தான் 20 நூற்றாண்டில் நாட்டில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் ஏதோ ஒரு வகையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவே ஆக்கம் பெறுவர், ஆசிரியர்களின் வாண்மை விருத்தி உறவும் சமூகம் பயன் பெறவும் பூரணத்துவமான மாணவ சமூகத்தை உருவாக்க வாண்மை நிறைந்த ஆசிரியர் குழாம் உருவாக (இந் நிறுவகம்) தேசிய கல்வி நிறுவகம் மேலும் மேலும் உழைத்து சிறப்படையும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநிரற் கோலம் (SEHEMATA)

கலாநிதி சபா. ஜெயராசா
முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

அறிகை உளவியலில் ஆழ்ந்து ஆராயப்படும் ஒரு புலமாக '' உளநிரற் கோலம் '' அமைகின்றது. கற்றல், அறிவை உள்வாங்கிக்கொள்ளல், துலங்குதல், என்ற செயற்பாடுகள் உளநிரற் கோலத்துடன் இணைந்தவை. புலக்காட்சி கொள்ளல், சிந்தித்தல், நடத்தைகளை வெளிப்படுத்தல் முதலியவற்றின் பொருட்டு வகுத்து ஒழுங்கமைக்கப்பட்ட வடிவமே உளநிரற் கோலம் என்பது வேர்ணனின் கருத்து. உயிர்ப்பும் நெகிழ்ச்சியும் கொண்டதே உளநிரற் கோலம் என்பது வோல் ரேஸ் வழங்கிய முன்மொழிவு. நவீன உளவியல் இத்துறையில் மேலும் விரிவான கண்ணோட்டங்களைச் செலுத்துகின்றது.

மூளைக்குரிய தகவல்கள் புலன் உறுப்புக்கள் வழியாக உள்ளீடு செய்யப்படுகின்றன. வாழ்க்கை மேம்பாட்டுக்கும், வினைத்திறன் வளத்துக்கும் தகவலை உள் வாங்குதலும் மூளையிலே திரட்டி வைத்தலும் துணை செய்கின்றன. சில தகவல்கள் உடனடிப்பயன் தருபவை, சில நிலைத்து நின்று தொடர் செயற்பாடுகளுக்கு உதவி செய்பவை. இவை தொடர்ந்து இயக்கமுறும் நிலையில் சமாந்தரமாக, நிலைமாற்றமும் (Transformation) ஏற்படுகின்றது. நிலைமாற்றமே கற்றலின் உன்னதமான செயல்முறையாகக் கருதப்படுகின்றது.

மூளையானது தன்னியக்கமான தகவல்களை மேற்கொள்வதற்கு, இயக்க நிலையில் உள்ள உளநிரற் கோலம் துணைசெய்கின்றது, வேறுபட்ட, ஆனால் தொடர்புடைய அனுபவங்களை உளநிரற் கோலம் ஒன்றிணைக்கின்றது. குழந்தை பால் பருகும் செயற்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு உளநிரற் கோலத்தின் பண்பு எளிமையான முறையிலே விளக்கப்படும். புட்டியிற் பருகுதல், கரண்டியிற் பருகுதல், குவளையிற் பருகுதல் என்றவாறு வேறுபட்ட பருகும் முறைகள் உளநிரற் கோலத்தால் ஒன்றிணைக்கப்பட்டு '' பருகும் '' செயற்பாடு தன்னியக்கமான முறையிலும், போதுமான வகையிலும் தழுவிக்கொள்ளப்படுகின்றது. வேறுபட்ட, ஆனால் தொடர்புடைய பண்புகள் இங்கு ஒன்றிணைக்கப்படுகின்றன.

'' உடலியக்க உளநிரற் கோலம் ''. '' அறிகை உளநிரற் கோலம் '' என்ற இரண்டு கோலங்கள் ஆழ்ந்து நோக்குவதற்குரியவை. மேற்குறித்த பால் பருகும் உடலியக்கச் செயல்முறையோடு இணைந்த ஒன்றிணைக்கப்பட்ட அசைவுகளின் முழுமை '' உடலியக்க உளநிரற் கோல '' த்தோடு தொடர்புடையது.

உயர்நிலையான சிந்தனைத் தொழிற்பாடுகளுடன் இணைந்ததே அறிகை உளநிரற் கோலம். தொடர்புடைய எண்ணக்கருக்களை இணைத்து பிரச்சினைகளுக்கும் உளச் சவால்களுக்கும் தீர்வு காண முற்படும் உளத்தழுவற் செயற்பாடு அறிகை உளநிரற் கோலத்துடன் தொடர்பு கொண்டது. முன்னைய கற்றல் அனுபவங்களின் திரண்டெழுந்த வடிவமாக அமையும் அறிகை உளநிரற் கோலம் பின்னைய கற்றலுக்குரிய தளமாகவும் 'உசாத்துணை' யாகவும் அமைகின்றது. உளநிரற் கோலத்தின் இயல்பான தழுவலுடன் நிகழும் கற்றல், பொருளுடைக் கற்றலாக ( Meaningful learning ) அமையும்.

புதிய கற்றற் பிரச்சினை ஒன்று எதிர்கொள்ளப்படும் பொழுது, பழைய அனுபவங்களில் இருந்து முகிழ்த்த உளநிரற் கோலத்தின்முன் அது வைக்கப்படுகின்றது. புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றற் பிரச்சினையைக் கையாள்வதற்கு அந்த நிரற் கோலம் போதுமானதாக இருப்பின் அது "நிரம்பிய உளநிரற் கோலம்" என்று குறிப்பிடப்படும். புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உளநிரற் கோலம் போதுமானதாக இல்லாவிடின் அது "குறைநிலை உளநிரற் கோலம்" என்று விளக்கப்படும். இந்நிலையில் உளநிரற் கோலம் மீள் வடிவமைக்கப்படவேண்டியுள்ளது. கற்றல் உளநிரற் கோல உன்னதங்களை நோக்கிய மீள்வடிவமைப்பை மேற்கொள்கின்றது.

உளநிரற் கோலம் எவ்வாறு மேம்பாடு அடைகின்றது என்பதை விளக்க வந்த பியாசே இரண்டு முக்கியமான உளப்பணிகளைக் குறிப்பிடுகின்றார். அவையாவன;

(அ) தன்மயமாக்கல்

(ஆ) தன்னமைவாக்கல்

உளநிரலமைப்பை மாற்றாது கற்றலை உள்வாங்கும்செயல்முறை 'தன்மயமாக்கல்' என்று குறிப்பிடப்படும். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உளநிரலமைப்புப் போதுமானதாக இலாதவிடத்து உளநிரலமைப்பை மீள்வடிவமைக்கும் செயல்முறை "தன் அமைவாக்கல்" என்று விளக்கப்படும். தனது அனுபவம் பொருத்தமான விளைவையோ சரியான முடிவையோ தரமாட்டாது என்று கருதும் பட்சத்தில் உளநிரலமைப்பை மீள் வடிவமைக்க வேண்டியுள்ளது.

காட்சி வடிவான செயல்முறை அனுபவங்களிலிருந்து சிந்தனை வளர்கின்றது. சமூக ஊடாட்டங்கள் அனுபவங்களுக்கு மொழிவடிவம் கொடுக்கின்றன. செயலும் சிந்தனையும் இடைவினை கொள்ளுகின்றன, எண்ணக்கரு ஆக்கத்திற்கும் மேம்பாட்டுக்கும் மொழி துணைசெய்கின்றது. உளநிரற் கோலம் மொழியாலும், எண்ணக்கருக்களினாலும் வளம்படுத்தப்படுகின்றது. மொழி என்பது "பிரதிநிதித்துவப் படுத்தும்" செயலை மேற்கொள்ளுகின்றது. பிரதிநிதித்துவப்படுத்தல் மூன்று வழிகளில் நிகழ்கின்றதென்பது புறூனரின் கருத்து. அவையாவன:

(அ) உடலியக்கவழிப் பிரதிநிதித்துவம் (Enactive representation)

(ஆ) படிமவழிப் பிரதிநிதித்துவம் (Iconic representation)

(இ) மொழிவழிப் பிரதிநித்துவம் அல்லது குறியீட்டுவழிப் பிரதிநிதித்துவம் (Symbolic repesentation)

மேற்கூறிய பிரதிநிதித்துவப்படுத்தல் நடவடிக்கைகள் உளநிரற்கோலத்தை ஆக்குவதற்கும் வளர்ப்பதற்கும் பயன்படுகின்றன. உளநிரற்கோலத்தின் அடிப்படையிலேதான் மேற்கூறிய உளச்செயற்பாடுகளும் இயக்கப்படுகின்றன. இந்நிலையில் ஆக்கும் பொருளாகவும், ஆக்கப்படும் பொருளாகவும் அது அமைகின்றது.

அறிகைசார் உளநிரற் கோலவிருத்தி ஐந்து படிநிலைகளைக் கொண்டது என்பது கல்பிறின் என்பவரது ஆய்வுகளின் முடிபு. அவையாவன;

(1) செயற்பணி பற்றிய முன் ஆரம்ப உணர்வினை ஏற்படுத்தல்.
(2) செயலுக்குரிய பொருள்களைக் கையாளும் ஆற்றல் பெறல்.
(3) செயலைப் பேச்சு மொழிக்குக் கொண்டுவரும் ஆற்றல் பெறல்.
(4) செயலை உளத்தளத்துக்கு (Mental Plane) இடம்மாற்றுதல்.
(5) குறித்த உளச்செயலைப் பாதுகாத்தல்.

இவற்றிலிருந்து உளநிரற் கோலம் தொடர்ச்சியான ஒன்றிணைந்த செயல் முறைகளின் வழியாகவே உருவாகின்றது என்பது தெளிவு.

எண்ணக்கரு கற்றல் உளநிரற் கோல ஆக்கத்திற்குத் துணைசெய்கின்றது. எண்ணக்கரு ஆக்கத்தோடு இணையாத கற்பித்தல் பின்னடைவை ஏற்படுத்தும் கற்பித்தலாகின்றது. நேரடியான புலன் அனுபவங்களைக் கொண்டே பாடசாலை மாணவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கருவாக்கத்தினை வளம்படுத்த வேண்டியுள்ளது, நேர் எடுத்துக்காட்டுக்களையும், எதிர் எடுத்துக்காட்டுக்களையும் காட்டுவதன்வாயிலாக எண்ணக்கரு கற்றலை வளம்படுத்த முடியும் என்பது பிரௌஸ்னர் முன்வைத்த கருத்து.

எண்ணக்கருக்களைக் கற்பிப்பதற்கான பட்டியல் முறை ஒன்றும் ( Stoc ) உளவியலாளரால் முன்வைக்கப்பட்டது.

உளநிரற் கோலத்தை உருவாக்குதலே கற்பித்தலின் பிரதான செயலாக்க மாகக் கொள்ளவேண்டியுள்ளது. புலக் காட்சி கொள்ளல், தகவல்களை ஒழுங்கமைத்தல் உளநிரற் கோலத்தைத் தொடர்ந்து விரிவாக்குதல் என்ற செயல்முறைகளில் மீளவலியுறுத்திகளைப் பயன்படுத்தலும் பின்னூட்டிகளைப் பயன்படுத்தலும் சிறப்பிடம் பெறுகின்றன.

உளநிரற் கோலம் பின்வரும் ஒழுங்கமைப்புக்களைக் கொண்டதாக அமையும்.

(1) நெடுங்கோட்டு ஒழுங்கமைப்பு:

ஓரளவு பொதுவான உள்ளடக்கத்தை அல்லது உருவமைப்பைத் தொடர்புபடுத்தி நிற்றல் நெடுங்கோட்டு ஒழுங்கமைப்பு எனப்படும்.

(2) கிளைவிடும் ஒழுங்கமைப்பு:

பொதுவான ஒரு மூலகத்திலிருந்து கிளைவிட்டு நேரான அல்லது எதிரான பெறுமானங்களுடன் விரிவடைந்து செல்லல் கிளைவிடும் ஒழுங்கமைப்பு எனப்படும்.

(3) பன்முக ஒழுங்கமைப்பு:

பல்வேறு கோணங்களிலும் தளங்களிலும் கருத்துக்களை ஒழுங்குபடுத்தும் நிலையை இது குறிப்பிடும்.

(4) சிக்கல் ஒழுங்கமைப்பு:

உளநிரற்கோலத்தின் உன்னத நிலையாக இது கருதப்படும். புதியவற்றை வடிவமைத்தல், உயர்நிலையான பிரச்சினைகளை விடுவிப்பதற்கான ஆற்றல் முதலியவற்றை இது உள்ளடக்கி நிற்கும்.

உளநிரற் கோலம் என்பது கற்றலை நெறிகை (Monitoring) செய்யும் இயல்பையும் கொண்டது. ஒருவர் தன்னைத் தானே இயக்கிக் கொள்வதற்குரிய ஆற்றலை இது வழங்குகின்றது.

உளநிரற்கோலத்தை ஆக்குவதற்கும் வளப்படுத்துவதற்குமான கற்பித்தல் "வலுநிலைக் கற்பித்தல்" என்று குறிப்பிடப்படும். அறிவு ஒரு நிலையிலும், அறிவை உள்வாங்கும் மாணவர் எதிர் நிலையிலும் உள்ளனர் என்ற 'துருவப்படும்' அணுகுமுறையினைத் தற்கால உளவியல் நிலைப்பட்ட கற்பித்தலியல் (Psychopedagogy) நிரகாரித்து விடுகின்றது. கற்கும் சூழலை ஒழுங்குற அமைக்கும் திறனில் மாணவரும் அறிவும் சங்கமித்து நிற்கும் நிலை தோன்றுவதுடன் வலுநிலைக் கற்பித்தல் உறுதி பெறுகின்றது. வலுநிலைக் கற்பித்தலின் வழியாக 'அறிகைச் சிக்கல் அமைப்பாக்கம்' (Cogno – Complex formation) உருவாக்கப்படுகின்றது.


1. M. L. J. Abercrombie, **The Anatomy of Judgement**, Penguin Books. Middlesex, 1969.
2. EdgarStones **Psychology of Education**, Methuen, London, 1979
3. J. Turner, **Cognitive developmenl and Education**, Methuen, London, 1984.
4. Melvin H. Marx, **Systems and Theories in Psychology**, Mc Craw Hilt BookCompany, London, 1988.
5. D. W. Hamlyn, **Perception Learning and Self**, Routledge & Kegan Panl, London, 1982.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் கல்வியும் சமயமும்

திரு. கு. சண்முகநாதன் B. Ed. M. A.
விரிவுரையாளர்

மனிதனை நாகரிகமடையச் செய்வதே கல்வியின் தலையாய பணி. உண்மை, அன்பு, அமைதி, கருணை போன்ற மனிதக்குணங் களை விருத்தி செய்வதே கல்வி, கல்வி என்பது மனிதனின் அடிப்படைத் தேவை களில் தன்னிறைவு காண்பதற்கான உழைப் புத்திறனை விருத்தி செய்வதுடன், மனிதா பிமானத்தையும் இணைத்து மனிதனை உருவாக்குவது ,அதன் இலக்கு என்று இன்று உணரப்படுகிறது.

மனிதன் மனிதத்தன்மையையும், மனி தனை மதிக்கும் தன்மையையும் பெற வேண்டும். மனிதர்களிடத்தே காணப்படும் நமைச்சல் நீங்கவேண்டும். ஒருவன் இன் னொரு மனிதன் உரிமைகளில் குறுக்கீடு செய்வதும் இன்னொரு மனிதனை அடக்கி ஆளநினைப்பதும் நீங்கவேண்டும். இத்தகைய மேம்பாடுடைய மனிதர்களை உருவாக்குவ தன் மூலம் தேசவிருத்தி, உலக அமைதி என்பவற்றைக் காணுதல்வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றுவருகிறது. மனிதனின் யதார்த்த நிலை இதுதான். மனிதன் தனது யதார்த்த நிலையை அறியாதவனாயிருக் கிறான். மனிதனது யதார்த்த நிலையை தோற்றுவிக்கும், கல்வி நோக்கை இலட்சிய வாதம் எனக்கருத முடியாது. இன்று கல்வி மூலம் அடைய விரும்பும் மேம்பாட்டுக் குணநலன்களை ஆதிகால சமுதாயத்தில் சமயங்களே உருவாக்க முயன்று வந்தன. மனித நாகரீக வளர்ச்சி ஏற்படுங்காலத்திற்கு முன்பு சமயங்களே இக்கருமத்தை செயற் படுத்திவந்தன. மனிதநேயம், கீழ்ப்படிந்து நடக்கும் விசுவாசம், பிறர்க்கும் உலகிற்கும் உபகாரமாக வாழ்தல் இவற்றினை மனி தனிடத்தே சமயம் உருவாக்க முனைந்தது.

இதனால் மனிதனே தனது சிந்தனையில் கடவுளை உருவாக்கினான். ( 'man created God in his own image' ) என்ற முடிவைச் சிந்தனையாளர் கொண்டனர்.

''சமய போதனைகளில் இழையோடிய காருண்யம் சமநோக்கு இவற்றினால் கவரப் பட்ட மனிதன் தனது துன்பங்களுக்கும் மனித அடக்கு முறைகளுக்கும் சமயமே பரிகாரம் என நம்பினான். ஆனால் சமய நிறுவனங்கள் அவனது நம்பிக்கையை பாழ் படுத்தும் வகையில் அவனை அடிமைத் தளையில் சிந்திக்கவைத்தன.'' என்று கார்ல் மார்க்ஸ் என்ற தத்துவஞானி கருதினான். ஆதிக் கிறிஸ்தவ கோட்பாடுகள் உரோமச் சக்கராதி பத்தியத்திற்கு விசுவாசமான குடி மக்களை உருவாக்கப்பயன்பட்டன என மார்க்ஸ் கூறினார். கீழைத்தேய மன்னர் களும் சக்கரவர்திகளும் தம்மை தேவப் பிரதிநிதிகளென்றும், சூரிய சந்திர வம்ச வழித்தோன்றல்களென்றும் கூறிக் கொண் டமை இத்தகைய செயற்பாடாகக் கொள் ளப்பட்டது. கல்வி பரவலாக்கப்படாத பண் டைய சமூகங்களில் நற்குடிமகனை உருவாக் கும் பாரியபொறுப்பினைச் சமயத்தின் பேரி லேயே செய்யத்தூண்டினர். சமயங்கள் நல்லொழுக்கம், கட்டுப்பாடு, சமூகப்புரிந் துணர்வுள்ள மனிதனையே உருவாக்க விழைந்தன. கர்மவினை, கடவுளின் கிருபை என்ற கருத்துக்கள் மனிதனைக் கடமை யுணர்வின் பால் ஈடுபடுத்தும் நோக்குடை யன. பகவத் கீதை உருவாக்க விரும்பிய கர்மயோகியும், கிறிஸ்தவன் போதனைகள் உருவாக்க விரும்பும் ஞானஸ்நானம் பெற்ற பூரண கிறிஸ்தவனும் கடமையுணர்வுடைய குடிமகனே.

சமயங்கள் நுண்ணறிவுத்திறனோடு, செயற்றிறன் மிக்கவனாகவும், சமூகஉணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையவனாகவும் மனிதனை வழிநடாத்தும் கருமப்பயனை மார்க்ஸ் நன்குணர்ந்திருந்தார். இதனால் சமயம் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து உயிர்ப்புடையதாக இருந்தது.

*"Religion is the heart of a heartless world,*
*is the spri of a spritless situation*
*the sigh of the oppressed creature*
*It is the opium of the people."*
— Karl Marks

மதம் மனித உணர்வுகளை வசப்படுத்தும் சக்திபற்றியே மார்க்ஸ் அச்சமும் கொண்டிருந்தார். ஆனால் மதம் மனிதக் குணகலன்களில் செலுத்தும் நன்மையான தீவிரத் தன்மை பற்றியும் அவர் உணர்ந்திருந்தார்.

இன்று விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்ச நிலைக்கு கல்வியே காரணமெனக் கொள்ளப்படுகின்றது. உலக நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார விருத்திக்கும் கல்வி ஒரு மூலதனமாகக் கருதிச் செயற்பட்டமையே காரணம் என்று நம்பப்படுகிறது. ஆனால் அதேவேளை போரபாயம், அமைதியின்மை மனித சமூக ஒற்றுமை இவற்றுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலுக்கும் விஞ்ஞான வளர்ச்சியே காரணமாகக் குற்றம் சாட்டப்படுகிறது. சமயங்கள் மனிதசமூகத்தின் துரித அறிவுத்திறன் விருத்திக்கு தடையாயிருந்தன என்ற குற்றச்சாட்டைப் பெற்றன. ஜோன் டுயி, கார்ல் மார்க்ஸ் போன்றோர் சமயத்தின் மீது, மனித சமூகத்தின் பாரிய வளர்ச்சிக்கு தடையாயிருந்தது. என்ற கண்டனத்தை ஒருவகையில் வெளிப்படுத்தினர் ஆனால் ஆதிச் சமூகத்தில் சமயாதிக்கம் வலுவடைந் திருந்த காலத்தில் நிலவிய அமைதிநிலை இன்றில்லை என்பதை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கல்வி, சமயங்கள் ஆற்றிவந்த கருமத்தையும் உள்ளடக்கியிருப்பின் இன்று சமயங்கள் தேவையிழந்து போயிருக்கவேண்டும். சமயங்கள் செயலிழந்து போவதைத்தான் மார்க்ஸ் போன்றோர் விரும்பினர். ஆனால் இன்று முன்னைய காலத்தை விடச் சமயத்தின் தேவையை மனிதசமூகம் உணர்ந்துள்ளது. அபரீதமான விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதன் சமய நம்பிக்கையிலிருந்து விலகிச் சென்ற அதேவேளை, அமைதியிழந்து தவிக்கும் உலகினைக்காப்பாற்ற கல்வியின் கலாச்சார நோக்கில், சமயம் பெறும் இடத்தின் அருமையை நாடும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளான்.

விஞ்ஞானிகளின் ( Scientist ) கண்டுபிடிப்புக்கள் யந்திர மயமான உலகைத் தோற்றுவித்தன. இதனால் மனித இதயம் கூட இயந்திர மயமாக்க ஆதிக்கத்திற் குட்பட்டுவிட்டது. ஆனால் சமயத் துறவியே ( Saints ) தனது ஆழ்சிந்தனைத் திறனால் மந்திரங்களை தந்தான். அந்த மந்திர உச்சாடனங்கள், செபம் போன்றவற்றால் மனிதன் இதயத்தை விசாலமாக்கினான். கனிவு, மனிதாபிமானம் இவற்றைத் தோற்றுவித்தான், மந்திர மயத்தால் சாந்தி உலகைத் தோற்றுவிக்கும் வல்லமை பெற்றிருந்தான்.

கல்விக்கருமம் பூரணத்துவம் அடைய வேண்டுமானால், அது நல்லொழுக்க விழுமியங்களைத் தரும் ( Moral education ) கல்விச் செயற்பாட்டில் கவனம் செலுத்த வேண்டும் என்பது வெளிப்படையாகிவிட்டது. அறிவுத்திறன் வாய்ந்த உழைக்கும் மனிதனை மனிதாபிமான உணர்வுள்ளவனாக மாற்றும் வழிவகைபற்றி இன்றைய கல்வியுலகம் ஆழச் சிந்திக்கிறது. கல்வியினால் ஏற்படும் உள்ளார்ந்த திறன்கள் ( Inner ablities ) மனித மேம்பாட்டுக் குணநலன்களாக அமையவேண்டும் என்ற எண்ணம் கல்வியுலகில் வலுப்பெற்று வருகிறது.

சமயப் பொருளைப் பாடவிதானத்தில் இடம் பெறச் செய்வதனால் ஏற்படும் பிரச்சனைகளும் உள்ளன. பொதுவுடைமைச் சிந்தாந்தத்தில் வாழும் நாடுகள் சமயக்கல்வியை முற்றாக நிராகரித்துள்ளன. ஆத்மீக நாடான பாரதம் கூட பல இனமத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வாழ்வதனால் சமயக்கல்வியை வழங்க முன்வரவில்லை. அதற்குப்பதிலாக (Ethics) ஒழுக்க நலனைப் போதிக்கின்றது. இலங்கை பல்வேறு மதங்கள் வாழும் நாடானபோதிலும், சமயக்கல்வியை கட்டாயமாக வழங்கும் மனப்பாங்கில் செயற்படுகின்றது. எவ்வாறெனிலும் மனித விழுமியங்களைக் கல்விமூலம் வலியுறுத்துவதனாலேயே, பூரணமான கல்வி விருத்தியை அடைய முடியுமென்ற எண்ணம் வலுப்பெற்றுவருகிறது. சமயங்கள் மனிதனிடத்தே ஏற்படுத்த விழையும் விழுமியங்களை, கல்வியினூடாக வெற்றிகரமாக வழங்குவது பற்றியே கல்வியுலகம் தீர்க்கமான முடிபிற்கு வரவேண்டும்.

கிரேக்க தேசம் பண்டைய காலத்து, உண்மை (Truth) Goodness (நன்மை) (Beauty) அழகு என்பதனை விழுமியங்களாக தோற்றுவிக்கத் தக்க ஆன்மீகக்கல்வி பற்றிய கருத்தினைக் கொண்டிருந்தது. பண்டைய பாரதம் சத்தியம், சிவம், சுந்தரம் என்ற மூன்றுமிணைந்த சச்சிதானந்த உணர்வினைத் தோற்றுவிப்பதையே கல்வியின் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இவைதான் இந்நாடுகளின் மையக்கலைத்திட்டமாக அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று திட்டமிட்ட பொதுக் கலைத்திட்டத்தினூடாக, வெற்றிகரமாக மனித விழுமியங்களை மனித சமூகத்திடம் நிலைபெறச் செய்வதற்கான நவீன அணுகுமுறைகள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில் பட்டங்களும் பாடத்துறைகளும் பரந்துபட்டிருக்கின்றன. ஆனால் மனிதாபிமானப் பண்புகள் அருகிவிட்டன.

இன்று உலகளாகிய நிலையில் மனித விழுமியங்கள் பற்றி பகவான் ஸ்ரீ சத்திய சாயி அமைப்புக்கள் தீவிர அமுலாக்கல் பற்றி ஆலோசித்து வருகின்றன. (Education Human Values Programme) மனித விழுமியத்திற்கான கல்விபற்றி விரிவான நிகழ்ச்சித் திட்டமொன்றினை வகுத்துள்ளன. உலக நாடுகள் அரச மட்டத்தில் இதனை அமுல்படுத்துவதுபற்றி ஆலோசித்து வருகின்றன. 1994-ல் பிரித்தானிய கல்வி அமைச்சு இத்திட்டத்தினை முழுமையாக ஏற்று பெரிய பிரித்தானியாவின் கல்வித்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்துவது பற்றி உயர் மட்டஆலோசனை நடாத்திவருகிறது. இது ஒரு (Divine progromme) தெய்வீக நிகழ்ச்சித்திட்டம் எனப்படுகிறது. ஒவ்வொரு நாடும் தனது கலைத்திட்டத்திற்கு ஏற்புடைய வகையில், மனித விழுமியங்களை கல்வியூடாக வளர்ப்பதில் அக்கறை செலுத்தத் தூண்டுவதே இதன் இலக்காகும்.

இத்திட்டப்படி மனித விழுமியங்கள் ஐந்து வகைப்படுத்தப்பட்டுள்ளன. சத்தியம் (Truth) தர்மம் (Rightness) சாந்தி (Peace) பிரேமை (Love) அகிம்சை (Non-violence) என்பனவாகும், கல்வி என்பது சீவனோபாயம் அன்று, வாழ்க்கை ["Education is for life and not for mere living"] என்ற உண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்து, கல்வி என்பது வாழ்க்கை என்ற தத்துவத்தை நிலைநாட்டுதல் இதன் இலக்கு.

தற்கால கல்வி அறிவுப் பரப்பை பொறுத்தவரை பரந்துள்ளது. ஆனால் மனித வாழ்க்கையில் உயர் வாழ்க்கை இலட்சியங்களை விட்டுத் தூர விலகி நிற்கிறது. மனிதனது உழைக்கும் திறனிலும், பொருளாதார விருத்தியிலும் காட்டிய அதிக கவனமே இதற்குக் காரணம். கல்வி ஒரு உற்பத்தி மூலதனம் என்ற எண்ணமே கல்வியில் சமயங்களை தூர வைக்கவேண்டுமென்ற மனோநிலைக்கு காரணமானது. சமயத்தை அபின் என்று மார்க்ஸி சிந்தித்தது. அதன் உணர்வுபூர்வமான செல்வாக்கின் பெறுமானம் குறித்தேயாம். அபின் போதைப் பொருளாக இல்லாது மருந்தாகவும் பாவிக்கத்தக்கது என்று அவர் கருதவில்லை. காரணம் அதற்கு வரம்பிட முடியாதது என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்று கல்வியில் சமயக் கருத்துக்களை உள்நுழையச் செய்தே மனிதாபிமானத்தை உலகில் நிலை நிறுத்தவேண்டிய அவசியம் உணரப்பட்டு விட்டது. மத உணர்வு, மத அபிமானம், மத வெறி, என்பவை வெவ்வேறு தன்மை வாய்ந்தவை, மதங்களினூடாக இழையோடி நிற்பது மனிதாபிமானமே. இன்று மனிதாபிமான உணர்வுகளை மட்டும் உள்வாங்கிக் கொள்ளும் அளவிற்கு மனிதன் பகுத்தறிவின் உச்சிக்கு வளர்ந்திருக்கிறான். ஆகவே மனித உணர்வுகளை வளர்ப்பதுபற்றியே (E.H.V.) மனித விழுமியத்திற்கான கல்வி நிகழ்ச்சித்திட்டம் கல்விமான்களால் தீட்டப்பட்டுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட மதத்திற்குரியதல்ல. கடவுள் கோட்பாட்டினை வலியுறுத்துவதுமல்ல. தன்னை அறிவதன் மூலம் மனித விழுமியங்களை வளர்ப்பதன்மூலம், சமூக ஒழுங்கினை ஏற்படுத்தி ஆனந்தம், அமைதி, மகிழ்ச்சி, கணிப்பு இவற்றினை ஒவ்வொருவரும் அடையச் செய்தலாகும். கடமை (Duty) அர்ப்பணம், (Devotion) கட்டுப்பாடு (Disipline) இம்மூன்றையும் ஒரு மனிதன் கல்வி மூலம் அடைவானேயானால் அந்த மனிதன் தெய்வமாகிறான். மனிதன் தெய்வீகமானவன் ( Man is Divine) என்பதே யதார்த்த நிலை, இயற்கை நிலை. இது இலட்சியவாதமோ, கற்பனா வாதமோ அல்ல, பிரெஞ்சு தத்துவ ஞானி கருதிய இயற்கை மனிதன் என்பவனே தெய்வீக மனிதன். மனிதன் உழைக்கும் விலங்கு அல்ல. இன்றை கல்வி அவ்வாறு அவனை தீவிர உழைக்கும் விலங்காக மாற்றிவிட்டது. அவனது விலங்குத் தன்மையை அறவே நீக்கி, அவனது தன்முனைப்பையும் ஒடுக்கி அவனை மனிதனாக்க வல்ல நுட்பங்களை இன்றைய கல்வியுலகம் சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டது. கல்விபற்றி அக்கறைப்படும் ஒவ்வொரு மனிதனும் இவைபற்றிச் சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளான்.

சமயத்தின் இலக்கும் கல்வியின் இலக்கும் மனிதாபிமானத்தை அடைவதே. சமகாலத் தேவை மனிதாபிமானமுள்ள ஒரு மனித சமுதாயம். கல்வியுலகம் இதுபற்றிச் சிந்திக்கின்றது.

— நன்மையின் மறு பெயர் கடவுள் —
"Goodness is another name God"!

★

'' நல்ல ஆசிரியர் உள்ள கூடாத வகுப்பும் இல்லை
கூடாத ஆசிரியருள்ள நல்ல வகுப்பும் இல்லை ''

'' ஆசிரியர்களாக யாரும் பிறப்பதில்லை அவர்கள்
உருவாக்கப்படுகின்றார்கள் ''

'' பாடசாலையைத் திற சிறைச்சாலைகளை மூடு ''

'' பாடசாலை ஓர் அறக்காட்சிச் சாலை ''

'' தனது பிள்ளையின் கல்விக்கு ஆவன செய்ய
முடியாதவனுக்கு தந்தையாகும் உரிமை இல்லை ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2nd Year Students and Lecturers 1993 / 94

**Group I**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அளவுரீதியான கல்வி வளர்ச்சியும் தரமான (QUALITY) கல்வி வளர்ச்சியும்.

ஏ. சி. ஜோர்ஜ்
இரண்டாம் வருடமாணவன்

இக்கட்டுரையானது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக எழுதப்பட்டுள்ளது.

1) அறிமுகம்.
2) இலங்கையில் அளவுரீதியான கல்வி வளர்ச்சி.
3) எல்லோருக்கும் கல்வி ( Education for all )
4) எல்லோருக்கும் தரமான கல்வி. ( Quality Education for all )
5) யுனெஸ்கோவின் ( UNESCO ) கல்வி முன்மொழிகள்.
6) முடிவுரை.

## அறிமுகம்:

இத்தீவில் 1948-ம் ஆண்டு OCT மாதம் 1-ம் திகதியில் இருந்து இலவசக் கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுதந்திரம் பெற்ற காலப் பகுதியுடன் இணைத்து இடம் பெற்ற இச்சம்பவம் சுதந்திரத்திற்கு முன்னைய காலப் பகுதியுடன் ஒப்பிடும் இடத்து இலங்கை அளவு ரீதியான கல்வி வளர்ச்சியினை அடைவதற்கான மைல்கல்லாக இத்தீர்மானம் காணப்படுகின்றது. அன்றில் இருந்து இன்று வரை மூன்றாம் உலக நாடுகளில் கல்வியானது அளவுரீதியான வளர்ச்சியில் பல்வேறு துறைகளில் முன்னணி வகிப்பதினை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. அளவுரீதியான கல்வி வளர்ச்சியானது பிரமிக்கத்தக்க வகையில் வளர்ந்துள்ளதுடன் அது ஒரு பெரும் தாவுதல்'' ஆகவும் அமைந்துள்ளது என கல்வியலாளர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளுகின்றனர். இவ்வளர்ச்சிப் போக்கினை கீழ்வரும் ஆதாரங்கள் சுட்டி நிற்பதாகவும் கூறுகின்றனர்.

## அளவுரீதியான கல்வி வளர்ச்சி.

இத்தீவு சுதந்திரம் பெற்றதன் பின்னரும் இலவச கல்வி முன்மொழிகள் இடம் பெற்றதின் பின்னரும் கல்வியில் இன்று வரை அளவுரீதியான பல துறைவளர்ச்சியானது ஆசிய நாடுகளில் சிறப்பாக இங்கு ஏற்பட்டு வந்துள்ளதினை அவதானிக்க முடிகின்றது.

| | சுதந்திரத்திற்கு முன்னர் | சுதந்திரத்திற்கு பின்னர் (இன்று) |
|---|---|---|
| எழுத்திறவு விதம் | 57% | 82% |
| ஆசிரியர்களின் தொகை | 30000 | 1, 70, 496 பேர் |
| பாடசாலைகளின் எண்ணிக்கை | 3000 | 10, 077 |
| கல்வி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | 8, 33905 | 34, 35114 பேர் |
| கல்வி மீதான செலவினம் | 105, 9 மில்லியன் | 3556, 4 மில்லியன் |
| பல்கலைக்கழகம் | 01 | 12 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுடன் 25 உயர் தொழில் நுட்ப கல்லூரிகளையும், இலவசப் பாடப்புத்தகம். இலவச உடை, மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரை, போன்ற பல் வேறு துறைகளில் கல்வியின் அளவுரீதியான வளர்ச்சியானது கடந்த 5 தசாப்த காலத்தில் ஏற்பட்டு வந்துள்ளதினை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இத்தகைய ஒரு அளவுரீதியான வளர்ச்சியினை அடைந்து கொள்வதற்த கல்வியில் ''எல்லோருக்கும் கல்வி'' (Education for all) என்ற அடிப்படைத்தத்துவ கோட்பாடு பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

## எல்லோருக்கும் கல்வி (EFA)

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் கல்வியமைப்பில், கல்வியில் சமவாய்ப்பு, ஜனநாயகப்பண்பு, தேசியத் தன்மை, ஜன சக்திக்கல்வி, கல்வியில் பொதுத்தன்மை என்ற தன்மைகளை கல்வியானது கொண்டு வளர்ச்சியடைந்தது. இத்தகைய வளர்ச்சிக்கு ஒரு அடிப்படைத்தத்துவமாக எல்லோருக்கும் கல்வி (Education for all) என்ற சித்தாந்தம் ஒரு தாரகமந்திரமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தக்கோட்பாட்டின் அடிப்படையில் பாலர் கல்வியில் இருந்து பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி வாய்ப்பானது ஒரு வரப்பிரசாதமாக அமைத்தது. இது கல்வியில் உன்னதமான ஒரு நிலையினை எய்தவும் அளவுரீதியான கல்வியில் ஓர் மேல் நோக்கிய போக்கினை எய்துவதற்கும் வழிகோலியது. தேசிய கல்வி சுயமொழிக்கல்வியாக பரிணாமம் அடைந்ததும் இது மேலும் மேலும் சிறப்புறவும் அனேகர் பாடசாலைக்குள் நுழையவும் வழி வகுத்தது. உலகில் ஆரம்ப பாடசாலைக்குள் நுழைவோர் விகிதம் 85% என்ற ஒரு உயர்ந்த இடத்தினை எமது நாடு பெற்றுள்ளது. இத்தகைய மேல் நோக்கிய உயர்ச்சி எல்லோருக்கும் கல்வி (EFA) என்ற ''வாய்ப்பாட்டின்'' மூலம் எய்தப்பட்டது எனக் கூறலாம். ஆனால் பல கல்வியியலாளர்களும் சமூகவியலாளர்களும் இத்தகைய ஓர் அளவு ரீதியான வளர்ச்சியின் மத்தியிலும் கல்வியானது எதிர்பார்த்த பலனை நாட்டுக்களிக்கவில்லை எனக் குறை கூறுவாரும் உளர்.

## எல்லோருக்கும் தரமான கல்வி Quality Education for all. (EQEFA)

''இலங்கையில் கல்வி'' என்ற விடயம் குறித்து ஒரு பொது உடன்பாடு இருக்குமாயின் அது ''கல்விமுறை முற்றிலும் தோல்வி அடைந்துள்ளது என்பதற்கு இருகருத்துக்களுக்கு இடமில்லை என வாதிடுபவர்கள் உண்டு. அ+து கல்வியானது அளவு ரீதியில் வளர்ச்சியினைக் காட்டினாலும் தரரீதியில் கல்வி முறை முற்றிலும் தோல்வி அடைந்துள்ளது என்பதாகும். கல்வியின் வெற்றியினை அளவீடு செய்யும் அளவுகோல்கள் ''அளவு ரீதியான காரணிகள்'' மட்டுமல்ல என பலர் இன்று வாதிடுகின்றனர். இந்த வகையில் இலங்கைக்கான யுனெஸ் கோவின் (UNESCO) நிரந்தர தூதுவர் பேராசிரியர் எஸ். பி. ஹெட்டியாராச்சி (S. B. Hetti-artchi) யின் கருத்துப்படி இன்று எல்லோருக்கும் கல்வி (EFA) என்ற கோட்பாட்டினை விட எல்லோருக்கும் தரமான கல்வி (QEFA) வழங்குவதே பொருத்தமானது எனக் கூறுகின்றார். (Therefore we should not emphasise merely on education for all But on buality education for all. அ+து 21ஆம் நூற்றாண்டை நோக்கி நாட்டையும், மக்களையும் தயார் செய்வதற்கு அவரது கருத்தே பொருத்தமானதாகும்.

எல்லோருக்கும் கல்வி (EFA) என்ற கோட்பாடின் அடிப்படையில் கல்வியானது அளவுரீதியான வளர்ச்சியினை அடைந்திருந்தாலும் கல்வியின் தரம் அல்லது பண்பு அல்லது அதன் விளைவுகள் குறித்து நோக்கும் போது நாம் பெருமிதம் கொள்வதற்கில்லை. அளவு ரீதியான கல்வி வளர்ச்சி நமது நாட்டில் உற்பத்தி செய்திருப்பவற்றை நோக்கும் போது அனைவரும் இம் முடிவுக்கு வந்து விடுவர். வருடா வருடம் பாடசாலைகளில் இருந்து ஏறக்குறைய 4 இலட்சம் பேர் எவ்வித நோக்கமுமின்றி வெளியே தள்ளப்படுகின்றனர். இவர்கள் தொழிற்சந்தைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டாலும் வேலை வாய்ப்பு என்பது பகற் கனவாகவே இருக்கின்றது. மேலும் தொழிற்படையில் ஏறக்குறைய 2 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலையற்று விரக்தியடைந்து இருக்கும் நிலையையும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமுள்ள மனிதனை (Resource Person) தோற்றுவிக்கும் நோக்கம் கல்வியில் இருந்ததேயொழிய வாழ்க்கையில் வெற்றி பெறும் மனிதனை எமது கல்வியமைப்பு உற்பத்தி செய்யவில்லை.

மேலே கூறிய வற்றிற்கும் மேலாக எமது தேசியக் கல்வியானது இன ஐக்கியம், பரஸ்பர புரிந்துணர்வு, நம்பிக்கை, சமாதான சகவாழ்வு வேற்றுமையில் ஒற்றுமை, சகிப்புத்தன்மை மனித உரிமைகளைப்பேணுதல் போன்றவற்றை வளர்க்கும் பாதுகாக்கும் ஒரு கல்வித்திட்டமாகவும் அமைய வில்லை. இலங்கையில் காலத்திற்கு காலம் இடம் பெற்று வரும் இளைஞர் கிளர்ச்சிகள். உச்ச நிலையை அடைந்துள்ள இனப்பிரச்சினை என்பனவற்றுக்கு கல்வியானது பண்புரீதியில் எவ்விதபங்களிப்பினையும் செய்யவில்லை. இவற்றினை மனங் கொள்ளுமிடத்து கல்வி எல்லோருக்கும் என்பதில் இருந்து எல்லோருக்கும் தரமான வாழ்க்கைக் கானகல்வியாக மாற்றப்படவேண்டும்.

## எல்லோருக்கும் தரமான கல்வி என்ற யுனெஸ்கோவின் முன்மொழிவுகள்.

எல்லோருக்கும் தரமான கல்வி (QEFA) என்ற சித்தாந்தத்திற்கு யுனெஸ்கோவின் 1955 ஆண்டு பாண்டுங் மகாநாட்டின் போது அதன் இறுதிக் கூட்டத்தில் அதற்கான விளக்கம் அளிக்கப்பட்டது. யுனெஸ்கோவின் செயலாளர் நாயகம் வெடரிகோமேயர் (FERDERICO MAYOR) கூறியதிற்கு இணங்க எல்லோருக்கும் தரமான கல்வி என்பது மனிதனுக்கு வழங்கப்படும் அடிப்படைக் கல்வியுடன் (Basic education) சகிப்புத்தன்மை, (Tolerence) ஜனநாயக நடத்தை, (Democratic behaviour) மனித உரிமைகளை மதித்தல், (respect for human rights) விழும்மியக்கல்வி (Values) என்பன வற்றினை கல்வி முறை யூடாக வழங்குவதுடன் நவீன காலதகவல் தொழில் நுட்ப உலகுக்கு உகந்த தொழில் வாய்ப்பினை உத்தரவாதம் செய்யும் ஓர் கல்வி முறையாகவும் அது அமைதல் வேண்டும். இக்கல்வி முறை 21-ம் நூற்றாண்டுக்கு பொருத்தமாக அமைவதுடன் வெற்றிகரமான கற்றலுக்கும் வேலை உலகுக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும், தேசிய உலக சவால்களை எதிர்கொள்வதற்குமான கல்வியாக அமைய வேண்டும். சகல இனங்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வு, பொறுமைக்கும் நட்புக்கும், (Tolerence and Friendship) ஐ. நா. சபையின் சமாதான நடவடிக்கைகளுக்கும் பொருந்துவதாக கல்வி அமைப்பு அமையுமாயின் அது எல்லோருக்கும் தரமானகல்வி (QEFA) யாக அமையும் எனக் கூறினார். இவ்வாறு மாற்றியமைக்கப்படாத கல்வியானது (Knowledge for the sake of Knowledge) ' அறிவுக்காக என்பதாகவே அமையும்.

## முடிவுரை

இக்கருத்தினையே இந்தியாவின் பிரபல கல்வியானாகிய நா. கி. வேங்கடரமணியும் கூறியிருக்கின்றார். பாலர் பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகம் வரையில் கல்வியானது' "எல்லோருக்கும் தரமான கல்வி" என்ற அடிப்படையில் வழங்கப்படவேண்டும் எனக்கூறியுள்ளார். தற்போதைய கல்வி இறுதியில் அழிவினையே ஏற்படுத்துகின்றது; தனிமனிதனில் இருந்து சமுதாயம் உலகம் என்றவகையில் அழிவே இறுதி நிகழ்வாக வுள்ளது. "அறிவு அற்றம் காக்கவேண்டும்" அஃது அழிவில் இருந்து நம்மைக் காக்க வேண்டும். பேராசிரியர் வேங்கட ரமணியின் வார்த்தையில் கூறுவதாயின் கோயில்கள் புராதனமானதாக பழமையானதாக இருக்கலாம். பல்கலைக்கழகங்கள் பழமையானதாக இருக்கக்கூடாது. தொல் பொருள் துறையில் ஆலயங்கள் இருப்பது வேறு தொல் பொருள் துறையிலும் பல்கலைக்கழகங்கள் இருந்தால் மியூசியம் ஆகி விடும். எனவே 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர் கொள்ள எம துகல்விமுறை எல்லோருக்கும் தரமான கல்வி (QEFA) என்ற யுனெஸ்கோவின் பாண்டுங் பிரகடனத்திற்கு அமைய ஏற்றதாக மாற்றப்பட வேண்டும். அத்தகையவொரு காலடியில் தேசிய கல்வி நிறுவனம் செயற்படும் என நம்பலாம்.


உசாத்துணை குறிப்புகள்.

I) யுனெஸ் கோவின் கல்வி அறிக்கை

II) சண்டே ரைம்ஸ்

III) சுபமங்களா.

# விழுமியக் கல்வியை வழங்குவதில் பாடசாலை ஆசிரியரின் பங்கு

**திரு. பெ. பிரான்சிஸ்**
*(2-ம் வருட மாணவர்)*

**முகவுரை :**

கல்வியின் அடிப்படை நோக்கமான நிறைவுள்ள மனித உருவாக்க செயற்பாட்டின் விளைவே விழுமியக்கல்வி எனலாம். விழுமியம் என்பது ஒரு சம்பவத்தை அல்லது கருத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்குச் சார்பாக அல்லது எதிராக எடுக்கப்படுகின்ற மனப்பாங்காகும். இந்த மனப்பாங்கு ஒரு தனி நபர் பற்றியதாக, அல்லது ஒரு குழு பற்றியதாக, அல்லது ஒரு நிறுவனம் பற்றியதாக அமையலாம். இந்த வகையில் நோக்கும் போது பாடசாலை மாணவர்களின் செயற்பாடுகள் எப்பொழுதும் அவர்கள் வாழுகின்ற சூழலுக்குச் சார்பானவையாக இருக்க வேண்டும். இதற்கு அவர்கள் உள்ளங்களில் நல்ல விழுமியங்களைத் தழுவக் கூடிய மனப்பாங்கு உருவாக்கப்பட வேண்டும். இச்செயலைப் பெற்றோரும், பாடசாலை ஆசிரியர்களுமே அதிகம் மேற்கொள்ள வாய்ப்புண்டு.

**ஆசிரியர் பங்கு :**

முறைசார் கல்வியின் மூலம் மாணவர்களை உருவாக்குவதில், அதிலும் சிறப்பாக அவர்களிடத்தில் ஆளுமைப் பண்புக் கூறுகளை உருவாக்குவதில் பாடசாலை ஆசிரியரின் பங்கு மிகவும் முக்கியமானது. ஆசிரியரின் பங்கு என்பது ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் அப்பதவியில் இருந்து ஆற்றவேண்டிய கடமைகளும், பொறுப்புக்களுமாகும். ''மாணவர்களின் தேவைகளையும், கல்வி நோக்கங்களையும் நிறைவு செய்யும் வகையில் முழுக்கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பவர் ஆசிரியர்'' இது யுனெஸ்கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்ட நூல் ஒன்றில் எம். சம்சியூட்ட என்ற அறிஞர் ஆசிரிய பங்கு பற்றிக் கூறிய கருத்தாகும். இதே கருத்தைப் பல்வேறு சொல் வடிவங்களில் டி. விஞ், டி. பிரின், எறிக் கொயில் போன்ற பல கல்வியியலாளர்கள் கூறியுள்ளனர். இவர்கள் ஆசிரியர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது மாணவர்களுக்கு அறிவு, திறனை ஊட்டும் அதே நேரத்தில், நல்ல விழுமிய மனப்பாங்கையும் ஊட்ட வேண்டும் என்பதை தமது கருத்துக்களில்க் கோடிட்டுக் காட்டியுள்ளார்கள். எவ்வளவு திறமையான கலைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பினும் அதனை நடைமுறைப் படுத்துவது ஆசிரியர்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது என்பதை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**ஆசிரியர் ஒரு குயவனின் பாத்திரத்தை ஏற்க வேண்டும் :**

நல்ல விழுமியக் கல்வியைத் தமது மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்கிற வாண்மை உள்ள ஆசிரியர், தான் ஒரு குயவனின் பாத்திரத்தை ஏற்க வேண்டும். அதாவது எப்படி ஒரு குயவன் தன்னிடமுள்ள களிமண்ணைப் பதப்படுத்தி உபயோகமுள்ள கலசமொன்றைத் தன் கைவண்ணத்தால் உருவாக்குகிறானோ, அதே போல ஆசிரியரும் தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களின் உள்ளங்களை தமது சாதுரியத்தால் பதப்படுத்தி நல்ல மனப்பாங்கு விருத்தி கொண்ட, சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ள நற்பிரஜைகளை உருவாக்க வேண்டும். இதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் தமது மாணவரின் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர முயல வேண்டும்.

**ஆசிரியர் ஒரு ஜனனாயக வாதி :**

மனித நடத்தையின் நன்மை, தீமையை நிர்ணயிப்பது விழுமியமாகும். ஒருவருடைய செயல்கள், ஒரு நோக்கோடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தோடும் மேற்கொள்ளப்படும் போது அவை விழுமியத் தன்மை பெறுவதாக அறிஞர்கள் கூறியுள்ளார்கள். இந்த வகையில் மாணவர்களைச் சுதந்திரமாகச் செயல்பட வைப்பது ஆசிரியரின் பங்காகும். ஆசிரியர் வகுப்பறையில் எப்பொழுதும் ஒரு ஜனனாயகவாதியாகச் செயல்ப்படுவதன் மூலம் இதனை மேற்கொள்ளலாம். அதாவது மாணவன் சுயமாகச் சிந்திக்கவும், தனது சிந்தனைகளை வெளியிட்டு அதன் மூலம் அவனது உள்ளார்ந்த திறன்கள் வெளிக் கொணரப்படவும், தன் திறனில் அவன் நிறைவு (Self actualization) காணவும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

## சமநிலை ஆளுமையை வளர்த்தல்:

நிறைவுள்ள மனித உருவாக்கத்திற்கு மாணவர்களில் சமநிலை ஆளுமை வளருவதற்கான உத்திகளை ஆசிரியர் கையாள வேண்டும். இதற்கு முதலில் தானே தனது ஆளுமையில்க் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர் தான் முரணான விழுமியத்தைக் கடைப்பிடித்துக் கொண்டு வேறு விழுமியங்களை மாணவருக்கு புகட்ட முற்படக் கூடாது. மாணவர் முன்னிலையில் ஒரு உதாரண புருஷராக நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாட அலகுகளையும் கற்பிக்கின்ற போது அறிவு, திறன் என்பவற்றை ஊட்டுவதில் ஏற்படுகின்ற ஆர்வம், நல்ல மனப்பாங்கை ஊட்டுவதிலும் ஏற்படுத்தப்படவேண்டும். இவற்றைத்திறம்பட மேற்கொள்ள ஆசிரிய மாணவ தொடர்பு மிகவும் ஆரோக்கிய மானதாக இருக்கவேண்டும். இதனால்தான் என்னவோ " கற்பித்தல் கற்றலின் பயன் கற்பித்தல் கற்றல் சந்தர்ப்பத்தில் ஆசிரிய மாணவருக்கிடையே நிகழும் தொடர்பாடற் செயற் பாட்டுக் கோலத்தின் தன்மைக் கமைவாயிருக்கும்" என அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே இந்த ஆசிரிய மாணவ தொடர்பு இறுக்கமானதாக இருக்கவேண்டுமானால் ஆசிரியர் மாணவரின் நண்பனாக மாறவேடும். " எனது நண்பரல்லாதவரிடமிருந்து நான் எப்படிக் கற்பது" இது ஒரு மாணவனின் உள்ளத்தில் எழுகின்ற அங்கலாய்ப்பு. மேலும் ஆசிரியர் காட்சிக்கு எளியன், கடும் சொல் அல்லனேன், மீ கூறும் மன்னனே" என்றும் வருணிக்கப்பட்டுள்ளா. இவற்றைா யெல்லாம் ஒரு ஆசிரியர் தனது மனதில் நிறுத்திச் சிந்திக்கும்போது விழுமியக்கல்வியை வழங்குவதில் தன்து பங்கு எப்படிப்பட்டது என்பதை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

## ஆசிரியப்பணியின் மகத்துவம்:-

'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' இது முன்னோர் கூற்று. இன்று ஆசிரிய பணி மேன்மையானது, உன்னதமானது என்பதை எடுத்துக் காட்ட அதனை இறைவனின் செயற்பாடாகிய படைத்தல், காத்தல், அழித்தல் என்ற பணிகளுக்கு ஒப்பிடுகிறார் இந்திய அறிஞர் "Sunanda Ghosh" என்பவர், அதாவது ஆசிரியர் என்பவர் நல்ல கருதுக்களை, விழுமியங்களைப் பிள்ளையின் மனதில் உருவாக்குவதன் மூலம் படைத்தல் என்ற பணியையும், அவ்வாறு பிள்ளையின் மனதில் விதைக்கப் பட்டவற்றை தனது கற்பித்தல்த்திறமையால் வேரூன்றச் செய்து அவை அவனை விட்டகலாமல் செய்வதன் மூலம் காத்தல் என்ற பணியையும் மேற்கொள்கிறார், அத்துடன் பிள்ளையை நன்கு அறிந்து, அவனில்தான் அவதானிக்கின்ற ஒவ்வாத குணங்களைக் களைவதன் மூலம் அழித்தல் என்ற பணியும் மேற்கொள்வதாக வருணிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆசிரியர் அதாவது குரு என்பவர் அறியாத தீவு ஒன்றிலே விடப்பட்ட சிடனுக்கு வழிகாட்டுபவர் என்று இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ளது. விவிலியத்தில் ஆசிரியர் ஒரு நல்லாயனுக்கு ஒப்பிடப்பட்டுள்ளார். ஆசிரிய வாண்மையானது ஏனைய துறைகளைப் போலல்லாது பல பாத்திரங்களை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும் என்று கலாநிதி சபா ஜெயராசா அவர்கள் தமது "ஆசிரிய இயல்" என்ற நூலில்க்குறிப்பிட்டுள்ளார். அதாவது 60 ற்கு மேற்பட்ட பாத்திரங்களை ஆசிரியர் ஏற்று, அதன் மூலம் அவர் ஒரு சிறந்த ஆளுமை உள்ளவராக மாணவர் முன் செயலாற்றும்போது அவர்களுக்கு நல்ல விழுமியக் கல்வியைப் புகட்ட முடியும் என்பது அவரது கருத்தாகும். உதாரணமாக நெடுகாலம் தாயின் அன்பில் தழைத்திருந்த பிள்ளை, தற்காலிகமாகப் பிரிக்கப்பட்டு வகுப்பறைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் பொழுது அத்தாயின் பாத்திரத்தை ஆசிரியர் ஏற்பதன் மூலமே அப்பிள்ளையின் அங்கலாய்ப்பைப் போக்கி, அவன் நன்கு கற்பதற்கேற்ற வகுப்பறைச் சூழலை ஏற்படுத்த முடியும்.

**பிள்ளையில் வளர்க்கப்படவேண்டிய உயர்தகு பண்புகள்:-**

ஆசிரியர் தனது மாணவர்களுக்கு நல்ல விழுமியக் கல்வியைவழங்க வேண்டுமானால் முதலில் அவர்கள் உள்ளங்களில் மனித மான்பை மதிக்கின்ற அடிப்படையான உயர்தகு பண்புகளை (Basic Human Values) விதைத்து, வளர்க்கமுற்பட வேண்டும். அவையாவன அன்பு, உண்மை, சமாதானம், நல்நடத்தை, அகிம்சை என்பனவாகும். எப்படி ஒரு உடற்பயிற்சி ஆசிரியர் பல்வேறுபயிற்சிகளை மாணவர் முன் செய்து காண்பித்து கற்பிக்கின்றாரோ, அதே போல நல்ல விழுமியங்களை ஆசிரியர்கள் தாம் வாழ்ந்து காட்டுவதன் மூலமே சிறப்பாகக் கற்பிக்கவும், அவற்றை அவர்கள் மனத்தில் நன்கு பதியவும் செய்யலாம்.

**இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் கற்பித்தல்:-**

ஆசிரியர்கள் வகுப்பறைக்கு வெளியே பல இணைப்பாடவிதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி அவற்றில் கூடியளவு தமது மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு நல்ல விழுமியக் கல்வியை வழங்க முடியும். உதாரணமாக உடற்பயிற்சி வழங்குதல், விளையாட்டுப் போட்டிகளில் எல்லா மாணவரையும் பங்குபற்றச் செய்தல்,நல்ல கருத்துக்களை வழங்கக் கூடிய கதைகள் சொல்லுதல், கலந்துரையாடல்கள் பட்டி மன்றங்கள், சிறுநாடகங்கள், நாட்டுக் கூத்து போன்றவற்றில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். இன்னும் சாரணியம், சென் யோன்ஸ் அம்புலன்ஸ், இன்ரறற் கழகம், வாத்தியக் குழுக்கள் போன்றவற்றை அமைத்து மாணவரை அவற்றில் ஈடுபாடுடையவராக்கலாம். அத்துடன் தொடர்புச் சாதனங்கள் மூலம் நல்ல விழுமிய உணர்வுகளை ஊட்ட முடியும். சாதகமான நிலமையில் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்வதன் மூலமும் இந்த நோக்கங்களை நன்கு நிறைவேற்றிக் கொள்ளலாம்.

**முடிவுரை:-**

மேலே எடுத்துக் காட்டப்பட்ட அம்சங்களை எல்லாம் ஒட்டு மொத்தமாகத் தொகுத்து நோக்குகின்ற போது ஒரு பாடசாலை ஆசிரியர் தனது மாணவர்களுக்கு வெறும் நூற்கல்வியை மட்டுமல்லாது, விழுமியக்கல்வியையும் வழங்குவதில் தனது பங்கை உணர்ந்து செயற்பட முடியும் என்பது கோடிட்டுக் காட்டப்படுகிறது. நிறைவாக இன்றைய கல்வி உலகின் பின்னணியை ஆசிரியர்கள் உற்று நோக்குவதன் மூலமும் விழுமியக்கல்வியை வழங்குவதில் தமது கடமைப் பாட்டை உணர்ந்து கொள்ள முடியும். அதாவது இன்றைய கலைத்திட்டத்தில் கடந்தகால கசப்பான அனுபவங்களை முன்னைச்சரிக்கையாகக் கொண்டு பல முற்போக்கான அம்சங்கள் விழுமியக் கல்வி தொடர்பாகப் புகுத்தப்பட்டுள்ள போதிலும், அவை நடைமுறையில் மாணவருக்கு புகட்டப் படுவது குறைவு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக இன்றைய போட்டிச் சமூகத்தில், பாடசாலைக் கல்வி என்பது ஒரு பரீட்சைமையக் கல்வியாகவே வியாபித்துள்ளது. இதனால் விழுமியக் கல்வி என்பது அலட்சியம் செய்யப்படுவதாக உள்ளது. இதனால்தான் மாணவர்களும், பெற்றோரும் வெறுமனே நூற்கல்வியை தனியார் கல்வி நிறுவனங்களில் பெற்றுவிடலாம் என எண்ணிப்பாடசாலைக் கல்வியைப் புறக்கணிக்கின்ற நிலை காணப்படுகிறது. இவ்வாறான அவலமான கல்விப் பின்னணியில் பாடசாலை ஆசிரியர்கள், அதிலும் ஆசிரியர் வாண்மை பற்றித் தொழில்சார் கல்வி மூலம் உணர்ந்து கொண்டவர்கள், தமது பாட அலகுகளைக் கற்பிக்கின்ற பொழுது அறிவு, திறன் என்பவற்றை வளர்க்க முற்படுகின்ற அதே அளவு ஆர்வத்தை நல்ல மனப்பாங்கை ஊட்டுவதிலும் கடைப்பிடித்து விழுமியக் கல்வி வழங்குவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தலையாய பங்கு என்பதை மனதில் இருத்திச் செயற்பட வேண்டும். இதன்மூலம் ஆங்கிலேய கல்வி மானான ஓ. ஏ. ஒய்சர் என்பவர் கூறுவது போல ஆசிரியர் என்பவர் மாணவரின் நடத்தைக் கோட்பாடுகளை வெளியிடுபவரும், அவர்களின் நன் நடத்தையைக் காப்பாற்றுபவரும்" என்ற பணியைத் திறம்பட ஆற்றமுடியும்.


உசாவியவை:.

1. கல்வியின் உளவியற் பின்னணி
பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம் — மகரகம

2. 'பாடசாலைக் கலைத்திட்டத்தில் விழுமியக் கல்வி' (பிரசுரிக்கப்படாத கல்வி டிப்புளோமாவுக்காக. எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
வண பிதா. ஞா. பிலேந்திரன்

3. ஆசிரியர் இயல் — கலாநிதி சபா ஜெயராசா
பக்கம் — 19

4. Teachers' Handbook of The Course in Human Values, Edited and Partly Written By Dr. V. K. Gokag and Prop. S. R. Rohidekar

5. வகுப்பறைக் கற்பித்தல் — வ. ஆறுமுகம்


## சிந்திக்கவும்

### சம கால மாணவன் மனதில் ஆசிரியன்

'அ'னா 'ஆ'வன்னா அறியத்தந்தவன் ஆசிரியன் என்பார்
இன்று போனாப் போகுது ரியூஷனில் கற்கலாம்
ஆ! ''சிரியன்'' என்பார்
மாணவன் அல்லலுற்றாலும் ஆசிரியன் என்பார்.
மாணவன் ஆனந்தக் கூத்தாடினாலும் ஆசிரியன் என்பர்.
மாணவன் அரும்புகழ் தேடினாலும் ஆசிரியன் என்பர்.
அகிலத்தில் ஆசிரியன் அரும்பாடுபட்டாலும் —
மக்களின் மத்தியில் அவன் வெறும் மனிதன்!

ஆக்கம்:

திருமதி. அன்னலட்சுமி தனபாலசிங்கம்
2-ம் வருட மாணவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாண்மை என்பது..........

வாண்மை என்பது செய்தொழில் விருத்தி;
வளமாய் திறன்களை முயன்று பெறுவது
மேன்மை பெற்றுத் தொழில்வளம் செழித்திட
மெல்ல மெல்ல விருத்தியை வளர்க்குக!

கற்பிப் போர்கள் கற்பவர்க் குதவிட
கல்வி(ப்) புலத்தில் கருத்தினை ஊன்றி(ப்)
பற்றில் பற்றி(ப்) பற்பல நுட்பமும்
பயன்தரு ஆக்கமும் தேக்குதல் வேண்டும்.

பாட நெறியினைத் தேடலும் பயிலலும்;
பல்துறைப் பயிற்சியும் முயற்சியும் கொண்டு
தேட முடிந்த செய்முறை கருவிகள்
சேர்த்துத் திறன்களை வளர்த்திடல் நன்று.

கடைமா ணாக்கர் தம்மைத் தேர்ந்து
கவனம் செலுத்தல் ஆசான் கடமை
தடையே இல்லாச் சிரத்தை கொண்டால்
தக்க மாணவர் ஆகுதல் உறுதி.

அறிவு நீரை வளர்த்து(க்) கல்வி
ஆகிய செடியை வளர்த்து; மனத்தில்
முறிவு தோன்றாச் சிந்தனை ஊட்டி
முற்றும் தவறுகள் களைதல் மேலாம்.

இவ்வகைப் படிமுறை இருந்தால் மாணவர்
இயல்பூக் கங்கள் எழுச்சியாய் வளரும்
அவ்வகை எவ்வகை ஆற்றுதல் என்று
ஆசான் உணர்ந்தால் அல்லல் தீரும்.

**கலைவாணி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடத்தே காணப்படவேண்டிய பண்புகள்

செல்வி க. நடராஜா
2ம் வருட மாணவி

ஆசிரியர் என்னும் சொல் 'குற்றங்களை நீக்குபவர்' என்று பொருள் குறிக்கும். சிறுவர் முதல் முதியோர் வரையுள்ள அனைவர் மனதிலுமுள்ள குற்றங்களைக் கல்விகேள்விகளால் போக்குபவர் ஆசிரியர். எல்லோருடைய மனமாசையும் போக்குவதின் வாயிலாக மக்களின் அறிவையும் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் நல்லமுறையில் வளர்ப்பவராவர்.

கல்வி என்னும் சொல் கற்றலாகிய தொழிலையும் கற்கப்படுவனவாகிய நூல்களையும், கற்றலால் உண்டாகும் அறிவையும் குறிக்கும். கற்றலின் மூலம் மனதை நன்னெறியில் நிற்கச்செய்து, நயத்தக்க நாகரீகம் பெறச்செய்து, உலகியலையுணர்ந்து, வளம்கண்டு, நாகரிக வாழ்வில் நலமிக வாழமுடியும். கல்வியே ஒரு நாட்டின் நாகரிகத்துக்கு – பண்பாட்டிற்கு – சமூகநலத்திற்கு – தொழில்வளப் பெருக்கத்திற்கு – முன்னேற்றத்திற்கு மூலகாரணமாய் அமைகிறது.

இத்தகைய கல்வியை வழங்கும் ஆசிரியரை பழைய காலத்தில் 'கணியர்' என்றழைத்தனர். இவர் இல்லாவிடில் மக்கள் மனம் தூய்மைபெற முடியாது; அறநெறியில் செல்லாது; எனவேதான் 'கணக்காயர் இல்லாத ஊர் பாழ்' என்றனர். புத்தகம் உள்ள வீடு புதிய அகமாக விளங்குவது போன்று, ஆசிரியர் உள்ள ஊர் அறிவின் களமாக விளங்குகின்றது. அறிஞர், புலவர், சான்றோர், வித்தகர் எனப் பலபெயர்களால் ஆசிரியர் அழைக்கப்பட்டார்.

இன்றைய ஆசிரியர்களுக்கும் பண்டைய ஆசிரியர்களுக்கும் பல வகையில் வேறுபாடு உண்டு. முன்னர் கல்வி பயின்றதற்குரிய சான்றிதழைக் கொண்டு ஆசிரியரானவர்கள் எவருமிலர். தம் புலமை நலத்தாலேயே ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளனர். புலமையுடன் நல்ல குடிப்பிறப்பும், ஒழுக்கமும், கற்பிக்குந் திறமையும், பிறவற்றையும், நோக்கியே பழைய காலத்தில் ஆசிரியர் பணிக்கமர்த்தப்பட்டனர். இன்று ஆசிரியர் பணிக்குச் சான்றிதழ் ஒன்றே போதுமான தாகக் கொள்ளப்படுகின்றது.

கல்வியியலாளர் ஆசிரியர்களை (I) பயனுள்ள செய்திகளைத் திரட்டித்தரும் (~~Complainer~~) ஆசிரியர் (II) வாழ்க்கையில் சிறப்பான (~~Explainer~~) முறையில் முன்னேற வழிகாட்டும் ஆசிரியர். (III) சிறந்த குறிக்கோள்களை அடைவதற்கான ஆர்வத்தினை (~~Inspirer~~) மாணவர்களின் உள்ளத்தில் வித்திடும் ஆசிரியர் என மூன்று வகையாகப் பகுத்துள்ளனர் ~~இப் பண்புகள் ஆசிரியரிடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.~~

ஆசிரியத் தொழில் புனிதமான தொழில்-புண்ணியத் தொழில்—எழுத்தைத் அறிவிக்கும் தொழில். இதனால் தான் 'எழுத்தை அறிவித்தவன் இறைவன் ஆவான்' என்னும் முதுமொழி தோன்றியது. இத்தகைய தொழிலைச் செய்பவரிடத்தில் குற்றங்குறைகள் இருத்தல் கூடாது; வெறுக்கத்தக்க இழி குணங்கள் இருக்கக்கூடாது; தூய உள்ளம் அன்பு, இன்சொல், இரக்கம், நல்லொழுக்கம் என்பன இருத்தல் வேண்டும். உடல் உளத் தூய்மை, நிலைதவறா மனம், நல்லறிவு, சொல்வன்மை, கற்போர் விரும்பும் தன்மை என்பன இருத்தல் அவசியம்.

ஆசிரியர் தாம் மிகவும் வருந்திக் கற்று அறிந்த கல்வியை மற்றவர்களுக்கு எளிதாகவும் விரிவாகவும் இனிதாகவும் எடுத்துக் கூறிக் கற்பிக்கும் ஆற்றல் தேவை. ஒரு பிள்ளையினுடைய வாழ்வின் முழுமைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாக உள்ளவர் பள்ளியாசிரியர். ஏனெனில் பிள்ளையினுடைய வாழ்வின் பயிற்சியே பள்ளியில்தான் நடைபெறுகின்றது. அந்தப் பயிற்சியை நேரடியாக அளிக்காவிட்டாலும், அறிவுரைகள் மூலமாகவும் சிலவகையான காரியங்கள் மூலமாகவும் ஆசிரியர் மாணவருக்கு அளிக்கின்றார். வாழ்விற்குத் தேவையாகிய நட்புறவுப் பயிற்சி, கடமையுணர்வுப் பயிற்சி, பல்வேறு பழக்கவழக்கப் பயிற்சி ஆகியவை யாவும் ஆசிரியராலேயே அளிக்கப்படுகின்றன.

இதற்கமைய ஆசிரியர் குழந்தைகளின் இயல்புகள் — சூழ்நிலைகள் — தேவைகள் ஆகியவற்றை நன்கறிதல் வேண்டும். இவ் அறிவினை கல்வியுளவியல் வழங்குகிறது. குழந்தைகளது, மாணவர்களது இயற்கையான கவர்ச்சிகள், நாட்டங்கள், திறன்கள் ஆகியவற்றையறிந்து தம்மீது ஆசிரியர் கவனம் எடுக்கிறார் - தமது எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ளார் என்னும் உணர்வு மாணவரிடத்தே ஏற்படும் வகையில் செயற்பட வேண்டியது அவசியம். ஆசிரியர் மாணவருடன் சேர்ந்து தாமும் அவருள் ஒருவர் என்ற மனப்பான்மையை வளர்த்தல் வேண்டும்.

கற்பிக்கும் பாடத்தில் சிறந்த அறிவைப் பெற்றிருக்க வேண்டியது ஆசிரியரிடத்துக் காணப்படவேண்டிய மற்றோர் பண்பு. கற்பிக்கும் பாடத்துடன் தொடர்புடைய மற்றைய பாடங்களிலும் சிறப்பான ஆழ்ந்த அறிவு தேவை. இவ்வறிவே பல பாடங்களையும் இணைத்துக் கற்பிக்க உதவும். இதற்கமைய ஆசிரியர் எப்பொழுதும் கற்றுக்கொண்டிருப்பவராதல் அவசியம். கற்காதவன் கற்பிக்கக் கூடாது. பாட அறிவிலும் பொது அறிவிலும் மேம்பாடு உடையவரையே மாணவர் விரும்புவர். அன்றாடம் தம் பாடபோதனைக்கான ஆயத்தங்களைத் திட்டமிட்டு வகுப்பறையினுள் நுழைதல் வேண்டும். புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி மாணவர் அறிவுப் பயிற்சியைத் தீர்த்தல் அவசியம்.

ஆசிரியரானவர் தனது மாணாக்கருக்கு முன்மாதிரியாக - வழிகாட்டுபவராக விளங்குதல் வேண்டும். மாணவர் விரும்பிப் பின்பற்றத்தக்க நல்ல பழக்கங்கள் நிரந்தரமாக உடையவராதல் வேண்டும். உறுதியான மனவெழுச்சி, பிறர் நலன் பேணல், பொறுமை, அடக்கம், நேர்மை, சுறுசுறுப்பு போன்ற ஆளுமைப்பண்புகள் மாணவரிடத்து நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும். தம் மாணாக்கரிடம் நெருங்கிப் பழகும் அதேவேளை உறுதியாக - கண்டிப்புடன் நடத்தலும் அவசியமாகும்.

மேலும் ஆசிரியர் உலகியலறிவும், தந்திர முறையும், வழிகாட்டும் திறனும், தன்னம்பிக்கையுடன் அன்றாடப் பிரச்சினைகளை அணுகுபவராயும் தன்னை மாற்றிக் கொள்ளலும் அவசியம். தம் பணியில் முழு மனதுடன், முழுவிருப்புடன் ஈடுபடும் அதே வேளை ஆசிரிய சங்கங்களுடன் நற்தொடர்புகளை வைத்துக் கொண்டும், கருத்தரங்குகளில் பங்குகொண்டும் தனது வாண்மையை விருத்தி செய்தல் வேண்டும்.

ஆசிரியர் தாம் வாழும் சமுதாய உறுப்பினருடனும், மாணவரது பெற்றோருடனும் தொடர்பு கொண்டும், சமுதாய நடைமுறைகளில் பங்குகொண்டும், வழிகாட்டியாயும் ஆலோசனை கூறுபவராயும் விளங்குதல் அவசியம். இவ்வறிவை கல்விச் சமூகவியல் பெற்றுக் கொடுக்கின்றது. வருங்காலப் புரட்சிச் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் தாம் உள்ளவர் என்று கருதுபவராக, அதாவது நாளை பெருமையுடன் வாழப்போகும் கல்வி நிபுணரை உருவாக்குபவராகக் கருதி பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் பணிபுரிதல் வேண்டும்.

இத்தகைய பண்புகளையுடைய ஆசிரியரையே மாணவரும், பெற்றோரும், சமூகமும், நாடும் விரும்பும்; போற்றும். இவர்களாலேதான் சிறந்த பிரஜைகளைத் தோற்றுவிக்க முடியும். ஆசிரியர் ஒவ்வொருவரும் இவ்வாறு தமது கடமையுணர்ந்து, கல்விப் பணி புரிந்து வருவார்களேயானால் மாணவர் முன்னேற்றம் அடைவர் என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் துணைச் சாதனங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்.

திரு. வ. நடராசா B. A. (Hons)
ஆசிரியர்,
யா/வரணி மகாவித்தியாலயம்.

"கேட்கிறேன், மறந்து விடுகிறேன்
பார்க்கிறேன், ஞாபகத்தில் வைக்கிறேன்
செய்கிறேன், அனுபவம் பெறுகிறேன்
கேட்டு — பார்த்து செய்வதனால்
விளங்கிக் கொள்கிறேன்"

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் துணைக்கருவிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. ஒரு ஆசிரியர் வெறுமனே சொற்களால் மட்டும் எந்த ஒரு விடயத்தையும் மாணவர்களுக்கு விளக்கிவிட முடியாது. அவ்வாறு விளக்கினாலும் கற்றல் முழுமையாக நடை பெற்றது என்று கூறிவிடவும் முடியாது. அது ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது போலாகி விடும், இதனை ஒத்த வகையில் தான் சங்க இலக்கியத்தில் ஆசிரியருக்கு இலக்கணம் கண்ட நச்சினார்க்கினியார் கூட கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங் கொளக் 'கொடுத்தல்' எனக் கூறுகின்றார். அதாவது ஒரு ஆசிரியரின் கடமைப்பங்கு மாணவனை அறிந்து கற்பிக்கும் விடயங்களை அவர்களின் மனதில் பதியச் செய்யக்கூடியவாறு கற்பித்தலே ஆசிரியருக்குரிய இலட்சணமாகும்.

(Edgar Dale) எட்காட் டேல் துணைக்கருவிகளில் முக்கியத்துவம் பற்றி கூறுமிடத்து வெறும் சொற்களாற் கூறப்படும் கருத்துப் பொருள்களுக்கு உறுதியான வடிவம் கொடுத்து சிந்தனைக்குரிய நிலையை ஏற்படுத்துவதில் காட்சி கேள்வி, துணைக்கருவிகள் முக்கிய இடம் வகிக்கின்றன, என கூறுவதில் இருந்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் துணைச்சாதனங்களின் பயன்பாடு எவ்வளவு அவசியமானது என்பதை ஊகிக்க முடிகின்றது. இதற்கு அமைவாக "புரூணர்" என்பவரும் கற்றல்-கற்பித்தல் செயல் முறையில் துணைச்சாதனங்களின் அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றார். கற்றலானது எப்போதும் அனுபவ வாயிலாகவே இருக்கவேண்டும். இத்தகைய அனுபவவாயிலான கல்வியை வழங்குவதற்கு கற்பித்தல் துணைச்சாதனங்கள் பெரிதும் பயனுடையனவாய் அமைகின்றன. இதனால் இன்றைய கற்பித்தல் துணைச்சாதனங்களின் பயன்பாடு உணரப்பட்டு பல்வேறு மட்டங்களில் செயற்படுத்தப்பட்டும், செயற்படுத்துவதற்கான வழிவகைகள் வளர்க்கப்பட்டும் வருகின்றன. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை இலகுவாக்க பயன்படுத்தப்படும் கருவிகள் அனைத்தும் கற்பித்தல் துணைச்சாதனங்கள் என வரையறுக்கலாம்,

பொதுவாக கற்பித்தல் துணைச்சாதனங்களை பாடசாலைக்குட்பட்ட துணைச் சாதனங்கள் பாடசாலைக்கு வெளியில் உள்ள துணைச்சாதனங்கள் என இருவகைப் படுத்த முடியும். பாடசாலைக்குட்பட்ட சாதனங்கள் கட்புல சாதனங்களாகவோ, செவிப்புல சாதனங்களாகவோ அல்லது பல்லுணர் சாதனங்களாகவோ இருக்கலாம். இவற்றில் படங்கள், வரைபடங்கள், சலனப்படங்கள், சித்திரங்கள், அட்டவணைப் படங்கள், புள்ளிவிபர அட்டவணைகள், பூகோள உருண்டை, தேசப்படங்கள், மாதிரி உருக்கள், உண்மைப் பொருட்கள், வானொலி தொலைக்காட்சி படச்சுருள், பதிவு நாடாக்கள் ஆய்வுகூட கருவிகள், பரிசோதனை போன்றவற்றை குறிப்பிடலாம்.

பாடசாலைக்கு வெளியான கற்பித்தல் சாதனங்களாக பூங்கா, பாதுகாப்பு வளங்கள், தொழிற்சாலைகள், தொல்பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புகழ்பெற்ற இடங்கள் போன்ற வற்றை உதாரணமாக கூறலாம்.

கற்பித்தல் துணைச்சாதனங்களை பயன் படுத்துதல் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பல்வேறு வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆசிரியர் கற்பித்தல் துணைச்சாதனங்களை பயன்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ளும் போது எண்ணக் கருக்களை பிள்ளை இலகுவாக கற்றுக் கொள்ள உதவுகின்றது. இவற்றை பயன் படுத்தி கற்பிக்கும் போது பொருட்களை சொற்களுடன் தொடர்பு படுத்தவும், பொருட் தொகுதியின் பண்புகளை ஒன்றிலிருந்து மற்றதை வேறுபடுத்திப் பார்க்கவும் உதவுகின்றது. உதாரணமாக குருவி என்ற எண்ணக்கருவை கற்பிக்கும் போது அதன் மாதிரி உருவத்தையோ, உண்மைப் பொருளையோ காட்டும்போது பிள்ளை பறவைக்குரிய பண்புகளைக் கொண்டு, இறக்கை, கால் போன்றவற்றை உள்ளடக்குவதோடு அதற்கு பொருத்தமற்ற வேறு இயல்புகளை பிரித்தறியும் திறனும் வளர்ச்சியடைகின்றது. இவ்வாறே கற்பித்தல் துணைச்சாதனங்களை பயன்படுத்தும் போது பொதுமைப் படுத்தும் திறனும் இலகுவாக வளர்ந்து கொள்ளும். சில விடயம் கற்கும்போது அவற்றின் பொதுமைப் பண்புகளை அடையாளம் காணவேண்டும். உதாரணமாக பிள்ளை புலி என்பதை நாய் போன்ற ஏனையவற்றில் இருந்து பிரித்து அறிந்த பின்பே எந்தப் புலியையும் அடையாளம் காணக்கூடிய திறனை பெற முடியும். எனவே இதற்கு இவற்றின் மாதிரிப் படங்களை பயன்படுத்துவது பயனுடைய தாக அமைகின்றது.

கற்பித்தலில் துணைச் சாதனங்களைப் பயன்படுத்தும் போது பிள்ளை கண்ணால் காண்பதாலும், தொட்டு உணர்வதாலும், நுகர்வதனாலும், பொருட்களை சுவைப்பதனாலும் புலக்காட்சி விருத்தியடைகின்றது. அவற்றை ஆய்ந்து அறியும் திறன் மாணவர்களிடையே வளர்ச்சியடைகின்றது. உதாரணமாக விஞ்ஞான பாடங்களில் செய்முறைகளை பரிசோதனையூடாக மேற்கொள்ளும் போது மாணவர்களிடையே ஆய்வுத் திறன் விருத்தியடைகின்றது. இவ்வாறே துணைச்சாதனங்களை நேரடியாக பயன்படுத்தும் போது மாணவர்கள் அனுபவ வாயிலாக கல்வியை பெறவும் மாணவனின் கற்பனைத் திறனும் ஆக்க சிந்தனையும் வளர்ச்சியடைவதுடன் நுண்மதியை விருத்தி செய்யவும் இச்சாதனங்களை பயன் படுத்துவது பல்வேறு வழிகளில் பயனுடையனவாய் அமையும்.

கற்பித்தல் துணைச் சாதனங்களில் குறிப்பாக கட்புல செவிப்புல சாதனங்களை பயன்படுத்தும் போது மாணவர்களிடையே கற்றலில் ஊக்கத்தை ஏற்படுத்த முடியும். படங்கள், தேசப் படங்கள், வரைபுகள் போன்ற எளிய உபகரணங்களை வகுப்பறையில் பயன் படுத்தும் போது குறிப்பிட்ட விடயங்களை மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள உதவுவதோடு கற்கும் செயற்பாட்டில் ஆர்வத்துடன் ஈடுபடவும் முடியும். இவ்வாறே நடித்துக் காட்டுதல், சுற்றுலாக்களை மேற்கொள்ளுதல், செயற்றிட்டம், ஒப்படைகள் போன்றவற்றை வழங்குவதன் ஊடாகவும் கற்கும் விடயம்சார்பாக ஊக்கத்தை ஏற்படுத்த முடியும்.

ஒரு விடயத்தை மகிழ்ச்சியுடனும் விருப்பத்துடனும் கற்கும் போது அது நீண்ட காலம் நினைவிருத்தும் இயல்பு பொதுவானதாகும். எனவே ஆசிரியர் கற்பிக்கும் போது தமது கற்பிக்கும் அலகுடன் தொடர்புடைய பல்வேறு துணைச்சாதனங்களை பயன்படுத்தும் போது பிள்ளைகள் ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் விடயத்தை விளங்கி கற்றுக்கொள்ள முடியும். 1960 இல் எக்ஸ்டெயின், ரொக் ஆகிய இருவரும் செய்த பரிசோதனையில் சொற்களுடன் அதனுடைய படங்களைக் காட்டும் போது உருவத்துடன் தொடர்பு படுத்தப் படாத சொற்களை விட அவை நன்கு ஞாபகத்தில் இருப்பதைக் கண்டார்கள். இதிலிருந்து பிள்ளைகளிடையே ஞாபக சக்தியை விருத்தியடையச் செய்வதற்கு துணைச் சாதனங்கள் பயனுடையவையாக அமைகின்றன. உதாரணமாக சிறு பிள்ளைகளுக்கு படங்களைக் காட்டி சொற்களை கற்பிப்பதன் மூலம் அச் சொற்களை மனதில் இருத்த முடிகின்றது. ஆரம்ப வகுப்புக்களில் இந் நுட்பத்தை நன்கு பயன்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் துணைக்கருவிகளை பயன் படுத்தி கற்பிக்கும் போது குறிப்பாக கண்ணால் காணாத விடயங்களை காட்சிப் படங்கள் மூலம் காண்பிக்கும் போது அவற்றில் பெறும் அகக்காட்சி பிறிதொரு சந்தர்ப்பத்தில் உண்மைப் பொருளை காணும் போது இலகுவாக அடையாளம் காண முடியும். எனவே கற்றல் இடமாற்றம் இடம் பெறுவதற்குக் கற்பித்தல் துணைச் சாதனங்களை பயன்படுத்தி கற்பித்தல் மிகப் பயனுடையதாக அமையும். துணைச் சாதனங்களை பயன்படுத்துவது பிள்ளைகளின் அகக்காட்சியையும் விருத்தியடைய செய்யும்,

உடல் ஊனமுற்றோர் குறிப்பாக கேள்விக் குறைபாடு உடையோருக்கும் மெல்லக் கற்கும் மாணவரை பொறுத்தவரையிலும் கற்பித்தல் துணைச் சாதனங்களை பயன்படுத்தி கற்பித்தலை மேற்கொள்வது மிக அவசியமானதாயும் பயனுடையதாயும் இருக்கும். கேள்விக்குறைபாடு உடைய மாணவர்களைப் பொறுத்த வரையில் ஆசிரியரின் பேச்சு தொனியை அவர்கள் தெளிவான முறையில் கேட்க முடியாமல் இருக்கும். இந் நிலையில் காட்சிப் பொருட்களினூடாக அவர்கள் விடயம் சார்பான விளக்கம் பெற வைப்பது ஆசிரியரின் கடமைப் பங்கும் அவசியமுமாகின்றது. எனவே கேள்விக்குறைபாடு உடைய மாணவர்களைப் பொறுத்தவரையில் அதிகளவு துணைச் சாதனங்களை உபயோகித்தல் மிக முக்கியமாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக வகுப்பறையில் கற்பித்தலை மேற்கொள்ளும் போது மாணவரின் கவனத்தை ஈர்த்தல், கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு அவசியமாகின்றது. துணைச் சாதனங்களை பயன்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ளும்போது மாணவர் மகிழ்ச்சிகரமாகவும் ஆர்வத்துடனும் ஈடுபடும்போது மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதுடன் வகுப்பறை அமைதியையும் பேணலாம்.

துணைச் சாதனங்களை பயன்படுத்தி கற்பிக்கும் போது கற்றலானது ஒரு விருப்புக்குரிய செயலாக மாறுவதுடன் மொழித் திறன், சொல்வளம், பேச்சுத்திறன் போன்றவை விருத்தியடையவும் முடியும்.

துணைச்சாதனங்களை பயன்படுத்தி ஆசிரியர் கற்பிக்கும் போது மாணவர்களுக்கிடையே கலந்துரையாடல்கள் இடம் பெறவும் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே கலந்துரையாடல் இடம்பெற முடிகின்றது. இதனால் ஆசிரியர் - மாணவர் உறவு, மாணவர் மாணவர் உறவு, விருத்தியடைய முடியும். அவ்வாறே ஆசிரியர் துணைச்சாதனங்களை பயன்படுத்தி கற்பிக்கும் போது மாணவர்கள் மனதில் பரந்த பாடப் பொருளை குறுகிய பாட வேளையில் கற்பிக்க முடியும். இதனால் நேரகாலமும் மீதப்படுத்தப்படுகின்றது, அதனூடாக வகுப்பறையிலும் பாடத்திலும் ஓரே இசைவான தன்மை காணப்படும்.

இவ்வாறாக ஆசிரியர் கற்பித்தலை மேற்கொள்ளும் போது துணைக்கருவிகளை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் ஆயிரம் சொற்களுக்கு பதிலாக ஒரு படம் கற்பித்தலுக்கு போதுமானது என்ற கூற்றில் இருந்து புலனாகின்றது. எனவே அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தக் கூடிய கற்பித்தலுக்கு உபகரணப் பயன்பாடு அவசியமாகின்றன.


உசாத்துணை நூல்கள்:

1. K. லொவல் — கல்வி உளவியலும் சிறுவரும்
2. பேராசிரியர் S. சந்தானம் — கல்வி உளவியல்
3. பேராசிரியர் V. ஆறுமுகம் — வகுப்பறைக் கற்பித்தல்
4, கலாநிதி S. முத்துலிங்கம் — கல்வியியல்
5. பேராசிரியர் ப. சந்திரசேகரம் — கல்வித் தத்துவம்
6. கந்தவனம் — இலங்கையில் ஆசிரியத் தொழில்
7. கல்வியின் உளவியல் அடிப்படை — தேசிய கல்வி நிறுவன வெளியீடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பாதையில் செய்முறைப் பாடசாலைகளின் முக்கியத்துவம்

தா, அமிர்தலிங்கம் *M.A.*
*விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவனம்.*

கல்வி மெய்ப்பொருளைக் காணவிளைகின்றது. மனிதனை பூரணமாக்க கல்வி முனைகின்றது. பூரண மனிதனை உருவாக்கி சமூகத்தையும் நாட்டையும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவும் வல்லது கல்வி. கல்வி மனித நமைச்சலை நீக்கவல்லது. அபிவிருத்தி குன்றிய சமூகம் கூட கல்வியைத் துணையாகக் கொண்டு முன்னேறியதை சர்வதேச வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. இன்று கல்வி எல்லோர்க்கும் உரியது. அது மனிதனின் பிறப்புரிமை. இந்நிலையில் எல்லோருக்கும் கல்வியை இலவசமாக வழங்க முற்படுகின்ற பொழுது கல்விச் செலவீனம் அதிகரிக்கின்றது. அரசின் மொத்த செலவீனத்தில் 10 % கல்விக்காகச் செலவிடப்படுகின்றது. இதனால் பொருளாதார அபிவிருத்திக்கான முதலீட்டுச் செலவீனங்கள் பாதிக்கப்படுகின்றன. வேறு வாய்ப்புக்களை உருவாக்க முடியாமல் போகின்றது. இதனால் கற்றோர் வேலையின்மை அதிகரிக்கின்றது. கல்வி விரும்புகின்ற தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சிகரமான வாழ்க்கையையும் உருவாக வேண்டுமெனின் நாட்டில் கற்கும் சமூகமும் அதன் ஊடே ஆயுட்காலக் கல்வி பெற வேண்டிய நிலையும் உருவாக வேண்டும்.

டட்லி சியஸ் என்னும் அறிஞர் ஒரு நாட்டில் ஏழ்மை, வேலையின்மை, வருமான ஏற்றத்தாழ்வு இருக்குமேயாயின் அந்நாடு அபிவிருத்தியடைந்த நாடாகக் கருத முடியாது என்றார். ஒருநாட்டில் உற்பத்தி பெருகி செழிப்பு ஏறபட வேண்டும். அந்நிலையில் தொழில்வாய்ப்புக்களும் பெருமளவு உருவாகும். மக்களிடையே இருக்கின்ற வருமான ஏற்றத்தாழ்வு குறையுமாயின் அபிவிருத்தி அங்கே ஏற்படும். இத்தகைய ஒரு நிலை உருவாக அந்நாட்டின் பாடசாலைகள் பல அடிப்படைச் செயல் முறைகளை உருவாக்க வேண்டும். நான் என்ற மமதை குறைந்து நாம் என்ற மனப்பாங்கு வளரவேண்டும். மனிதனது எல்லையற்ற தேவைகளை நிறைவு செய்வதற்காக வளங்களும் தொழில் நுட்பங்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மேல்மட்டத் தொழில்நுட்பம், இடைநிலைத் தொழில்நுட்பம், கீழ்மட்டத் தொழில் நுட்பம் அவசியம். ஆனால் மனிதன் தேவைகளில் எவை முக்கியமானவை எவை முக்கியமற்றவை எனக்கருதாது எல்லையற்ற எல்லாத் தேவைகளையும் சட்டுப்பாடின்றி நிறைவு செய்கின்றபோது சூழல் மாசடைகின்றது வளங்கள் வீணே சிதறடிக்கப்படுகின்றன. எனவே எல்லையற்ற தேவைகளை நிறைவு செய்கின்ற நிலையை மாற்றி எத்தேவைகள் முக்கியமோ அத்தேவைகளை நிறைவு செய்வதற்கே முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். இந்நிலையில் மட்டான வளங்களை சிக்கனமாக உபயோகித்து உச்சப் பயன்பாடு பெறுகின்ற தன்மைகள் வளர்க்கப்பட வேண்டும். தொழிலின்மையானது நாட்டினுடைய அமைதியின்மைக்கும் சமுதாயத்தின் விழுமியங்களுக்கும் ஆபத்தை உண்டாக்கக் கூடியவை. எனவே நாட்டின் வளங்களுக்கு ஏற்ப தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் கல்விமுறையொன்று அவசியம். இச்சந்தர்ப்பத்தில் தொழில் மகத்துவம், சிக்கனம், வரையறையான வளங்கள், சமூக சமத்துவம், எல்லையற்ற தேவைகளென்ற நிலை மாறி மட்டான தேவைகள், (அடிப்படைத் தேவைகள்) தனியாள் விருத்தியும் சமூக விருத்தியும் போன்ற எண்ணக்கருக்கள் இளமையிலிருந்து வளர்க்கப்படவேண்டும். இத்தகைய செயல் முறைகள் மட்டான வளங்களிலிருந்து உச்சப்பயனைப் பெற முடியும். இதற்கு செயல்முறையான கல்விச்யாடு இணைந்த பாடசாலைகள் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் கல்வியாளரான ஜோன் டுயி பொருள் உற்பத்தி செய்வது எவ்வாறு என்பதில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் கால்மாக்ஸ் அறிவு ரீதியான கல்வி, உடற் கல்வி, தொழில் நுட்பம் ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்த வகையில் மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றார். மாணவர்களை உற்பத்திக் கருமத்தில் ஈடுபடுத்த வேண்டும். 9—12 வயது வரையான மாணவர்கள் இரண்டு மணித்தியாலங்களும், 13—14 வயதிற்கிடைப்பட்டவர்கள் நான்கு மணித்தியாலங்களும் 15—17 வயதிற்குட்பட்டவர்கள் ஆறுமணித்தியாலங்களும் உற்பத்திக் கருமத்தில் ஈடுபடுத்தப்படவேண்டுமென்றார். இதிலிருந்து மாக்ஸ் சும் ஜோன்டுயியும் அபிவிருத்திசார் கருமங்களிலிருந்து அறிவு வளர்ச்சியை வேறாக்கக்கூடாது என்பதை வலியுறுத்தினார்கள். ருசியா நாடு 14 ஐந்து ஆண்டுத்திட்டங்களை உருவாக்கி அதன்வழி அபிவிருத்தியடைந்தமைக்கு மிகமுக்கிய காரணமாக இருந்தது உற்பத்தியுடன் இணைந்த கல்வியே ஆகும்.

ஜோன்டுயி 1897ம் ஆண்டு தனது கல்வித்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஆய்வுகூடப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். மனிதனது உந்தல்களை அடிப்படையாகக் கொண்டு இப்பாடசாலையின் கலைத்திட்டம் அமைக்கப்பட்டது. சமூக உந்தல், அமைப்பு உந்தல், ஆராய்ந்து கண்டு பிடித்தலுக்கான உந்தல், கலையம்சங்களை வெளிப்படுத்தும் உந்தல் போன்ற, உந்தல்கள் மனிதனுக்கே உண்டு. இந்நான்கு வகையான உந்தல்களை ஈடுசெய்யும் முறையில் பாடவிதானம் இருந்தால்தான் குழந்தை வளர்ச்சியடைந்து சமூகப் பொருத்தப்பாட்டினைப் பெறமுடியும். எனவே கல்வி என்பது அனுபவங்களின் ஊடாகப் பெறப்பட வேண்டும். மாணவர்களை வாழ்க்கைக்கு தயார்படுத்தல் அல்ல, அவர்கள் வாழ்ந்து அனுபவத்தைப் பெற வைப்பதே கல்வியென்றார் ஜோன்டுயி. அனுபவத்தைப் பெறுவதற்காக செயல்முறைக் கல்வித்திட்டத்தை உருவாக்கி அதனைத் தனது ஆய்வுகூடப் பாடசாலையிலேயே நடைமுறைப் படுத்தினார். சமையல், தையல், மரவேலை போன்ற பாடங்கள் இடம்பெற்றன. இதற்காக மாணவர்கள் மூளையையும், கைவேலையையும் தொடர்பு படுத்த வேண்டும். இவ்விதம் மாணவர்கள் செயற்படும் போது வாழ்க்கைக்கு தேவையான உணவு, உடை, வீட்டுவசதிகள் ஆகியவற்றை அறிந்து கொள்கின்றனர். மேலும் இவற்றின் சமூகப் பெறுமானங்களையும் வாழ்க்கை விழுமியங்களையும் கற்றுக் கொள்கின்றனர். அவருடைய செயற்திட்டத்தின்படி பாடசாலை சமூகத்தின் ஒரு பிரதிவிம்பமாகக் காணப்பட்டது. இத்தகைய பாடவிதானத்தைச் செயற்படுத்தியமையால் மாணவர்கள் செயற்பாட்டு அறிவுடன் அக்காலச் சமூகத்திற்குரிய பொருத்தப்பாட்டினையும் பெற்றார்கள். இத்தகைய செயல்முறைப் பாடசாலைக்கல்வி அமெரிக்காவில் பரவியதும் நாடும் வளர்ச்சியடைந்தது.

காந்தி அடிகள் கல்வி பற்றிக் குறிப்பிடுகையில் ''முத்திக்குத் தகுதிபெறச் செய்வது கல்வியாகும். எது சித்தத்தை தூய்மைப் படுத்தவில்லையோ. மனதையும் புலன்களையும் அடக்கப் பயிற்சியளிக்கவில்லையோ, அச்சமின்மையும் தன்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதும் எதிலிருந்து உண்டாகவில்லையோ, ஜீவனத்திற்குரிய உபாயத்தைக் காட்டவில்லையோ, அடிமைத் தளைகளை தகர்த்து எறிந்து சுதந்திரமாக வாழ்வதற்கு தேவையான துணிவும், ஆற்றலும் உண்டாகவில்லையோ அந்தக் கல்வியினால் எத்தகைய அறிவுப் பொக்கிசம் சேமித்துக் கிடந்தாலும் தர்க்க தேர்ச்சியும் பாசப் பசிற்சியும் பொதிந்திருந்தாலும் அது நல்ல கல்வியாகாது அரைகுறையான கல்வியே யாகும்'' - (ஆதாரம் காந்திய நவநீதம்)

காந்தி அடிகள் தலை, கைகள், இதயம் ஆகிய மூன்றினதும் சமநிலையான வளர்ச்சியைக் கல்வி கொண்டுவந்து அவனை முழு மனிதனாக்க வேண்டுமென்றார். இங்கு அவர் குறிப்பிட்டது அறிவு, திறன்கள், மனப்பாங்கு, ஆகியவற்றின் வளர்ச்சியேயாகும். இவ்வாறு பூரண வளர்ச்சியடையும் மனிதனால் கிராமத்தின் தேவைகளை நிறைவு செய்வதாகவும் இருக்க வேண்டும். காந்தி அடிகள் கல்வி மூலம் தனிமனித விருத்தி கிராம அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி போன்றவற்றை அடைய முடியுமெனக் குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டார். 1937ல் ஆதாரக்கல்வி முறையை இந்தியாவிற்கு அறிமுகம் செய்து வைத்தார். இக்கல்வித் திட்டத்தின்படி எல்லாக்குழந்தைகளும் ஆரம்பக்கல்வியை இலவசமாகப் பெற வேண்டும். தாய்மொழியில் கல்வி பெற வேண்டும். மேலும் ஒரு கைப்பணியை பயிற்றுவிக்கவும் வேண்டும். கைப்பணியினால் உருவாக்கப்பட்ட பொருட்களை விற்று பாடசாலையின் செலவின் ஒருபகுதி ஈடு செய்யப்பட வேண்டும். எனவே காந்தி அடிகளின் கல்வித்திட்டத்தில் செயல் முறையுடன் கூடிய கல்வியே ஆளுமை பொருந்திய பூரணமான மனிதன் ஒருவனை உருவாக்க வழிவகுக்கும் என்பதைப் புலப்படுத்துகின்றது.

செய்முறைப் பாடசாலைகள் அபிவிருத்திக்கு மிக அவசியம் என்பது இப்பொழுது புலனாகும். எனினும் செயல்முறைப் பாடசாலைகள் வர்க்க பேதத்தை தொடர்ந்து வைத்திருக்க உதவுகிறது. என்ற குறைபாடு இருக்கிறது. அதிக நன்மைகள் விளைவிக்கின்ற செய்முறைப் பாடசாலைகள் இக்குறைபாட்டினை நீக்க முற்படும். மனிதனது மனப்பாங்குகள் வளர்ச்சியடைகின்ற போதும், விருத்தியடைகின்ற போதும் இவை தானாகவே அற்றுப் போகும். கல்விச் செலவினம் இலங்கையில் அதிகரித்துச் செல்கின்றது. இத்தகைய செலவின் ஒருபகுதியை இச் செயற்திட்டத்தினால் அதாவது மாணவர்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்று ஈடுசெய்யமுடியும். இலங்கையின் இன்னோர் பிரச்சனை கற்றோர் வேலையின்மையாகும். மாணவர்கள் ஏதாவது ஒரு தொழிலைச் செய்யக்கூடிய வல்லமையை செயல்முறைப் பாடசாலைக் கல்வி உருவாக்குவதினால் சுயமுயற்சியால் முன்னேற முடியும். எனவே கற்றோர் வேலையில்லாமல் இருப்பது என்பது நீங்கும். மேலும் சமுதாயத்தில் நிலவும் தொழில்களை விஞ்ஞானத்தின் துணைகொண்டு நவீனமயப்படுத்தவும் இக்கல்வித்திட்டம் உதவிபுரிகின்றது அபிவிருத்திக்கு இத்தகையதோர் அறிவு மிக அவசியமாகும். மாணவர்கள் செயல்முறை வேலைகளில் ஈடுபடும் போது அங்கெழும் பிரச்சனைகளையும் விடுவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அதனால் நாம் என்ற தன்மையை வளர்த்துக் கொள்கின்றனர். இவற்றினூடாக தாய்நாட்டை நேசிக்கவும், தாய்நாட்டின் வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும் கற்கின்றனர். செயல்முறைக் கல்வி கிராமங்களினுடைய தனித்துவம் கெடாமல் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது. இதனால் சூழல் மாசடைகின்ற தன்மையும் நீக்கமுறும். எனவே நாட்டிற்கு ஏற்ற செயற் திட்டங்களை வகுத்து அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கு செயல் முறைப் பாடசாலைகள் அவசியமாகும்.

தன்சானியா கல்வியைச் சரியான முறையில் பயன்படுத்தி முன்னேற்றம் அடைந்துள்ளது அல்லது அபிவிருத்தியடைந்துள்ளது என ஐக்கிய நாடுகள் விஞ்ஞான கலாசாரத் தாபனம் கூறுகிறது. இத்தகைய முறையை ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளும் பின்பற்றலாம். இந்நாடு 1963 ம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றது. இங்கு பல இன மக்கள் (பண்டு இனத்தவர், அராபியர், இந்தியர்) வாழ்கின்றனர். சுதந்திரமடையும் போது வறுமை, எழுத்தறிவின்மை அந்நாட்டில் காணப்பட்டது. இவர்கள் வெளிநாட்டுக் கலாச்சாரத்தை ஒதுக்கி தங்கள் சுதேசிய கலாச்சாரத்தை முன்னேற்ற வெளிநாட்டு உதவிகள் எதுவுமின்றி நடவடிக்கை எடுத்தனர். ஆங்கிலத்திற்குப்பதிலாக சுவாகினிமொழியை அரசகரும மொழியாக்கியதோடு கல்வி மொழியாக்கினார்கள். அப்போதனா மொழியைக்கொண்டு சுதேசியர்களது திறன்களை விருத்திசெய்து நாட்டை முன்னேற்றினார்கள். பாடசாலையை ஜனசக்தி நிலையமாக்கி அங்கு முதியோர்க்குக் கல்வி வழங்கப்பட்டது. எழுத்தறிவின்மை நீக்கப்பட்டது. விஞ்ஞான முறைகள் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. இதனூடாக விவசாய வளர்ச்சியை அந்நாடு அடைந்தது. முதியோர் கல்வியூடாக குழந்தைகளின் வளர்ச்சி, போசாக்குப் பற்றிய அறிவு முதியோர்க்கு ஊட்டப்பட்டது. ஏழுவயதுவரையும் குழந்தைகள் பெற்றோரிடமே தங்க வேண்டியிருந்தது. பெற்றோரின் வழிநின்று அவர்கள் உற்பத்திக் கருமங்களிலும் பங்கு பற்றினர். இதனால் சிறு எளியதொழில் நுட்பங்களை அவர்கள் அறிந்தனர். ஏழுவயதின் பின்னர் ஆரம்ப் பாடசாலைகளில் ஆறு ஆண்டுக் கல்வி அரசினால் இலவசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்பட்டது. பிள்ளைகளுக்கு எழுத்தறிவுடன் நாட்டின் இயற்கை வளங்கள் பற்றிய அறிவும் போதிக்கப்பட்டது. இக்கல்வியானது கட்டாயக் கல்வியாக நடைமுறைப் படுத்தப்பட்டது. தனியார் துறையினர் அங்கு ஆரம்பக்கல்வியை வழங்குவதில்லை. இடைநிலைக் கல்வியைப் பொறுத்தவரையில் தனியார்துறையினால் அளிக்கப்பட்டது. அதுவும்உற்பத்திக் கருமங்களுடன் இணைந்த கல்வியாகவே காணப்பட்டது. ஒவ்வொரு பாடசாலைக்கும் விளை நிலங்கள் கொடுக்கப்பட்டன. மாணவர்களின் உதவியுடன் அவ்விளைநிலங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அங்குள்ள விளைபொருட்களைக் கொண்டு பாடசாலைச் செலவினத்தின் ஒரு பகுதி ஈடுசெய்யப்பட்டது. அரசும் மாணவர்களிடமிருந்து ஒரு தொகைக் கட்டணத்தை அறவிட அனுமதி வழங்கியது. மாணவர்களும் செயல்முறையுடன் இணைந்து சமூகப் பொருத்தப்பாடுடையவர்களாகவும் நாட்டுப் பற்றுள்ளவர்களாகவும் வளரலாயினர்.

இலங்கையில் குரு சீசியக் கல்விமுறைகளில் செய்முறைகளும் காணப்பட்டன. இத்தகைய கல்விமுறை அந்நியர் ஆட்சிக் காலத்தில் தளர்வுறலாயிற்று. பின்னர் ஏட்டுக்கல்வியுடைய பாடசாலைகள் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தன. 1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டபோது இலங்கையர்களுக்கு உள்நாட்டு நிர்வாகத்தைப் பரிபாலிப்பதற்கு நிர்வாகக் குழு ஆட்சிமுறை வழி வகுத்தது. கல்வியை நிர்வகிக்க கல்விக் குழு பொறுப்பாக இருந்தது. 1932ல் கண்டியிலுள்ள ஹந்தஸ்ஸ என்னும் கிராமத்தில் கிராமிய அபிவிருத்திக் கல்வித்திட்டத்தின் கீழ் செயல்முறைப் பாடசாலைகள் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது. 1939ல் ஏறக்குறைய 296 பாடசாலைகள் நாடுபூராகவும் இயங்கின. இப்பாடசாலைகள் 6ம் வகுப்பிலிருந்து நடைபெற்று வந்தன பாடசாலை நாட்களில் காலையில் 2½ மணித்தியாலங்கள் செய்முறைப் பயிற்சி கொடுக்கப்பட்டன மாலையில் கோட்பாட்டுக் கல்வி வழங்கப்பட்டது. அதில் மொழி, இலக்கியம், சங்கீதம், சுகாதாரம், தொழிற்கல்வி, பிரதேசத்தைப்பற்றிய அறிவு உள்ளடக்கப்பட்டிருந்தது. கல்வியானது மாணவர்களுக்கு அனுபவங்களின்ஊடே வழங்கப்பட்டது.

1913ம் ஆண்டு திரு C. W. W. கன்னங்கரா தலைமையில் அமைக்கப்பட்ட குழு இலவசக்கல்வியைச் சிபார்சு செய்தது. அத்தோடு மூன்று வகையான பாடசாலை அமைப்பு முறைகளையும் சிபார்சு செய்திருந்தது. சிரேஷ்ட பாடசாலையில் முதல் 5% மான மாணவர்களும் இடைநிலைப் பாடசாலையில் அடுத்த 15% மான மாணவர்களும் மிகுதி 80% மான மாணவர்கள் செயல் முறைப் பாடசாலைகளில் கல்விகற்க அனுமதிக்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டது. இதனால் 14 வயது வரை எல்லோருக்கும் கல்விகிடைக்கக் கூடியதாக இருந்தது. செயல் முறைப் பாடசாலைகளில் அவர் அவர் ஆற்றலுக்குஏற்ப மூன்று ஆண்டுகள் (11—14 வயது வரை) கற்பதற்குரிய பாடவிதானமும் இருந்தது. அதேநேரத்தில் ஆரம்பக்கல்வி சகலருக்கும் அளிக்கப்பட வேண்டுமென்றும் அதனை முடித்தவர்களையே பின்னர் இம் மூன்று வகைப் பாடசாலைகளிலும் அனுமதிப்பதென சிபார்சு செய்யப்பட்டது இவ் முப்பாகுபாட்டு முறையான செய்முறைப் பாடசாலைகளை நடைமுறைப் படுத்தியிருந்தால் இன்றைய பல கல்விப் பிரச்சனைகள் தோன்றியிராது. மேலும் 1932ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கிராமியக் கல்வி அபிவிருத்தித் திட்டம் வளர்ச்சி பெற்று புதியதொரு பரிநாமத்தை பெற்றிருக்கும். ஆனால் இலவசக் கல்வி பற்றிய சிபார்சு மட்டுமே அமுல்படுத்தப் பட்டதேயொழிய பாடசாலை அமைப்பு முறைபற்றிய சிபார்சுகள் அமுல் நடத்தப் படாமலே கைவிடப்பட்டது.

இரண்டு, மூன்று தசாப்தங்களின் பின் 1972 ம் ஆண்டு கல்வி பற்றிய சீர்திருத்தங்களில் தேசிய சேவை பற்றிக் குறிப்பிடப் பட்டிருந்தது. அத்தேசிய சேவையில் 9-ம் ஆண்டு முடிவில் இடம்பெற்ற தேசியக் பொதுக் கல்வித் தராதரப் பத்திரம் (N. C. G. E) முடித்த மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் தேசிய சேவை முகாம்களின் நோக்கங்கள் வருமாறு:-

1. ஏற்கனவே தொழில்நுட்பப் பாடங்களில் பெற்ற திறன்களை விருத்தி செய்தல்
2. கல்வி வழங்கல்
3. ஒழுங்க முறையான உளப்பாங்கை விருத்தி செய்தல்

இந்நோக்கங்களுடன் அமைக்கப்பட்ட முகாம்களில் கமத்தொழில் கட்டிடவேலை, நீர்பாசனத்திட்ட வேலைகள், போன்ற தொழில்சார் துறைகளில் நாள் ஒன்றிற்கு நான்கு மணித்தியாலங்கள் செய்முறைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடவேண்டும். மேலும் மூன்று மணித்தியாலங்கள் எத்தொழிலில் ஈடுபட்டார்களோ அதுசம்பந்தமான கோட்பாட்டுக்கல்வி அளிக்கப்படும். இந்த முகாம்களில் ஒரு வருடத்தை முடித்தவர்களுக்கு குறுகிய கால தொழில் நுட்பப் பயிற்சி வழங்கவும் அதில் உயர்கல்வி பெறவும் ஏற்பாடுகள் செய்யலாமென கல்விச் சீர்திருத்தங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆட்சி மாற்றத்தின் காரணமாக இத்திட்டம் செயற்பட முடியாமல் போய் விட்டது.

தொழில் நுட்பப் பாடங்கள் என்ற ரீதியில் ஒரு சில மணி நேரங்கள் மாணவர்கள் செய்முறைகளில் ஈடுபடுவதனால் அது ஒரு கண்காட்சி வித்தையாகத்தான் இருக்குமேயொழிய மாணவர்களது மனப்பாங்கு வளர்ச்சியில், திறன்கள் வளர்ச்சியில் அதிகளவு தாக்கத்தை அது ஏற்படுத்தவில்லை. 1981ல் வாழ்க்கைத் திறன்கள் என்ற ஒரு பாடம் தொழில் நுட்பப் பாடங்களுக்குப் பதிலாகக் கொண்டு வரப்பட்டது. இதுவும் சொற்ப பயன்களையே ஏற்படுத்தின.

> "கேட்டேன் மறந்துவிட்டேன்
> பார்த்தேன் ஞாபகமிருக்கிறது
> செய்தேன் புரிந்து கொண்டேன்"

இவ்வெடுகோளின்படி மற்றவர்கள் சொல்வதைக் காதால் கேட்பது, கண்ணால் பார்ப்பது போன்றன உடலின் ஐம்பொறிகளில் ஒவ்வொரு பொறிகளுக்கு மட்டுமே தொழிற்படுகின்றன. ஆனால் செயல்முறைகளுடன் கூடிய கல்வி ஐம்பொறிகளுக்கும் வேலை கொடுத்து பூரணமான மனிதனை உருவாக்குவதில் பெரும் வெற்றியைப் பெறுகின்றது. எனவே உற்பத்திக் கருமங்களுடன் அல்லது தொழில்சார் செயல் முறைகளுடன் கூடிய பாடசாலைக் கல்வி மாணவர்களுக்கு வாழ்க்கைக்குரிய பல அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதோடு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு தனியார் விருத்தியும், சமூகவிருத்தியும், பொருளாதார விருத்தியும் கொண்டுவரவல்லது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

இறுதியாக 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் எமது இளம் சந்ததியினர்க்கு என்ன கல்வியை வழங்க வேண்டுமென்ற கேள்வி எழுகின்றது. இதற்கு அடிப்படையான சில அம்சங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. எண், எழுத்து, வாசிப்பு என்பனவற்றின் முக்கியத்துவம் ஆரம்பக் கல்வியில் வலியுறுத்தப்பட வேண்டும்.
2. முன் ஆரம்பக் கல்வியில் இருக்கும் சமமின்மை நீக்கப்பட வேண்டும். அதில் அரசு வழிகாட்டலை வழங்கலாம்
3. எல்லோருக்கும் கல்வி பிறப்புரிமையாதலால் 16 வயது வரை கட்டாயக் கல்வி பெறும் வகையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் இதனால் மாணவர்களில் 4·5% மாக இருக்கும் இடைவிலகலை நீக்கமுடியும்
4. ஆரம்பக் கல்வியில் ஆக்கம் என்ற பா. .ம் விரிவாக்கப்பட வேண்டும். பிள்ளைகள் பொருட்களை உருவாக்கி அவற்றைப் பாடசாலைச் சமூகத்தில் கொண்டு சென்று சந்தைப்படுத்தக்கூடிய முறையில் பாடவிதானம் அமைய வேண்டும்
5. மாணவர்களின் நலன்புரி சேவைகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் உதவி தேவைப்படும் மாணவர் குழுக்களை இனங்கண்டு நலன்புரி சேவைகளை விரிவாக்க வேண்டும். பற்சுகாதாரம், தடுப்பு ஊசி ஏற்றல், ஊட்டச்சத்தினை வழங்கல், நரம்பு சிகிச்சையென பாடசாலை சுகாதார வசதிகள் வழங்கல் வேண்டும்.

   "Sound Mind in a Sound body"
6. மாணவர்கள் பாடசாலைக்கு வருவதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர் இதனைப் போக்கும் வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் இலவசமாகவோ குறைந்த கட்டணத்திலோ போக்குவரத்து வசதிகளை வழங்க முன்வர வேண்டும்.
7. கிராமப்புற மாணவர்களின் வாசிப்பு மிகவும் குறைந்து செல்வது கவலைக்குரிய அம்சமாகும். இதனை நீக்கப் பாடசாலை நூல் நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். பாடசாலைகள் இணைந்து நடமாடும் நூலக சேவையை பாடசாலை மட்டத்தில் உருவாக்க வேண்டும்.
8. பாடசாலைகளின் அபிவிருத்தி கருதி நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இதன் ஊடாக பாடசாலையின் எதிர்காலத் தேவைகளான பௌதிகவளம், தளபாடவசதிகள், ஆய்வுகூட வசதிகள், ஆசிரிய வளம், போன்றன இனங்காணப்பட்டு அவற்றை நிறைவு செய்யும் வகையில் பாடசாலை மட்டத்தில் செய்திட்டங்கள் (PROJECT) உருவாக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இடைநிலைக் கல்வியில் மாணவர்களின் எதிர்கால அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய முறையில் அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், வளர்க்கப்படல் வேண்டும். இதற்கு ஏற்ற முறையில் செயல் முறைகள் இடம்பெற வேண்டும்.

அ) காந்தியடிகள் கூறிய மாதிரி தையற் கலை, சமையற்கலைகளை எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டும்

ஆ) தொழிற்சாலைகள் பாடசாலைகளுடன் இணைய வேண்டும். அங்கு மாணவர்கள் மரம்' உலோகங்களை மூலப் பொருட்களாகக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

இ) பாடசாலைக்கு விளைநிலங்கள் வேண்டும். அங்கு மாணவர்கள் பயிர்களை வளர்க்கவும், விலங்கு வேளாண்மை, வீட்டுத்தோட்டம் பற்றிய அறிவைப் பெறுவர்.

10. பாடசாலைக்கு வேண்டிய நிதியின் ஒரு பகுதி மாணவர்களின் உற்பத்திப் பொருட்களை விற்றுப் பெற்ற வருமானத்தின் ஊடாக ஈடு செய்ய வேண்டும். இதனால் அரசின் அதிகரித்து வரும் கல்விச் செலவினம் குறைந்து செல்கின்ற நிலையும் ஏற்படும்

11. உயர் கல்வித்துறையில் பல புதிய துறைகள் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். கடல்வளத்துறை, குடிசைக் கைத்தொழில், அபிவிருத்தி, அலங்காரக் கைத்தொழில், வனப் பாதுகாப்பு, சூழல் அசுத்தமாகாது தடுத்தல், கிராம அபிவிருத்தி போன்ற புதிய துறைகளில் உயர் கல்வி வாய்ப்புக்கள் விரிவடைய வேண்டும்.

12. விவசாய, தொழில்நுட்ப பல்கலைக் கழகங்கள் அமைய வேண்டும்

13. முதியோர் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும் மாணவர்களைப் பொறுத்த வரையில் குடும்பங்களும் கல்விக் கூடங்களே. அங்கு உருவாகின்ற, பின்பற்றுகின்ற மனப்பாங்குதான் அவன் மனதில் உரம் பெற்று நிற்கின்றது. அதுவே வாழ்க்கை பூராகவும் அவனைத் தொடர்கின்றது. தீர்மானங்களை அவன் மேற் கொள்கின்ற பொழுது அதில் பங்கு பற்றுகின்றான். எனவே தாய், தந்தையர் சிறந்த வழிகாட்டலை கல்வி மூலம் பெற வேண்டும். புதிய மாற்றங்களுக்கு இடம் கொடுக்கும் வகையிலும், பிள்ளைகள் நல்லவற்றைப் பெறும் வகையிலும் முதியோர்கள் வழிநடத்தப்பட வேண்டும். இதற்கு முதியோர் கல்வியில் குடும்ப ஆலோசனைப் பிரிவுகள் அமைதல் வேண்டும் குழந்தை வளர்ச்சிக்கும் இது பெரும் துணையாக அமையும்

14. ஊனமுற்றோர் கல்வி விரிவாக்கப்பட வேண்டும்

இறுதியாக என்றும் கற்றுக்கொண்டு இருக்கின்ற சமூகம் உருவாக வேண்டும். இதன் வழி ஆயுட்காலக் கல்வித் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் இதுவரை கூறிய அம்சங்களில் கல்வி விரிந்து செல்லுமாயின் எல்லோருக்கும் கல்வியென்ற பிறப்புரிமை அம்சம் நிறைவடைவதுடன் நாடும், மக்களும் அபிவிருத்திப் பாதையில் செல்வர் என்பது உறுதி.

உசாத்துணை நூல்கள்:


1. சமுதாயத்தின் கல்விக்கொள்கை பற்றிய சிந்தனைகள் — பேராசிரியர் வ. ஆறுமுகம் — ஊற்று
2. கல்வியின் வரலாற்று அடிப்படை — தேசிய கல்வி நிறுவனம்
3. கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும் — தொலைக் கல்வித்துறை
4. புதிய பாதை 1972
5. 1981ம் ஆண்டுக் கல்விச் சீர்திருத்தங்கள்
6. 1964, 1966 கல்வி வெள்ளை அறிக்கை
7. Educational Issues of Today Edited By W. R. NIBLETT
8. கலைஞானம்—1981, 1982 — வெளியீடு—கல்விக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
9. ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை 1990
10. காந்திய நவநீதம்—கி. க. மஷ்ருவாலா மொழிபெயர்ப்பு - பேரா. கிருஷ்ணமூர்த்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு, திறன், மனப்பாங்கு

திருமதி: தெய்வநாயகம், கிருஷ்ணசாமி
(2 ஆம் வருட மாணவி)
யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.'

"நம் அன்றாட வாழ்விலே கண்டும் கேட்டும், கற்றும் ஆராய்ந்தும் உணர்ந்தவை பல, இவை நம்மனத்தே பதிந்து விடுவதனால் அறிவு பெறுதற்குத் துணையாக அமைகின்றன. இதனை ஆழமாகச் சிந்திப்பதானால் நம்மிடையே தோன்றுகின்ற ஒவ்வோர் அநுபவமும் அறிவாகச் செறிகிறது எனலாம்.

மனிதன் என்பான் சிந்திக்கும் ஓர் உயிரி. ஏனைய விலங்குகளை விட மேம்பட்ட சிந்தனையை உடையவன். தொல்லை துயர் ஏதும் வருமுன்னரே தன்னைக் காத்துக் கொள்வதற்கு அறிந்தவன். எதிர்கால சந்ததிகட்காக முன்னேற்பாடாகவே பல ஆயத்த நடவடிக்கைகளைச் செய்து வைப்பவன். நோய்கள் வராது முன்னெச்சரிக்கையாகவே இருப்பதற்கு அறிந்தவன் வந்து விட்டாலும் அதனிலிருந்து தம்மை மீட்பதற்கு வழிவகைகளைச் செய்யத் தெரிந்தவன். தன் பரம்பரைக்கென்றே உழைத்து உழைத்து தேய்கிறான்.

மனிதன் தன் சிந்தனைகளை மொழிகளாக்கி மொழிகளை நூல்கள் ஆக்கி வைக்கிறான். இலக்கணம் வரன்முறைக்கு ஏற்பவும், இலக்கியம் காலத்துக்கேற்பவும் காலம் காலமாக ஆக்கப்பட்டும் அவைபேணப்பட்டும் வருகின்றன. ஆதலினால் ஏனைய ஜீவராசிகளைவிட அவன் உயர்ந்தவன் ஆகின்றான். நினைத்த நேரத்தில் நினைத்த வற்றைப் பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலைகள் மனிதனுக்கே உண்டு, என்றால் வியப்பில்லை. யாவற்றையும் தர்க்கரீதியாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறனும் மனித இனத்துக்கே கொடையாக்கப்பட்டிருக்கின்றது. அவ்வகையிலே இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சி மண்ணையும் விண்ணையும் கடந்து கோள்களிலும் இறங்கிவிட்டது.

இயந்திர மனிதர்கள் ( ROBOT) கணனிப் பொறிகள், வகைவகையான வாகனங்கள் இவை யாவுமே அறிவின் வளர்ச்சியினால் திறனின் முயற்சியினால் அவனி எங்கும் நிரம்பி வழிகின்றன.

ஆம்.

மனிதன் மாறி விட்டான் மதத்தில் ஏறி விட்டான். பறவையைக் கண்டான் விமானம் படைத்தான், பாயும் மீன்களில் படகினைக் கண்டான் எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான் எதனைக் கண்டான் மதங்களைப் படைத்தான்.........

ஆமாம் நாட்டமுடைய ஒருவன் எதை அவதானிக்கின்றானோ அதுபற்றிச் சிந்திக்கிறான். குளம்புகின்றான் தெளிகின்றான். செயலில் இறங்குகின்றான், அநுபவம் பெறுகின்றான், இதனூடாக அறிவு மலர்கிறது. ஆகவே அறிவு என்பது திறனையும் திறன் என்பது அறிவினையும் நாடிச்செல்கிறது எனலாம். "அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்'' இணங்க அறிவுடைய ஒருவரிடத் என்னும் குறள்ப்பாவுக்கும் இணங்க அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Post Graduate Diploma in Educaion 1993/94

**Group I**

Mr. S. Paranthaman
Miss A Nalajini
Sr. Mary Pascal
Mr. S Rasalingam
Mrs. K. Arupiragasam
Miss T. Kunthavi
,, S. Vasanthakumari
Mr. M. Mariathas
Miss J. Thayapari
,, S. Gowry
Mrs. A. Thiruchelvanathan
Mr. K. Vakeestharan
Miss S. Sivasakthy
Mrs. K. Yogeswaran
Miss V. T. Lalitharani
Mr. S Pavalendran
,, C. Pakeerathan
Mrs. P. Sivapalan
Miss K. Yasothara
Mr. S. Manivannan
Miss N. Revathy
Mr. T. Nagaratnam
Mrs. R. Somasundaram
Miss R. Yogeswary

Mr. T. Ashogalingam
Mrs. P. Thirukumaran
Miss S. Indradevy
Mrs. B. Uthayakumar
Mr. N. Vimalathasan
Miss S Jeyaranjini
Mrs. P. Subramaniam
,, P. Krishnasamy
Miss K. Valinayaki
Mr. K. Saravanapavananthan
,, V. Gnankanthan
Miss S. Uthayakumari
Mrs. B. Suntharalingam
Mr. G. Sebatiampillai
Mrs. K. Sivasubramaniam
,, B. Balasubramaniam
Miss S. Gowry
Mrs. P. Eswaran
Mr. T Mithiran
,, A. Raveendran
Miss M. Thevasenai
, S. Maheswaran

,, K. Umashankar
Mrs. J. Arulmayam
,, R. Somasegaram
Miss P. Ramalingam
,, L. Sivagurunathan
,, N. Malini
,, S. Radchayaluxmy

Mrs. N. Shanmugananthan
Mr. A. Aravinthanathan
,, A. Nadarajah
Mrs. M. Ganeshathasan
Miss S. Maheswary
,, M. M. Alfred
,, T. Inthumathy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Post Graduate Dip - in Education 2nd Yers - 1993/94

**Group II**

Mrs. J. Kanthavel
Miss P. Srisuganthy
Mrs. Kanapathipillai
Miss S. Malini
,, P. Inpamalar
,, S. Shanthini
,, A. Pavalam
,, S. Kalawathy
Mr. K. Sasitharan
Miss M. Sakayathevi
Miss T. Utharakumari
Mrs. K. Muthukrishnan
Miss M. Kalathevy
Miss K. Nadarajah
Mr. N. Srikanthan
Miss K. Nirmaladevy
Mrs. M. Ravenndran
Mr. P Wincent
Sr. A. Manuvetpillai
Miss N. Vigneswary
,, A. Punithakumary
Mrs. P. Sathasivam
Miss J. Ullian

Mrs. J. Anantharajah
Miss K Nirmaladevy
Mrs. U. Tharmathasan
,, K. Rajendran
Miss M. Vijayakumari
,, K. Sugunarani
,, M. N. Rasanathan
Mr. R. C. S. Augustine
,, V. Nadarajah
Miss V. Nalayini
Mrs. S. Sokkalingam
,, R. G. Suganthanathan
Miss S. Saguthaladevy
,, S Jeyaranjini
Mr. S. Chandran
Miss D. S. Selvarajah
,, T. Theiveswary
,, T Semmanachelvi
Mrs. A. Thanapalasingam
,, J. Balasingam
,, Mrs. K. Thevamaheswaran
,, L. Maheswaran

**Group III (1993/94)**

Miss V. Sasikala
Mr. V. Sivakurunathan
Miss K. Thampoo
Mr. M. A. Rubanathan
,, N. Kanagasuntharan
Miss S. Vasanthagowry
Mrs. R. Sivarajah
Mr. A. A. V. Mariyanayagam
Miss G. Selliah
Mr. V. Senthilrajah
Miss C. Sittampalam
Mrs. S. George
Mr. A. C. George
,, K. Sivanesan
Miss T. Tampapillai

Mrs. T. Ratneswary
Miss L. Thuvaraka
Mrs. C. Gnanasubramaniam
Miss Pushpawathy
,, B Vithiyadevy
Mr. K. Parameswaran
Mrs. S. Yogalingam
,, T. Premakumar
,, V. Sivaganeshasundaran
Miss C. Kugarathy
,, R. Umarani
Mrs. I. Jeevendra
Miss B. Balasingam
Mrs. V. Thanabalasingam
,, A. S. Soundranayagam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய ஒருவரிடத்தே திறன், மனப்பாங்கு யாவுமே குடிகொண்டிருக்கும். என்று துணிந்து கூறலாம்.

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வ தால் அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்கு மாம்'' அன்று பாரதி கண்ட கனவு அது. இன்று படியேறி நிற்கிறது. உடையிலும் நடையிலும் நிகராகி, கல்வியில் கலைகளில் பண்பாட்டில் இன்று விஞ்சி நிற்கிறது. பாடசாலைகளில் அலுவலகங்களில் பண்டக சாலைகளில் பாதையோரங்களில் வாகனங் களில், விரசாதனைகளில் எங்குமே பெண்கள் இன்று அதிகம் காணப்படுகின்றார்கள்.

''ஆணுக்கு நீகராய் அனைத்துமே ஆற்றி டும் அணங்காம் பிள்ளைகளைச் சுமந்து பெறும் யந்திரமாம். சீதனம் அள்ளி வழங் காவிட்டால் அவளுக்கு விடிவேயில்லையாம். அதிலும் வேடிக்கை வீட்டில் அன்றாடக் கடமையுடன் வெளியேயும் உழைத்துக் கொடுக்க வேண்டுமாம்.''

ஆமாம் அறிவு, திறன் மனப்பாங்கு நிறை உலகம் இது, இலவசக் கல்வியும் இலவச நூல்களும் ஏதும் குறையில்லா வாழ்வு இங்கு, மகளிர்க்காக வென்றோ குருமார்க்காக என்றோ ஏதும் ஒதுக்கப்படுவதில் அர்த்தம் இல்லை. வாகனம் ஓட்டுவதில் அதனைத் தள்ளி இயக்குவதில், மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்வதில் பெண்கள் பின் நிற்கவில்லை. இவை இன்று சாதாரண நிகழ்வுகளாகக் கொள்ளப்பட்டு விட்டன. பட்டத்திலும் பதவியிலும் பெண்கள் உயர்ந்து நிற்கின்றனர் என்பதை நன்கு காணமுடிகின்றது. பெண்கள் அடுப்பங்கரை யில் அழுது வடித்த காலம் மலையேறி விட்டது. ஆயினும் இன்றைய சமூகத்திலும் சீதனம் கேட்பவர்களும் கொடுப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். சீதனம் கொடுக் கப்படாவிட்டால் பெண்களுக்கு வாழ்வு இல்லை என்ற நிலையில் மாற்றம் ஏதும் ஏற்படுவதாக இல்லை. அப்படியே திருமணத் திற்கு முன் சீதனம் பேசப்படா விட்டும் கொடுக்கப்படாவிடினும் மாப்பிள்ளை வீட் டாரிடமிருந்து, அல்லது மாப்பிள்ளையிட மிருந்து அது பற்றிய குத்தல் வார்த்தை களிலிருந்து பெண்கள் தப்பிவிடமுடியாது. இவ்வளவுக்கும் சீதனம் கேட்பவர்களே பெண்கள் குற்றச்சாட்டுக்கள் ஆங்காங்கே ஓங்கி ஒலிக்கின்றன. எவ்வாறு பார்த்தாலும் இன்று பெண்கள் உழைப்பதில், சேமிப்பதில், குடும்பத்தை நிருவகிப்பதில் பொறுப்புக் களை சுமப்பதில் வல்லவராக விளங்கு கின்றனர்.

காலம் எவ்வளவோ மாறியிருக்கின்றது. சூழ்நிலைக்கு ஏற்ப எத்தனையோ, மாற்றங் கள் சமுதாயத்தில் நடந்துள்ளன. இருந்த போதிலும் எமது சமூகத்திடையே பரத் தையர், விலைமாதர் என்ற சொற்கள் இன்னும் பயன்படுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. கேவலம் இத்தகைய நிலையை ஆராய்ந்து பார்க்குமிடத்து ஒன்று தெளிவாகிறது. இன்றைய சமூகமும் விலை மகளிர்க்கு விலைகொடுக்கும் ஆடவர் பற்றிக்கூட பேசுதற்க்கு கூசி நிற்கிறது. இவ் வாறு விலைகொடுக்கும் ஆடவர் பற்றிக்கூட அகராதியில் ஓர் இடம் இன்றளவும் இல்லை. எம்மனப்பாங்கு இந்தளவில் நிற்கிறது.

விஞ்ஞான ஆராய்வு நூல்கள், தத்துவ ஆராய்வு நூல்கள், இலக்கிய ஆராய்வு நூல்கள் என இலட்சக்கணக்கான நூல் களை இன்று படிக்கக்கூடியதாய் உள்ளது, எத்தனையோ ஆய்வுகூடங்களைப் பயன் படுத்தக்கூடியதாய் உள்ளது. அதனால் இது அறிவு நிறை உலகமாகி நிற்கிறது.

அறிவும் திறனும் மனப்பாங்கும் நூல் களைப் படிப்பதனால் மட்டும் வந்துவிடுவ தில்லை, சொல்லில் செயலில் நடத்தைக் கோலத்தில், காண்பதே பொருத்தமாகும்.

''எண்பொருள வாகச் செலச் சொல்லித் தான்பிறர்வாய நுண்பொருள் காண்ப தறிவு.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மரபில் 'ஆசிரியன்'

திருமதி கு. பசுபதீஸ்வரன் (கு. நாகராஜ ஐயர்)
இரண்டாம் வருடம் மாணவி
யா/நல்லூர் இந்து தமிழ் பெ. பாடசாலை

ஆசிரியன் என்பவன் குற்றத்தைக்களை பவன். ஆசு-குற்றம் இரியம்-களைதல். இதன் படி குற்றங்களைக் களைந்து தன்னையும் பிறரையும் நன்னிலைக்கு இட்டுச் செல்லும் ஓர் பாரிய பொறுப்பு ஆசிரியனிடத்தில் ஒப்படைக்கப்படுகிறது. எனவே துடைக்கப் பட்ட கரும்பலகையைப் போன்ற வெற்றுள் ளங்களிலே அறிவுக் கூற்றுக்களை எழுதி, அகவளர்ச்சியைத் தூண்டி நிற்பவர்களே ஆசிரியர்கள். மனிதனின் கருவறையிலிருந்து கல்லறை வரைக்கும் உள்ள நடத்தைக் கோலங்களை ஏற்றவண்ணம் மாற்றி அவ னை வையத்துள் வாழ்வாங்கு வாழவைக் கும் பணி ஆசிரியத்திலேயே தங்கியுள்ளது. இதன்படி நாளாந்த நடைமுறைகளில், சென்ற காலத்தின் பழுதிலாத் திறன்களை யும் எதிர்காலத்தின் நடத்தைசார் மாற்றங் களையும் தொடர்பு படுத்தி அவற்றில் தள் ளத்தக்கன தள்ளி கொள்ளத்தக்கன கொண்டு வழிநடந்து, வழிநடத்தி வாண்மை விருத்தி யுடைய விளக்காக மிளிர்பவன் ஆசிரியன்.

இத்தகைய ஆசிரியப்பண்பு தமிழ் மர பிலே எவ்வாறு திகழ்ந்துள்ளது என்பதைப் பற்றிய சிந்தனையாக இக் கட்டுரை அமை கிறது. "எழுத்தறிவித்தவன் இறைவனா வான்" என்கிறது தமிழ் பரபு. அறம் அறிவு சால் இன்பம், இகபரசுகம் ஆகிய எல்லாமே ஆசிரியனால் மாணவனுக்குப போதிக்கப் பட்ட நடத்தைசார் மாற்றங்களாக அன்று கொள்ளப்பட்டன. 'சித்திரப் பாவை போல் அத்தக அடக்கு' அறிவுரை கூறியவர்கள் அன்றைய ஆசிரியர்கள். இதனால் வணங் கப்பட்ட சான்றோனாக ஆசிரியன் அன்று போற்றப்பட்டான்.

இந்த வகையிலே, ஆசிரியம் பற்றி நமக்கு தெளிவான விளக்கம் தரும் முக் கிய சான்றாகவுள்ளது நன்னூல் என்னும் இலக்கணத் தொன்னூலாகும். சுமார் கி. பி. 12ஆம் நூற்றாண்டில் எழுந்த அந்த இலக் கண நூல் தன்னுடைய பாயிரவியலிலே ஆசிரிய இலக்கணத்தைப் பல சூத்திரங்களில் விரித்துரைக்கின்றது.

அதாவது, ஆசிரியன் என்பவன், ஆன்ம நேய ஒருமைப்பாட்டுடன் இறை சிந்த னையை வளர்த்துக்கொள்பவராக இருக்க வேண்டும். பல்துறைசார் கற்றற் புலன்க ளின் அறிவுத்தேட்டங்களை மனதிலே தேக் கிக் கொண்டவராகக் காணப்படவேண்டும். நூல்வரலாறு, நூற்பொருள் வரலாறு கலை களிலே சிறப்புத் தேர்ச்சி என்பவற்றைக் கொண்டவராகவும், தெளிவான அறிவுரை வழங்கக்கூடியவராகவும் காணப்பட வேண் டும் என்கின்ற கருத்து வெளிப்பாடுகளை நன்னூல் சூத்திரம் விரித்துரைக்கிறது.

மேலும், நிலமானது தன்னகத்தே எத் தகைய விசாலமான பரப்பைக் கொண்டு காணப்படுகின்றதோ, அதேபோல ஆசிரிய னும் தன்னகத்தே அறிவுப்பரப்பினை விசா லிப்படையச் செய்தல் வேண்டும். அதுமட் டுமல்ல பல்வேறு தரைத் தோற்றங்கள் மூலம் பலபிரயோசனங்களை நிலம் தருவது போல ஆசிரியனும் பல்பரிமாண எண்ணக் கருக்களையுடைய சிந்தனாவாதியாக இருக்க வேண்டும். அத்துடன் தன்னை இகழ்ந்த வரையும் அகழ்ந்தவரையும் புகழ்ந்தவரை யும் ஒருசேர நோக்கி யாவருக்கும் ஒத்த நன்மைகளையே வழங்கும் சமநிலைத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2nd Year Students and Lecturers 1993 / 94

**Group II**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைபோல ஆசிரியனும் தன்னை நம்பியுள்ள சகல ஜீவராசிகளுக்கும் ஒத்த பண்பில் நிறைந்த அறிவினைத் திறந்த உள்ளத்துடன் வழங்கி அவர்களைப் பாதுகாக்க வேண்டும். இப்படியான பொறையுடைத் தன்மையை ஆசிரியர் ஒட்டுமொத்தமாகப் பெற்றிருக்கவேண்டுமென்பதால் நிலம் என்ற பாரிய பரப்பு ஆசிரியனுக்கு உவமிக்கப்படுகிறது.

அடுத்ததாக, அளக்க முடியாத அகல நீளம் கொண்ட தன்மையும் எவராலும் அசைக்க முடியாததிண்மமும் கொண்ட மலையானது ஆசிரியனுக்கு ஒப்பிடப்படுகிறது. எனவே ஆசிரியனும் கல்விகேள்விகள் மட்டு சிறந்த செறிந்த அறிவுத் திண்மத்தைக் கொண்டமைதல் வேண்டும். இதன் மூலம் தன்னை எத்தகைய பிரச்சனைகள் வந்து தாக்கும் போதும் அவை யாவற்றிற்கும் தக்க நல்வழி கண்டு பிரச்சனைகளை விடுவிக்கும் கலங்காத் தன்மையையும் ஆசிரியம் பெற்றிருக்க வேண்டும் என்கிறது பாயிரம். தனது உயர்ந்த தன்மைப் பாட்டால் எல்லா ஜீவராசிகளுக்கும் மலை தன்னைக் காட்டிக் கொள்வதுபோல ஆசிரியனும் தனது அறிவுக் கூர்மையால் சென்ற இடமெல்லாம் சிறப்பைத் தேடிக்கொள்ளல் வேண்டும்.

தொடர்ந்து, நடுநிலைமையைத் தலையாகக் கொண்டது செங்கோன்மை, அதேபோல ஆசிரியனும் நீதிவழுவா நெறிமுறையின் வழி நின்று பொன்னிகாத்த தன்னறிவினை மெய்ப்படுத்தும் தன்மையனாக வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் மங்கல மலர் மாட்சியும் இங்கு ஆசிரியத்தை சிறப்பிக்க உதவுகிறது. மலரானது தன்னையும் தன்னைச் சூழ உள்ளவர்களையும் வாசமிகு நேசத்தால் தன்வசப் படுத்துவதுபோல ஆசிரியனும் தனது கல்வி மலர்ச்சியால் வரும் அறிவு வாசனை மூலம் தன்னையும் பிறரையும் தன் பக்கம் சாரச் செய்தல் வேண்டும். தவிர மலரின் மென்மை கடமை உணர்வு என்பவற்றைப் போல ஆசிரியனும் மென்மையாக யாவராலும் நுகரப்பட்டு பலன் கொள்ளக்கூடியவராகவும் இருக்கவேண்டும் என நயமாகக் கூறப்படுகிறது.

இப்படியாக ஆசிரியம் தனது வாண்மைத் தன்மைகளை உடன்பாட்டுத் தன்மைகளால் நிரற்படுத்தி மெருகூட்டுகிறது. இது ஆசிரியத்தின் நேர்த்திறனாகும். மாறாக எதிர்மறைத் தன்மையாலும் ஆசிரியத்துவம் வலுப்படுத்தப்படுவதை நாம் காண முடிகிறது. உதாரணமாக வள்ளுவமானது கல்வியின் நேர்மையை கல்லாமையாலும் உணர்த்துவதுபோல நன்னூலாகும் ஆசிரியரல்லாதார் இலக்கணங்களைக்கூறி ஆசிரியத்துவத்தை வலுப்படுத்துகிறார். அதாவது பஞ்சமா பாதகங்களைச் செய்பவனும் இன்மொழி நற்குண நலன்கள் இல்லாதவனும், கல்விச் செல்வத்தை சுவையாக அல்லாமல் சுமையாக ஏற்றுக் கொள்பவனும் ஆசிரியனாகத் தகுதியற்றவன், என்கிறார் நன்னூலார். மேலும் தான்பெற்ற கல்வி அறிவினை படிமுறையன்றி முறைமாற்றி திட்டமின்றிக் கற்பிக்கும்ஆசிரியர்களைக் கழற் குடத்துக்கு ஒப்பிடுகிறார். அதேபோல நிறையறிவைப் பெற்றிருப்பினும் ஒருவராலும் இலகுவில் பெறமுடியாத தன்மையையுடைய ஆசிரியர்களை மடற்பனைக்கு ஒப்பிடுகிறார். அது மட்டுமல்ல தான் கற்ற நூற்புலமையை தன் சார்ந்தவர்க்கு கற்பிக்காமல் அற்பரைப் போயடுத்து தன் அறிவை விற்கும் தன்மையனாக உள்ளவன் முடத்தெங்கிற்கு ஒப்பிட்டுக் குறைக்கப்படுகிறான். இவ்விதம் ஆசிரியமானது தமிழ் மரபில் நேரடி ஊக்குவிப்பாலும் மறைமுக ஊக்குவிப்பாலும் வலுப்படுத்தப்பட்டு வந்துகொண்டிருக்கிறது.

இதன் வழியில் அக்கால நன்னூலாரது ஆசிரியப்பண்புகள் தற்காலத்திலும் உலா வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் தற்கால ஆசிரியனும் ''விரையான் வெகுழான் விரும்பி முகமலர்ந்து கொள்வோன் கொள்கை அறிந்தவன் உளங் கொள'' கற்பித்தல் மூலம் நடத்தைசார் மாற்றங்களை நன்னிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும். இதற்காகிய சிறப்புத் தேர்ச்சியைப் பெறுவதற்கு ஆசிரியம் தனது வாண்மையை விருத்திசெய்து கொள்ளல்வேண்டும். [illegible] மானது தனது தன்மைகளை பலவடி

வங்களிலே மிளிரச்செய்வதுபோல, நல்லாசிரியனும் தனது அறிவுக் களஞ்சியத்திலிருந்து பல்சார்துறை விருத்திகளை அபிவிருத்தி செய்துவருங்காலத்தை வளமுள்ளதாக்கும் பிஞ்சுக் கரங்களின் கைகளில் ஒப்படைக்கவேண்டும். இதற்கமைய எதிர்கால முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு தகவிலாரைத் தக்காராக்கும் பொறுப்பை ஆசிரியன் உணர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். "நாடு உனக்கு என்ன செய்தது? என்று கேட்காமல் நீ நாட்டுக்கு என்ன செய்தாய், செய்யப்போகிறாய்?" என்று ஒவ்வொரு மாணவ உள்ளங்களிலும் கேள்விக் கணைகளை எழுப்பி, ஞானத்தினாலான விருப்பை உணர வைத்து சிந்திக்க வைத்து செயற்பட வைக்க வேண்டும். இதற்காக ஆசிரியர்களும் தமது அறிவுக் கருவூலங்களை மாணவ உள்ளங்களுக்கு விருப்புடன் பெய்து செய்து அவர்கள் பயப்பினை இனங்கண்டு ஆசிரியப் பணியினை மேம்படுத்தவேண்டுமென்பதே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதும் எதிர்பார்க்கப்படுவதுமாகும்.

*"மாணவனை அறி*
*பாடத்தை அறி*
*உன்னை அறி"*

*"அளவுக்கு அதிக இலாபந்தரும் நீண்டகால முதலீடு என்பது கல்வியே"*

*"யாரும் மனிதராகப் பிறப்பதில்லை சமூகத்தின் பல்வேறு முகவர்களின் போதனையாலும் சாதனையாலும் மனிதராய் உருவாக்கப்படுகின்றனர்"*

— ஆர்எஸ்என்

*"ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உத்தரவாதமாகக் கூடிய வலிய சாதனம் கல்வியே"*

*"இன்று மனித சக்தியைத் திறமை உள்ளதாக உருவாக்குவதே மூன்றாம் உலக நாடுகளின் முக்கிய கல்வி நோக்கமாக இருக்கவேண்டும்"*

*"வளர்முக நாடுகளில் கல்வி ஒரு சிலரின் மட்டற்ற தேவைகளை நிறைவுறுத்துவதாய்த் திட்டமிடப்படாது முதலில் பலரின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட வேண்டும்"*

ஜெ. ஈ. ஜெயசூரியா

*"மாணவர் ஏதாவது ஒரு புத்தகத்தை வெறுக்கவேண்டும் என்றால் அப்புத்தகத்தைப் பாடப்புத்தகமாக்குங்கள்"*

*"ஆசிரியர் எவ்வழி சமூகம் அவ்வழி"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Miss C. Suganthakala
Miss. N. Kunchalammah
Mr. V. Nesaratnam
Miss S. Sivalogini
„ K. Vijitha
Mr. F. Francis
Mrs. P. Sivanesan
Mr. S. Thillainathan
Miss V. Nagarani
„ N. Perinpagowry
Mrs. N. Kunarajah
Miss Kumaravel
„ S. Janeera
„ S. Sivarajasothy
„ S. Rathika

## Post Graduate Diploma in Education 1994/95

### Group I

Miss V. Malini
Mrs. T. Manokaran
Miss T. Thiageswary
„ M. Jeyakumary
„ P. Jeyakumar
Miss V. Saraswathy
„ S. Sivananthapushpam
„ K. Dayanthinidevy
Mr B. Thanabalan
Miss P. Jeyakumary
Mr. S. Kanagaratnam
Mrs. A. Jenat Silvasteena
Mr. S. Parameswaran
Miss K. Kamaladevy
Mr. C. A. Sivaganesamoorthy
„ S. Thiagarajakurukkal
„ P. Kathirgamasothilingam
Mrs. T. Komalavalli
Miss T. Thillagawathy
Mrs. T. Manoranjithamalar
Miss V. Maheswary
Mrs G. Mahewary
Mr. N. Pirabakaran
Mrs. V. Shanthakumary
„ Mrs. P. Naguleswaran
Miss S. Neelambihai
Mrs. P. Pushpamalar
Miss V. Vimaladevy

### Group II 1994/95

Miss S. Bhavany
„ R. Vigneswary
„ S. Keethamany
„ S. Pamini
„ T. Malini
„ T. Nalayini
Mr. N. Sivagananam
„ K. Paramarassu
Miss K. Jeyaladchumy
Mrs. Y. Kirubakari
„ T. Sothimalar
„ S Thadchayani
Mr. V. Thayanithy
Mrs. J. Manokari
Miss T. Sathiyakala
„ S. Suganthini
„ M. Shanthy
Mrs. K. Sakundaladevy
Mr. A. Gunasingam
Miss A. Pushpashanthy
Mr. S. Kumarasamy
Mrs. P. Ushanthini
Miss K. Karunalatha
„ R. Menaka
Miss K. Kalaimagal
Mrs. R. Kamaladevi
Miss P. Pathmawathy
Mrs. S. Thangamany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Graduate Trainees 1994/1995

Miss T. Velauthapillai
,, A. Ummaheswary
,, A. Thayanithy
,, C. Shanthini
,, S. Piriyatharshini
,, T. Revathy
,, R. Sowthamini
,, U. Bawani
,, S. Vijayarany
,, V. Kamalarany
,, G. Sutharshini
Mrs. C. Thevikarany
Miss M. Jeyagowry
,, S. Selvanayaki
Mr. N. Shanmugarasa
Mrs. M. Kugathas
Miss T. Srigowry
,, T. Chandraleela
,, S. Manimala
,, S. Amutha
,, N. Chandra

Miss T. Shanthakumary
,, S. Ratheeswary
,, S. Atputharatnam
,, K. Krishnaverny
,, M. Jeyanthini
,, S. Valarmathy
,, M. M. Mariathasan
,, B. Kalyani
,, G. Suganya
,, T. Samundeeswary
,, K. Aruna
,, K. Manoranjini
,, N. Atputharany
,, S. Jeyanthakala
,, K. Arunthavamalar
,, P. Sivakalai
,, H. Kalaivanny
,, P. Piramalatha
Mrs. P. Mathavy
Mr. V. Vijayabaskar
Miss A. Anusha Tharshini
,, S. Thevagowry

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2nd Year Students and Lecturers 1993 / 94

**Group III**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரின் ஆளுமையை வளர்ப்பதில் ஆசிரியரின் பங்கு

செல்வி, யோகேஸ்வரி கந்தையா
B. A. Dip in Ed, M. A.
( விரிவுரையாளர் )

பாடசாலைகள், மாணவர் பாடம் கற்கும் இடமாக மட்டுமன்றி அவர்களது முழுமையான விருத்திக்கு அதாவது உடல், உள, மனவெழுச்சி, சமூக, அறநெறி, அழகியல்ரசனை போன்ற ஆளுமை விருத்திக்குப் பொறுப்பான நிறுவனமாகவும், மாணவரைத் தமது பிற்கால சமூகவாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் களமாகவும் கருதப்படுவதால் அவர்களுடைய ஆளுமையை வளர்ப்பதில் ஆசிரியரின் பங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

ஆளுமை என்பது ஒருவனது ஒன்றிணைந்த நடத்தையாகும். அது பரம்பரை வழிவந்த திறன்களையும், சூழலின் தாக்கங்களையும் கொண்டது. அது அவனுடைய உடலமைப்பு, நடத்தைக் கோலங்கள், கவர்ச்சிகள், மனப் பாங்குகள், உளத்திறன்கள், பல்வேறு இயல்புகள் ஆகியவற்றின் ஒன்றிணைந்த முழு அமைப்பாகும்.

மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதில் அவர்களுடைய குடும்பம், பாடசாலை, சமவயதினர்குழு, சமய வழிபாட்டுத்தலங்கள், வெகுசன தொடர்புச் சாதனங்கள், சமுதாயம் என்பன பங்குகொண்டுள்ள போதிலும் ஆசிரியரின் பங்கே முக்கியத்துவமுடையது. குடும்பத்தின் அங்கத்தவர்களாகிய பெற்றோர், உற்றார் பிள்ளையின் ஆளுமைப் பண்பினைப் பேணவேண்டியவர்கள். அது அவர்களது கடமை. தங்கள் குழந்தைகள் என்பதனால் முழுக்கவனமும் அவர்கள் மீது செல்லும். ஆனால் ஆசிரியரின் நிலை அத்தகையதன்று. காலந்தோறும் வரும் மாணவர்களைத் தம் பிள்ளைகள் போல் மதித்து அவர்கள் ஒவ்வொருவரிலும் அக்கறை கொண்டு தமக்கும் சமுதாயத்திற்கும் நற்பயன் நல்கக்கூடிய ஆளுமையுடையவர்களாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியரிடமும் உள்ளது. வாழ்நாளில் பெரும்பங்கு ஆசிரியரின் கண்காணிப்பில் உள்ளது. எனவே நல்லாசிரியராகவும், அன்னையாகவும், தந்தையாகவும், நண்பராகவும் உறவுகொண்டு ஆளுமைப் பண்புக் கூறுகளாகிய பொறுப்புணர்ச்சி, நல்லொழுக்கம், பரந்த மனப்பான்மை, உறுதியான சிந்தனை, முகமலர்ச்சி, நல்ல சமூக இசைவுகள் ஆகியவற்றை மாணவரிடத்தில் வளர்த்தல் வேண்டும்.

இவற்றை வளர்ப்பதற்கு அன்பு, காப்பு, கணிப்பு, சுயதிறனில் நிறைவு ஆகிய உளத் தேவைகள் ஆசிரியரால் பூர்த்திசெய்யப்படல் அவசியம். கேபாட் கருத்துப்படி ஆசிரியரின் அறிவினைப் பார்க்கிலும் அன்புதான் முக்கியமானது. அன்பும் அறிவும் இணையும் பொழுது மாணவர் பெறும் பயன் அதிகம். ஆசிரியரின் அன்புக்கு மாணவர் மதிப்பளிக்கின்றனர். கட்டுப்படுகின்றனர். பெற்றோரால் புறக்கணிக்கப்பட்டு அன்பும் பரிவும் கிட்டாது வளரும் குழந்தை பொருத்தப்பாடின்மை அடைவது தவிர்க்க முடியாததாகும். இத்தகைய குழந்தைகளுக்கு அடைக்கலம் ஆசிரியரே. அதிகாரத்தைக் கைவிட்டு அன்பு, அறிவு, சுதந்திரம் ஆகியவற்றை ஆயுதமாகக் கொண்டு சனநாயக ரீதியில் கற்பிக்கும்பொழுது மாணவர் அச்சமின்றி, ஐயம் திரிபறக் கற்றுத் தெளிவு பெறுகின்றனர். அத்துடன் ஒழுக்கசீலராக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

பெற்றோரின் ஆதரவிலும், அன்பும் வளமும் நிறைந்த சூழலிலும் வளரும் குழந்தைக்குக் காப்புணர்வு ஏற்படுவது சகஜம். ஆனால் இத்தகைய வாய்ப்பும் வளமும் கிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாதவர்களுக்குக் காப்புணர்வை அளிக்க வல்லவர் ஆசிரியர். என்றும் தமது மாண வரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக ஆசிரியர் இருக்கவேண்டும். ஆதரவற்ற குழந் தைகளுக்கு தொழிற்கல்வி அளிப்பதன் மூலம் தம் தொழிற்திறனைக் கொண்டே வெளியு லகில் வேலைசெய்து வாழமுடியும் என்னும் நம்பிக்கையை வளர்த்து அவர்களின் ஆளுமையைச் செம்மையாக உருவாக்கலாம்.

ஒவ்வொரு வகுப்பிலும் பல்வகைப்பட்ட தனித்தன்மைகள், ஆர்வங்கள், திறமைகள், கவர்ச்சிகள், அனுபவங்களைக் கொண்டு மாணவர் விளங்குவர். அவர்கள் தம் திறமை களை வெளிப்படுத்தவும், கருத்துக்களைத் தெரிவிக்கவும் சந்தர்ப்பமளிக்கவேண்டும். சில மாணவர் எடுத்தவுடன் பதில் சொல்லுவர். சிலர் மௌனம் சாதிப்பர் இதற்கான கார ணங்களை உணர்ந்து எல்லோரையும் எதிலும் பங்குபற்ற ஆவன செய்யவேண்டும். றூசோ பெஸ்டலோசி, மாண்டிசோரி, ஜோன் டுயி போன்ற கல்வியியலாளரும் சுதந்திரமே கல்வியின் அடிப்படை என வலியுறுத்தியுள் ளனர்.

புதியன ஆய்தல், புதியன புரிதல், புதியன தேடல் போன்ற புதிய கவிவு நிலைகளை வளர்த்துக் கொள்ளவும், நவீன அறிவைப் பெறவும் மாணவர் விழைகின்றனர். இத்த கைய உளத்தேவைகள் நிறைவுறச் செய்தல் மூலம் மாணவரின் ஆளுமை வளர்ச்சிக்கு அடிகோலுதல் ஆசிரியரின் கடமை. பாட சாலையில் விளையாட்டு போட்டி, பேச்சுப் போட்டி, விவாத அரங்கு, கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒழுங்கு செய்து தமது திறமை களை வெளிப்படுத்த சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பமளித்தல் ஆசிரியரின் கடமையாகும் 'நாம் இதைச் செய்தோம்' என்னும் மகிழ்ச்சி கலந்த அடைவு உணர்ச்சி மாணவரிடம் தோன்றுவதால் அவர்களுடைய ஆளுமை செம்மையடைகிறது.

வகுப்புக்களில் மெல்லக்கற்போர், சராசரி யாகக் கற்போர், துரிதமாகக் கற்போர் என்ற மூன்றுவகை மாணவர்களும் காணப்படுவர். அவர்களைப் பகுத்துணர்ந்து ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்ற முறையில், ஒழுங்கு முறையுடன் பாடங்களைத் தொடர்புபடுத்தி மாணவர் மனதில் பாடப்பொருள் பதியுமாறு பல்வேறு வகைக் கற்பித்தல் முறைகளைக் கையாளல் வேண்டும். இதனால் மாணவக் மனத்திருப்தி பெற்ற ஆளுமை வளர்ச்சி பெறுவர்.

மாணவரின் உளத்திறன்களை அறிந்து எவ்வகைக் கல்வியைக் கற்றால் அதில் வெற் றியீட்டுவர் என்றுணர்ந்து பாடத்தெரிவுக்கு வழிகாட்டுதல் அவசியம். மாணவரது திறமை, நாட்டம், வளவாய்ப்புக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தமது தகுதிக் கேற்ற கல்வியை, தொழிலை மேற்கொள் ளுதல் வாழ்க்கையில் பொருத்தப் பாட்டை அடைவதற்கும், மகிழ்ச்சியுடன் செயல்படு வதற்கும் அவசியம். மாணவர் தமது திறமைகளில் நம்பிக்கை கொள்கின்றனர். ஆசிரியர் தம்மில் கவனம் எடுக்கின்றார், தம் எதிர்கால வாழ்க்கையில் அக்கறை கொண் டுள்ளார் என்ற உணர்வு ஊக்கமளிக்கும், ஊக்கமே வெற்றிக்கு வழிகோலும்.

ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மாணவரிடம் நிலைபடச் செய்யும்பொழுது அவர்களின் மனவெழுச்சிகளின் தன்மைகளை ஆசிரியர் மனதிற் கொள்ள வேண்டும். சில மாணவர் வெஞ்சொல்லை வெறுப்பர். வேதனை அடைவர். சிலர் எதையுமே பொருட்படுத்த மாட்டார்கள், தனியாள் வேற்றுமைக்குத் தக்கவாறு ஆசிரியர் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட தேவைகள் மாணவரிடம் எழக் கூடும். இதனுள் எதனை நிறைவு செய்வது என்பதுபற்றி அவர்களின் உள்ளத்தில் போ ராட்டம் எழுவதும் இயல்பேயாகும். போ ரிடும் தேவைகளது தன்மை, ஒரு தேவை நிறைவுறாமற் போவதனால் ஏற்படும் மன முறிவு, தேவைகளை நிறைவு செய்வதனால் எழும் இலக்குகளின் கவர்ச்சி என்பவற்றை ஆசிரியருடன் மாணவர்கள் கலந்துரையாடு வதன் மூலம் தீர்த்துக்கொள்ளமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையிலுள்ள குறைபாடுகளினால் தமது மாணாக்கரிடையே உளப்போராட்டங்கள் எழாதவாறு ஆசிரியர் கவனித்துக் கொள்வது மிக அவசியம். ஒவ்வொரு மாணவரும் ஓரளவேனும் மனநிறைவு அளிக்கக் கூடிய வகையில் பாட ஏற்பாடும், பாடசாலைச் செயல்களும் அமைக்கப் படுவதனால் மாணாக்கர் உளநலம் பெறுவதோடு ஆளுமைச் சீராக்கத்தையும் பெறுவர்.

சமூக அந்தஸ்தின் தாழ்நிலையில் வறுமையில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் தாழ்வுமனப்பான்மையால் பின்தங்கிவிடுகிறார்கள். அவர்களிடம் குடிகொண்டிருக்கும் தாழ்வுமனப்பான்மையைப் போக்கி அவர்களுக்குத் தலைமைப் பதவிகளையும், பொறுப்புக்களையும் கொடுத்து உற்சாகம் அளிக்கவேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும். தக்க சந்தர்ப்பத்தில் ஆசிரியர் கூறும் உற்சாகமான வார்த்தைகளைப் போன்ற சிறந்த மருந்து வேறு ஒன்றுமில்லை. பரிசு, வெகுமதி, தண்டனை என்பன மாணவரின் ஆளுமை வளர்ச்சியில் முக்கிய பங்கு கொள்கின்றன,

மாணவரின் உடல் விருத்தியை மேம்படுத்தி நோயற்ற வாழ்வையும் நீடித்த ஆயுளையும் பெற வழிகாட்டல் அவசியம். உடல் வலிமை பெறக்கூடியதாகப் போசாக்குள்ள உணவு, அதன் முக்கியத்துவம், சுகாதார மருத்துவ வசதிகள் பற்றிய ஆலோசனை வழங்குவதுடன், உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தையும் மாணவர் உணரச் செய்தல் அவசியம். அதனால் மாணவர் நல்ல உடல் அமைப்பு, உடல்வலிமை பெறுவர். திடகாத்திரமான உடலில்தான் திடகாத்திரமான உளம் இடம் பெறுகின்றது. மேலும் மாணவர் ஓய்வு நேரங்களைப் பயனுள்ளதாக்க சந்தர்ப்பமளிக்கவேண்டும். நூலகத்தில் சிறந்த சஞ்சிகைகள் நூல்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். இதனால் மாணவர் மனநிறைவு பெறுவதோடு பிறரின் அனுபவத்தைக் கொண்டு தமது ஆளுமையை ஒருமைப்பாடடையச் செய்ய வழியுண்டு.

இன்றைய மாணவர்களே வருங்காலத் தலைவர்கள், நாட்டின் பிரசைகள், நாட்டைக் கட்டியாள்பவர்கள். பல்வேறு தொழில் புரியும் நிபுணர்கள். ஆதலினால் பாடசாலையில் அவர்களைச் சமூக வாழ்க்கைக்கு ஏற்றதாகப் பயிற்சியளித்தல் அவசியம். பாடசாலை நிருவாகக் கருமங்களில் ஒரு சில பொறுப்புக்களை வழங்குதல், சனநாயக ரீதியில் பயிற்சியளித்தல், பாடசாலையில் நடைபெறும் வருடாந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளச் செய்தல், சமூக கலாச்சார செயற்பாடுகளில் ஈடுபாடுகொள்ளச் செய்தல், கூட்டுறவு, விளையாட்டு, மற்றும் மாணவர் சேம நலச் சங்கங்களில் பங்குபற்றல், பாடசாலை மலர் வெளியிடு, பரிசளிப்பு விழா, சமய விழாக்கள், கண்காட்சிகள் ஒழுங்குசெய்தல் போன்ற பலவிதமான செயற்பாடுகளிலும் எல்லா மாணவர்களையும் பங்கெடுக்கச் செய்து பொறுப்புணர்ச்சியை வளர்த்தல் வேண்டும். இதனால் பொறுப்பேற்றல், கலந்தாலோசித்தல், அறிவுரைகளை ஏற்றல், விட்டுக்கொடுத்தல், சுயமுயற்சி, கட்டுப்பாடு கூட்டுறவு போன்ற மனப்பாங்குகளைப் பெறுவர்.

தன்னுடைய திறமைகளில் நம்பிக்கை, தனது குறைகள் பற்றிய அறிவு பெறுதல், பிறரால் மதிக்கப்படுதல், பிறரை மதித்தல், பலருடன் பரஸ்பர நல்லெண்ணத்துடன் பழகுதல், தலைமை தாங்குதல், தேவைப்படும் போது பின்பற்றல் போன்ற சுபாவங்களை உடையவர்களாக மாற்றப்படுகின்றனர். இத்தகைய பண்புகளைப் பெறும் மாணவர் வருங்கால சமூக வாழ்க்கையில் பொருத்தப்பாடும், தலைமைத்துவம் தாங்கும் ஆளுமையும் பெற்றவராகின்றனர்.

வகுப்பில் ஏனைய மாணவர்களாலும் ஆசிரியராலும் ஆதரிக்கப்படுகின்ற மாணவர் பாடசாலை வேலைகளில் மிகவும் ஆர்வம் காட்டுவர். அவருக்கு அப் பாடசாலை வாழ்க்கை இன்பகரமாகக் கழியும். ஆனால் அத்தன்மை இல்லாத மாணவர் பாடசாலை வாழ்க்கையை வெறுத்து அனுசரணைப் பிறழ்வான செயல்களில் ஈடுபட முயல்வர். இத்தகைய மாணவர் மீது இரக்கவுணர்வுடன் ஆசிரியர் பழகி அவர்களது ஆளுமையை வளர்த்தல் வேண்டும். பொதுவாக மாணவர் பாடசாலையில் கணிப்பு, அன்பு, உரித்துவம்,

பொறுப்பு, சுயமதிப்பு ஆகியவற்றை விரும்புவர். இத்தேவைகள் தடைப்படில் மனமுறிவு ஏற்பட்டு ஆளுமை பாதிக்கப்படுமெனப் பல உளவியலாளர் வலியுறுத்தியுள்ளனர்.

மனிதனை மனிதனாக வாழவைப்பது சமயக்கல்வி. மாணவர்கள் ஒழுக்க மேம்பாடு அடைவதற்கும், கற்றதனால் ஆய பயனை அடைவதற்கும் சமயநெறிகளைப் பின்பற்றல் செய்தலவசியம், சமய நம்பிக்கையுள்ளவர் அனுசரணைப் பிறழ்வாக நடக்க விரும்பமாட்டார். சமயசார்பான நிகழ்ச்சிகளில் மாணவரை ஆசிரியர் பங்கு கொள்ளச் செய்து அவர்களது ஆளுமையை முழுமை பெறச் செய்தல் வேண்டும்.

எழில் உலகத்தில் மனிதன் வாழும்படி கற்பிப்பதே போதனா முறையில் முக்கியமான குறிக்கோள். எழில் பிறக்குமிடம் எழிலே - எழிலைக் கண்டு மெச்சுகின்ற பாதையிலே மாணவரை வழிப்படுத்த வேண்டும். அழகுணர்திறன் மனிதனுக்கே உரித்தான பண்பு, அழகுணர் திறனும் ஆக்கத்திறனும் இணைந்துள்ளன, அழகை உணந்து ரசிக்கவும், தாமே தம் கற்பனையின் உதவிகொண்டு புதிய பொருட்களைப் படைக்கவும், பிறர் கற்பனையில் எழும் படைப்புக்களை ரசிக்கவும், கேட்கவும், உணரவும் அவகாசம் அளிக்கப்பட வேண்டும். "கையில் பிடிலை வைத்துக்கொண்டு ஒருவர் திங்கு விளைவிக்க முடியாது" என்பது யுக்ரேனிய நாட்டுப் பழமொழி. தீமையும் மெய்யான முருகும் பொருந்தாதவை. ஒவ்வொரு மாணவர்கரத்திலும் அந்தப் பிடிலை வைப்பது ஆசிரியர் பணியாகும், இசை சார்ந்த கல்வியில்லாமல் மாணவர் முழுவளர்ச்சி பெறமுடியாது. மிகவும் துடிப்பில்லாத மாணவரிடத்தும் மனோசக்தியை இசை வரவழைத்து விடுகிறது. இசையின் மூலம் மாணவரின் நுண்ணறிவு திறன் மனப்பாங்கு வளர்கிறது. ஆக்கத்திறனால் தற்படைப்பு, தானே தொடங்கும் ஆற்றல், கூரிய நோக்குதழுவுந் திறன் ஆகிய பண்புக் கூறுகள் விருத்தியடைகின்றன மேலும் கலைப்படைப்பை சுவைப்பதால் சுவைப்பவனது விளக்கம் மேம்படல், அனுபவங்கள் விருத்தி பெறல், ஒழுக்கம் நல்லாற்றுப்படல், வாழ்வுப் பயன் மேலோங்கல் போன்ற நல்விளைவுகளை மாணவரடைகின்றனர்.

கல்வியே செல்வமாகச்கும் என்ற கருத்தினை உள மேற்கொண்டு தன்னை நாடிய மாணவர்க்கு சுகந்தருகலைகள் எல்லாம் பயிற்று வித்தல், பயின்றதன்படியே சமயப் பற்று, கடவுள் நம்பிக்கை, தார்மீக சிந்தனைகளான நீதி, நேர்மை, அன்பு, பண்பு, அடக்கம், ஆற்றல், அழகு, சுவைநயம், கடமை, கண்ணியம் கட்டுப்பாடு மிக்க தனித்துவம் வாய்ந்த பண்பாளராக இடம் மாநிலத்தில் வாழ்வாங்கு வாழ வழியமைத்தல் மாணவரின் ஆளுமையை வளர்ப்பதில் ஆசிரியரின் பங்காகும்.

ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் உடல் உள வலிமை, அறிவுவன்மை, பொருளாதாரத் திறன், ஒழுக்க மேம்பாடு, ஆன்மீக அடிப்படை ஆகியவற்றை அடையக்கூடியதாக வழிகாட்டி, ஊக்கமளித்து சுதந்திரமாகச் செயல்பட வைப்பதன் மூலம் ஆளுமையை வளர்ப்பதில் பங்கு கொள்கின்றனர்.

மாணவரின் ஆளுமையை வளர்ப்பதில் பங்குகொள்ளும் ஆசிரியர் துறையாற்றல் பணியாற்றல் மட்டுமன்றி அவை எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் ஆசிரியரிடமிருக்க வேண்டிய பொறுப் பேற்று நிறைவேற்று மாற்றல் நிறையப் பெற்றிருப்பதுடன், அன்பும், அருளும் இறைவழிபாடும், பொறுமையும், பெருந்தன்மையும், பல நூல்களில் தேர்ச்சியும், இனி சுபாவமும் உடையவராக நிறைகோலுக்குச் சமானம் ஆனவராக, மாணவர்களுக்கு முன்மாதிரியாக, அவர்களால் பார்த்துப் பின்பற்றக்கூடிய சிறந்த குணாதிசயங்களும் செயற்பாடும் உடையவராக இருந்தால் தான் மாணவரது ஆளுமையை மேம்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1st Year Students and Lecturers 1994 / 95

Group I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் கல்வியின் பாங்கு

பா. தனபாலன்
1ம்- வருட மாணவன்

மூன்றாம் ஆயிரமாவது ஆண்டு ஜனனிக்கும் வேளையில் உலகின் மூன்றாம் மண்டல நாடுகள் என வர்ணிக்கப்படும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இன்று பொருளாதாரத்தில் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன. ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க, ஆசிய நாடுகளில் உள்ள பெரும்பான்மையான மக்கள் அடிப்படைத் தேவைகளே பூர்த்தியாகாத நிலையில் அவதியுறுகிறார்கள். இதில் நூறு கோடி மக்கள் பட்டினியால் வாடுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெவ் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. ''உலகின் ஒரு பகுதி வறுமையில் வாடும்போது வளர்ச்சியுற்ற நாடுகளின் சுபீட்சம் நீடிக்க மாட்டாது'' என அணிசேரா நாடுகள் பெல்கிரேட்டில் பிரகடனப்படுத்தியுள்ளன. இவ்வகையில் மூன்றாம் மண்டல நாடுகளை நோக்கினால்; குடியேற்றவாத ஏகாதிபத்திய ஆட்சியின் தாக்கங்கள், திட்டமிடப்படாத தத்தமது நாடுகளுக்குப் பொருத்தமற்ற, உறுதியற்ற பொருளாதார, கல்வி அமுலாக்கங்கள், சனத்தொகையின் துரித வளர்ச்சி தொழில்நுட்ப நிபுணத்துவ அறிவின்மை, போன்றவற்றால் பாதிக்கப்பட்டு மீள முடியாமல் உள்ளன.

## குடியேற்ற வாத ஏகாதிபத்திய ஆட்சி

பெரும்பாலான மூன்றாம் மண்டல நாடுகள் குடியேற்றவாத, ஏகாதிபத்திய சுரண்டலின் பிடியில் அகப்பட்டு சீர் குலைந்திருக்கின்றன. இன்று இந்நாடுகள் சுதந்திரம் அடைந்தாலும் அன்றைய தாக்கங்களில் இருந்து மீள மிகவும் சிரமப்படுகின்றன. குடியேற்ற வாத நாடுகளின் அன்றைய பிரித்தாளும் கொள்கையின் தாக்கங்கள் இன்று சுதந்திர நாடுகளாகியும் உள்நாட்டு இன பூசல் போர்கள் தொடர்கின்றன. அத்துடன் முதனிலைப் பொருட்களையே உலக சந்தைக்கு இன்றும் வழங்கி வருதல்' கைத்தொழில் துறையில் வளர்ச்சியின்மை போன்ற காரணங்களும் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கின்றன. அத்துடன் குடியேற்ற நாடுகளின் கல்விகூட ஒரு தங்கி நிற்கும் மனப்பான்மையை இன்றும் ஏற்படுத்தியுள்ளது. கல்வியறிவு பரந்ததாக இல்லாததால் சனத்தொகை வளர்ச்சி வேகத்தின் அதிகரிப்பால் வளங்கள் பங்கிடப்படுதல், மூலதனங்கள் பொதுச் சேவைகளுக்கு விரையமாவதாலும் உற்பத்தித் துறைகளைப் பாதிப்படையச்செய்கின்றன. இன்று புதிய சிந்தனைகளினூடும் கல்விக் கொள்கைகள் மூலமும் இந்நாடுகள் அபிவிருத்தி நோக்கி விரைவாக முன்னேற வேண்டியுள்ளது.

## மாற்றங்களின் தேவைகளும் புதிய வழிகளும்

துரித கதியில் அபிவிருத்தியடையும் உலகத்தின் ஊடாக எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்கள் தமது வாழ்க்கையைத் துணிவுடனும், நுண்மதியுடனும் ஓட்டிச் செல்லக்கூடிய தலைமைப் பண்பையும், அறிவையும், திறமையையும் விருத்திசெய்ய சிறந்த அனுபவக் கல்வியைப் பெற வாய்ப்பளிக்க வேண்டும். எல்லோருக்கும் அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டில் வாழ்வதற்கான நுழைவுரிமையைப் பெறக் கல்வியே முழுமையாக வழி காட்டவேண்டும்.

கல்வியைப் பெறுவதற்கான செயற் தூண்டல், கல்விப் பெறுபேறுகள் இறுதியில் சமூக மாற்றம் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றையே அடைய வேண்டும். பல் வேறு மட்டங்களில் கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் அனைவருக்கும் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும். இதனடிப் படையிலேயே மூன்றாம் மண்டல நாடுகளின் கல்வி முறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். தொழிற் கல்விக்கான சந்தர்ப்பம் மேலும் பரந்த அளவில் விருத்தியாக்கப் படவேண்டும். அண்மையில் நடைபெற்ற "ஆசிரியர் தொழிற்சங்கங்களும் கல்வி அபிவிருத்தியும்'' என்ற கருத்தரங்கில் இலங்கையின் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. உ. ட. க. ம பிரேமதாஸ அவர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது! தற்போதைய இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் 2·29% தினர் மட்டுமே இரண்டாம் நிலைக் கல்வி பெற்றுள்ளார்கள். இந்நிலையை மாற்றியமைக்க வேண்டும். அத்துடன் "தொழிற் பயிற்சி, தொழிற் கல்வி மேலும் விரிவாக்கப்பட வேண்டும்.'' எனவும் தெரிவித்தார்.

எனவே இலங்கை போன்ற மூன்றாம் மண்டல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது மனித வளத்தைச் சிறந்த முறையில் திட்டமிட்டு வாழ்க்கைக்கு ஆதாரமான ஒரு தொழிலைச் செய்யக்கூடியதாக அனைவரையும் உருவாக்க வேண்டும். எனவே பொருளாதாரத்திற்கும், கல்விக்குமான இடைவெளியை விரைவாகக் குறைக்க வேண்டும். இதுவரை கல்வி முறை வழங்கிய தகுதிகளும், பொருளாதாரத் துறைக்குத் தேவைப்பட்ட திறன்களுக்குமிடையில் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதை நீக்க வேண்டும்.

இலங்கையில் மூன்றாம் மண்டல நாடுகள் தங்களிடமுள்ள பௌதீக, மனித வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி நவீன தொழில் நுட்ப முகாமைத்துவப் பயிற்சிகளைப் பெற்ற புதிய சந்ததியினரை விரைவாக உருவாக்கினாலேயே பொருளாதார அபிவிருத்தி அடையலாம். இதற்குக் கல்வியே அடிப்படையாகும். எனவே கல்வித் திட்டமிடலில் மாற்றத்தை ஏற்படுத்தி தேவைகளை விரைவாக உறுதியாக நிறைவேற்றக்கூடிய திறன்களைப் பெற்றுக்கொள்ளும் கல்வியமைப்பை உருவாக்க வேண்டும். இம்முயற்சிகள் இன்று மிகத் துரிதமாக மூன்றாம் மண்டல நாடுகளில் செய்யப்பட வேண்டியுள்ளது.


நமது பிரதேசத்தில்
பனை வளம் மிகுந்திருக்க
நமக்கு ஏது குறைகள்?

- பனம் உணவுப் பொருட்கள்
- பனம் கைப்பணிப் பொருட்கள்
- பனம் பாவனைப் பொருட்கள்.

தரமான இப்பனை உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய
பனை அபிவிருத்திச் சபையின் '' கற்பகம் ''
விற்பனை நிலையங்களை நாடுங்கள்.

**பனை அபிவிருத்திச் சபை**

தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பிஞ்சின் முறிவு

தி. செம்மனச்செல்வி
(2-ம் வருட மாணவி)

(முதலாவது பாடவேளை முடிந்து விட்டதற்கு அறிகுறியாக மணி அடிக்கிறது. தினவரவு இடாப்பு வேலையை முடித்துக் கொண்டு நேரசூசிகையைப் பார்க்கிறேன். 7A, மிக உச்சாகமாக வகுப்பிற்குள் நுழைகிறேன். 'வணக்கம் ரீச்சர்' ஒரே சீராக ஒலித்தவர்கள் எழுந்து ரீச்சரையே பார்த்த வண்ணம் நிற்கின்றனர் 'வணக்கம் பிள்ளைகள் இருங்கோ' பதிலுக்கு சிரித்த வண்ணம் கூறுகிறேன். வகுப்பு முழுவதையும் எனது இரண்டு சிறு கண்களுக்குள் கொண்டு வருகிறேன். எத்தனை சோடி கண்கள் 'முழிஞ்சு, முழிஞ்சு' என்னைப் பார்க்கின்றன. அத்தனை கண்களிலும் ரீச்சர் மீது உள்ள அன்பு அபிமானம் அதற்குமேலே என்ன சொல்லலாமோ அத்தனையும் தேங்கி வழிகிறது. இந்தப் பிள்ளைகளின் பாசம், அபிமானம் இதற்கு ஈடு இணை இருக்கிறதா? எனது உள்ளம் நெகிழ்கிறது. நெகிழ்ச்சியின் பிரதிபலிப்பு எனது முகத்தில் சிறிய புன்னகையாக விரிந்திருக்க வேண்டும். ஏனெனில் பிள்ளைகளின் முகத்தில் இப்போது அது தொற்றியுள்ளது. தெரிகிறது.

இந்த வகுப்பறை சூழல் தான் வேண்டும். கற்க, கற்பிக்க மெதுவாக பாடத்தை ஆரம்பிக்கின்றேன். முப்பத்தைந்து நிமிடங்கள் போனது தெரியவில்லை. எப்போதும் நான் ஐந்து நிமிடம் பிள்ளைகளுக்காக ஒதுக்குவது வழக்கம் அந்த வழக்கம்படி ஒவ்வொருவராக விசாரிக்கின்றேன். 'சிறீரூபன் ஏன் இன்டைக்கு வரேலை?' 'ரீச்சர் அவருக்கு காய்ச்சல் நாளைக்கு வருவார்' உடனே பதில் வருகிறது.

'நளாயினி ஏன் நேற்று வரேலை?' அடுத்த விசாரணை. நளாயினி எழுந்து நிற்கின்றாள். உடம்பு நேராக இல்லை. கோணல் மாணலாக நின்று கொண்டு மெல்லிய குரலில் பதில் வருகிறது. 'ரீச்சர் அக்காவுக்கு கலியாண வீடு அதுதான் வரேலே' 'கலியாணவீடா......ஆ... ஏன் எனக்குச் சொல்லேலை. சொன்னால் வந்திருப்பேனே' சும்மா அவிழ்த்து விடுகிறேன். நளாயினியின் கண்கள் சந்தோசத்தால் மலர்ந்து சிரிக்கின்றது. கூடவே நான் ரீச்சருக்கு சொல்லவில்லையே என்ற பரிதவிப்பும் எட்டிப் பார்க்கின்றது பரிதவிப்பைவிட ரீச்சர் என்னிலை எவ்வளவு அக்கறையாக அன்பாக இருக்கின்றா என்ற சந்தோஷம் கூடத்தான்.

வகுப்பின் பின் வரிசையைப் பார்க்கிறேன். ஜெகதீபனின் தலைமயிர் நன்கு வளர்ந்து விட்டிருந்தது. எவ்வளவு நேர்த்தியாக உள்ள பையன் ஏன் இதைக் கவனிக்கவில்லை. நான் தன்னைக் கவனிப்பதை உணர்ந்த ஜெகதீபன் சற்று சங்கடத்துக்குள்ளாவது தெரிகிறது. 'ஜெகதீபன்'...'ரீச்சர்'... அவன் எழும்பி நிற்கின்றான். 'ஏன் தலைமயிர் வெட்டேலை? நாளைக்கு இந்த தலையோடு நான் உன்னைக் காணக்கூடாது விளங்குதா?' 'தலைமயிர்தான் வெட்டச் சொன்னனான் தலையை அல்ல சரியா' சின்னப்பகிடி விடுகிறேன். வகுப்பு முழுவதும் குலுங்கிச் சிரிக்கின்றது. எவ்வளவு தூய்மையாக சிரிக்கிறார்கள். கல்மிசம் இல்லாத சிறுபிள்ளைகளால்தான் இப்படிச் சிரிக்க முடியுமோ? ஜெகதீபனும் சிரிக்கின்றான் இரண்டாம் பாடவேளை முடிய மணி அடிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வகுப்பிற்கு போகிறேன். முதல் இரண்டு பாடவேளைகளிலும் நிறைவாகப் படிப்பித்த திருப்தி மனதை நிறைக்கின்றது. இந்த திருப்திதான் வேண்டும். ஆசிரியத் தொழிலின் உச்சபயன் இதுவாகத்தான் இருக்கவேண்டும். இதற்கு பிறகுதான் இந்தப்பாடக் குறிப்பு, பாடப்பதிவு எல்லாம். தொடர்ந்து பாட வேளைகள் தொடர்ந்து மணியடிப்புக்கள். இப்போது எட்டாவது பாடவேளை முடிந்து தேவாரம் நடக்கின்றது. கடைசிப் பாடநேரம்சிறுது பசி வயிற்றைக் கிள்ளினாலும் நேரம்போனது தெரியவில்லை. டிப்பாச்சரில் கையெழுத்து வைத்து விட்டு எல்லா ஆசிரியர்களோடும் கலந்து நானும் வீடு செல்கிறேன்.

பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டு ஆசிரியத் தொழிலில் நுழைந்த போது எனக்குக் கிடைத்த முதல் பாடசாலை இது கிராமப் பாடசாலை தான். அமைதியானது. நகர்ப்புற நாகரீக நச்சுச் சுவடுகள் படியாத, பிறந்தகுழந்தை போன்ற அழகும் உண்மையும் நிறைந்தது எதையும் வெளிப்படையாகவே திறந்த மனத்தோடு பேசும் அதிபர், ஆசிரியர், பிள்ளைகள், 'ஓட்டை வாய்' என கம்பஸ்சில் பட்டம் பெற்றிருக்கும் எனக்கு வேறு பாடசாலை ஒன்று கிடைத்திருப்பின் நிச்சயம் இவ்வளவு நின்மதியோடு இருந்திருக்க மாட்டேன்.

'ஏன் ரீச்சர் உங்கை கிடந்து மினக்கெடுறியள் உங்கடை வீட்டுக்குக் கிட்ட பெரிய கொலிஜ் ஒன்று இருக்குது ஆரும் பெரிய கையாய் பிடிச்சியள் என்றால் மாறலாம்' —சாரதா ரீச்சர்.

'நான் A/L க்குப் படிப்பிக்கிறனான் என்ரை ஸ்கூல் கிளஸ்ரஸ் ஸ்கூல்' — மணிமாறன் மாஸ்ரர். 'உனக்கு இளநிலைத் தேர்வு திருத்த வந்ததே? நீ சின்ன வகுப்பிற்குத்தானே படிப்பிக்கிறனி அதுதான் வந்திருக்கு' – வசந்தி ரீச்சர். இவை தான் கொஞ்சம் கஸ்ரம். ஆனால் இந்த நிறைவு, திருப்தி, இந்தக் கணம் இதுதான் எனக்குப் பெரிசு,

'வணக்கம்ரீச்சர்' ஆண்டு பதினொன்று படிக்கும் ஜெயந்தனின் காலை வணக்கம் என் சிந்தனைத் தொடரை அறுத்தது. பதில் வணக்கம் தெரிவித்து விட்டு சைக்கிளை ஊன்றி மிதிக்கிறேன், மேடும் பள்ளமும் நிறைந்த இந்தப் பாதைக்கு எனது சைக்கிளும் நன்கு பழக்கப்பட்டு விட்டது.

பாதையில் இருக்கும் பெரிய சலூனைக் கடந்தபோது ஜெகதீபனின் நினைவு வருகிறது. இன்றைக்கு அவன் எப்படி வருகிறான் என்பதை மறக்காமல் கவனிக்க வேண்டும், மனதில் குறித்துக்கொண்டேன்.

வழமையான காலைநேர பரபரப்பு எல்லாம் முடிந்து நேரசூசிகையின்படி 7A க்குள் நுழைகிறேன், எனது கண்கள் என்னையறியாமலேயே ஜெகதீபனை தேடுகின்றேன். ஒழுங்காக வெட்டப்பட்டு எண்ணெய் வைத்து வாரப்பட்ட தலையோடு அவன் சிரிப்பது மனதை நிறைக்கின்றது. ரீச்சர் சொன்னதை எவ்வளவு அக்கறையாக செயல்ப்படுத்தியிருக்கிறான். எனக்கு அவனைப் பாராட்ட வேண்டும். மனதை அடக்கிக் கொண்டு படிப்பிக்கின்றேன். இறுதி ஐந்து நிமிட விசாரணையில் இன்று முதல் ஆள் ஜெகதீபன்தான் 'ஜெகதீபன் யார் தலைமயிர் வெட்டினது?' பிள்ளை சொல்வதை அக்கறையாக செய்யும் தாய் தகப்பனும் இந்தச் சூழலில் இருக்கிறார்களே என வியந்தபடி கேட்கிறேன் அவன் ஒன்றுமே சொல்லவில்லை. கதைப்பதற்கு கொஞ்சம் கூச்சப்படுபவன் எனவே மீண்டும் கேட்கிறேன் பதில் இல்லை. இவனுக்கு என்ன வந்து விட்டது? பக்கத்து வீட்டு அக்கா தன் சிறு பிள்ளைகளுக்கு தானே தலைமயிர் வெட்டுவதைப் பார்த்திருக்கிறேன். அந்த நினைப்பு சட்டென நினைவுக்குவர தொடர்ந்து கேட்கிறேன் 'என்ன ஜெகதீபன் அம்மாவா வெட்டினது?' இப்போது அவன் மேசையில் படுத்து விட்டான். அவனுக்கு கிட்ட போகிறேன். அந்த பிஞ்சின் முகம் வாடிக் கிடக்கிறது. கண்களில் இருந்து கண்ணீர் வருகிறது. கடவுளே இவன் ஏன் அழுகிறான்? 'ஜெகதீபன், ஜெகதீபன் ஏன் அழுவான்?' ஆதரவாக முதுகை பற்றிக் கேட்கிறேன். இப்போது அவன் விக்கி விக்கி அழுகிறான்.

சீனிய ரீச்சரான கலைமதி ரீச்சரிடம் ஓடுகிறேன். ஜெகதீபனின் சமூகப் பின்னணி பற்றிக் கேட்கிறேன், 'கடவுளே அவனின் அப்பப்பா சலூன் வைத்திருக்கின்றாராம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1st Year Students and Lecturers 1994 / 95

**Group II**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# விரிந்த சிறகுகள்

செல்வபாலா
( 1-ம் வருட மாணவன் )

எனது இதய நெருடல்களையும், மகிழ்ச்சிகளையும் உங்களுடன் பகிர்வதில் அவாவுறுகிறேன். ஏனெனில் நடந்து முடிந்த வாழ்வின் நினைவுகள் இனிமையான அனுபவங்களாக மட்டுமன்றி கற்கவேண்டிய பாடங்களாகவும் உள்ளதால், நாம் அன்று சிறுவர்களாக இருந்தபொழுது பார்த்தவற்றை, படித்தவற்றை, கற்பனை செய்தவற்றை, ஏன் கனவு காண்பவற்றைக்கூட வெளிப்படுத்த ஆசையாக இருந்தோம். ஆனாலும் சந்தர்ப்பங்கள்தான் கிடைக்கவில்லை.

எமது உணர்வுகளை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்புக்கள் தரப்படவில்லை என்றே சொல்லவேண்டும். எமது உணர்ச்சிகளை வெளிப்படுத்த எம்மவர்கள் ஏன் அனுமதிக்கவில்லை. இவர்கள் சிறுவர்களாகிய எமக்கு உணர்வுகள் உண்டு என்பதையே மறந்து விடுகின்றார்கள். எதையும் விளங்கிக் கொள்ளாமல் மறப்பது என்பது சிறுபிள்ளைகளாகிய எமக்குக் கூட நிகழ்வதில்லை.

அன்று எட்டாம் வகுப்பில் படிக்கும் போது வகுப்பில் கடைசிப் பிள்ளையாக வந்தேன். ஆனாலும் பாடசாலை செல்ல விரும்பினேன். அன்றிலிருந்தே அட்டகாசம் மிக்கவனாகவும், கெட்டுப்போனவனாகவும் காணப்பட்டேன். மற்றப்பிள்ளைகளுக்கு அடிப்பதுடன், அவர்களில் சிலருக்கு இனிப்புப்பண்டங்கள் வாங்கிக் கொடுக்க வீட்டில் காசும் திருடினேன். தோல்விக்கு நான் முக்கியமானவனாக இருக்கவேண்டும் என்பதற்காக ......!எனக்கு ஏமாற்றத்தையளித்த பரீட்சை முடிவுக்காக எனது செயற்பாடுகள் தீவிரமாகின. கல்வி கற்பதில் முன்னரைவிட ஆர்வம் குறைந்தது.

''இதைப்பார்க்கும் போது என்னை நினைத்துக்கொள்'' அந்த வார்த்தைகள் எனது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியது. மறக்க முடியாததாய் இன்றுமுள்ளது. புதிதாக வந்த ஆசிரியை என்னை முதல் முதல் அணுகி எனக்கு ஒரு உறுப்பெழுத்துக் கொப்பியைத் தந்தார்....... அன்றிலிருந்து எனக்குப் பாடசாலையில் ஒரு இடமுண்டு, என்ற நம்பிக்கை என்னிடம் பற்றுக்கொண்ட, ஆசிரியையிடமிருந்து கிடைத்தது. அப்போதிருந்தே என் நடத்தைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இங்கே நடத்தை என்பது உணர்ச்சிகள், சிந்தனைகள், கல்வி அனுபவங்கள் என்பவற்றின் விளைவாக சிறுவர், வளர்ந்தவர்களிலும், ஏற்படும் மாற்றங்களும், வெளித்தோன்றும். செயல்களும் எனக்கூறலாம். எனது வாழ்க்கைப் புத்தகத்தில் மகிழ்ச்சிப் பக்கங்கள் கிழிக்கப்பட்டு விட்டன. என நினைத்த எண்ணங்கள் மறைந்தன...... எனது உணர்வுகளை வெளியிட பல வாய்ப்புக்கள் கிடைத்தன. நாடகம் நடிக்கச் சேர்க்கப்பட்டேன். நான் பிழையாக எழுதிய ஆக்கங்கள் ஆசிரியையால் திருத்தப்பட்டு வகுப்பறையில் வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இது உற்சாகத்தை ஏற்படுத்தியதுடன் படைப்பாற்றலையும் விருத்தி செய்தது.

படிப்படியாக சிறு கதைகளை வாசிக்க எல்லா மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. அன்றொரு நாள் நினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகள் சோகமானவை'' என்ற சிறு கதையை நான் வாசிக்க வேண்டியதாயிற்று ...... உணர்ச்சி ததும்ப வாசித்தேன். சோகமான கதை அது, வகுப்பில் உள்ள சகலரும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கண்கள் கலங்க மௌனமாக அமர்ந்திருந்தார்கள். ''அங்க எங்கட ரீச்சர் கூட அழுகிறா''!

எமது ஆசிரியை தனது உணர்ச்சிகளை மாணவக் குழந்தைகளாகிய எம்மிடம் போலியாக மறைக்க முன்வரவில்லை. இதுகூட அன்பையும், நேர்மையையும் ஏற்படுத்தும் நல்ல விளைவுதான். எமக்கு இரக்க உணர்ச்சி மேலிட்டது. நாமெல்லாம் சேர்ந்து ஆசிரியைக்கு ஆறுதல் கூறினோம்......

இன்று நினைத்துப்பார்க்கிறேன். பின்தங்கியிருந்த என்னை ஆசிரியை எப்படி முன்னணிக்குக் கொண்டு வந்தார். எனது குறித்த ஒவ்வொரு இன்னல்களுக்கும், மேலதிக உதவியைச் செய்தார். எப்படி? பிரச்சனைகளைத் தெரிந்து மதிப்பிட்டார், விளங்கிக்கொண்டார். உதவி நடவடிக்கைகளைத் தெரிவுசெய்து செயற்படுத்தினார். என்னுடன் பெற்றோருடனும், ஏனைய ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து மேலும் வழிகாட்டினார்.

இவ்வகையில் கற்றலைக் கவர்ச்சி மிக்க செய்முறையாக்கும் கொடையாளியாக இருந்து ஒளியேற்றினார். ஆசிரியை சற்று வித்தியாசமான முறையிலும் என்னை அணுகினார். ஆரம்பத்தில் என்னிடமிருந்து பலவற்றை அவர் கிரகித்துக் கொண்டார். எனது சில தீயசெயல்களின்போது ஆசிரியை காட்டும் அலட்சியத்தையும், எரிச்சலூட்டும் செயற்பாடுகளையும் பொறுத்துக்கொள்வதற்காகப் போராடினேன்.

ஒரு நாள் அதிபர் அடித்ததற்காக இரு நாட்காலிகளை எல்லா மாணவர்களுக்கும் முன்னால் உடைத்து நொருக்கினேன். வகுப்பறையில் பொறுமையை இழந்து பாடத்தைக் குழப்ப பின்வாங்கு நண்பர்களுடன் இணைந்து சத்தமிட்டேன்! ... மற்றும் பல செய்தோம். எம்மை எப்படிக் கையாள்வது என உளவியல் நூல்களில் எழுதி வைத்திருக்கலாம். ஆனால் நடைமுறையில் வெற்றி பெறுவதென்பது மிக மிகச் சிரமமானதே. இவை எல்லாவற்றையும் தீர்க்க முதன்முதலில் எமது ஆசிரியை எம்மை நேசித்தார். அதுவே பெருமாற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் எமக்குப் போதித்ததைவிட எம்மிடமிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டார். எம்மை எல்லோரும் வெறுக்க அவர் எம்மை உரிமையுடன் நேசித்தார். எம்மைச் சிறந்த மாணவராக்கி கல்வி விளக்கேற்றிய பெருமை அப்பெரும் தியாகச் செம்மலையே சாரும். இனியும் எம்முடன் அவர் வாழ்ந்து எமது இதயத்திலிருந்து எல்லையற்ற இவ் உலகில் வாழ வழிகாட்டி வருகின்றார்.

இந்த ஆசிரிய இதய தெய்வத்துக்கும் முன்னர் சிறுவயதில் எனது வாழ்வில் பல மறக்கமுடியாத நினைவுகள் இன்றும் நிழலாடுகின்றன. உதாரணமாக, மூன்றாம் வகுப்பில் நானும் ராகினியும் கைகளைப் பிடித்து நடந்துவந்ததற்காக கடுமையாக ஆசிரியரால் தண்டிக்கப்பட்டது. எனது நண்பன் தவத்திற்கு சிரங்கு வந்ததால் இருவரையும் ஒன்றாக இருக்கவிடாது தடுத்தமை. குகன் பென்சிலைத் தொலைக்க நான் களவு எடுத்ததாகப் பழி சுமத்தப்பட்டு மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டமை. இவைகள் எல்லாம் இன்றும் மன எல்லைகள் சிறகு விரிந்து கல்வியின் ஞானப் பொக்கிசத்தை அடைய முற்பட்ட வேலையிலும் நிழலாடி நிம்மதியைக் குலைக்கின்றதே!... அனுபவங்கள், சாதனைகள், திறமைகளின் மொத்த வடிவங்கள் தானே! இவையே எடுத்துக்காட்டான வெற்றிகளைத் தீர்மானிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உளநலத்தின் சமூகப் பரிமாணங்கள்

செல்வி. தி, சத்தியகலா
முதலாம் வருட மாணவி

"ஆரோக்கியம் என்பது நோய் நிலைகளிலும், இயலாமையிலும் இருந்து விடுபட்ட நிலை மாத்திரமல்ல. ஒருவர் தம் உடல், உள, சமூக, ஆத்மீக நன்னிலைகளில் அடையக்கூடிய அதி உயர்ந்த நிலையே ஆரோக்கியம் எனலாம். ஆரோக்கியம் மனிதனின் அடிப்படைப் பிறப்புரிமைகளில் ஒன்றாகும்"– என உலக சுகாதார ஸ்தாபனம் ஆரோக்கியத்திற்கு வரைவிலக்கனம் வழங்கியுள்ளது. ஆயினும் எமது சமூகத்தைப் பொறுத்தவரை ஆரோக்கியமெனும் போது அது உடல் ஆரோக்கியத்தை மட்டுமே குறிக்கின்றதென்ற கருத்துப் பரவலாக உள்ளமையால் உள ஆரோக்கியமானது முற்றிலும் புறக்கணிக்கப்பட்டதொன்றாகவே காணப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளாக உளநோய்க்கெனச்சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதை மருத்துவமனைப் பதிவேடுகள் சுட்டிநிற்கின்றன. இவர்களில் கணிசமான தொகையினர் இளம் பராயத்தினராவர். இந்நிலை எமது பிரதேசத்தில் மட்டுமன்றி முழுநாட்டிலுமே அவதானிக்கப்பட்டுள்ளது. ஸ்கிஸ்சோபிறீனியா ( Schizophrenia ) எனப்படும் உளமாயை நோய்த்தாக்கம் 18-26 வயதினரிடையே அதிகளவு காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தற்போதைய புள்ளி விபரங்களின் படி இலங்கையில் ஒவ்வொரு 100 000 பேருக்கும் 50 பேர் என்ற ரீதியில் தினமும் தற்கொலைகள் நடப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இங்ஙனம் தற்கொலை செய்பவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞரும், யுவதிகளுமேயாவர்.

தற்போதைய நிச்சயமற்ற, பதற்றமான சூழ்நிலையும், சமூக மற்றும் குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும், சடுதியான கலாசார மாற்றங்களும் உள ஆரோக்கியத்தைச் சீர்குலைக்கும் பிரதான காரணிகளாக விளங்குகின்றன. ஒரு சில பாரதூரமான, மூளையில் தொழிற்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய உளநோய்களும் சீரான உள ஆரோக்கியம் பேணும் நடவடிக்கைகள் வாயிலாகத் தவிர்க்கக் கூடியனவாகும்.

உடல்நோய்களைத் தவிர்ப்பதற்குரிய விழிப்புணர்ச்சியைச் சமூகத்தில் ஏற்படுத்துமுகமாக மேற்கொள்ளப்படும் பிரச்சார நடவடிக்கைகள் உளநோய் விடயத்தில் மேற்கொள்ளப்படாமையும், உளநோய் தொடர்பாக சமூகத்தில் நிலவும் களங்கமனப்பான்மையும் உளநோய்த் தடுப்பு நடவடிக்கைகளிலும், உளநோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சையளிப்பதிலும் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. இத்தகைய உளநோய்த்தடுப்பு நடவடிக்கைகள், மற்றும் உளநோய்குறிகளைக் காண்பிப்பவர்களை அல்லது நோய்க்குள்ளாகக் கூடிய சாத்தியமுள்ளவரை இனம் கண்டு சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் போன்றவற்றை சமூகத்திலுள்ள சிறுவர்களை மையப்படுத்தி மேற்கொள்வது பெரும் பயன் விளைவிக்கக் கூடியதொன்றாகும். ஏனெனில் இத்தகைய நடவடிக்கைகளினூடாக உளப்பிரச்சினைகள் ஆரம்ப நிலையில் வெற்றிகரமாகக்கையாளப் படக் கூடியதாக, இருப்பதுடன் அப்பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் ஏற்படக் கூடிய பாதிப்புக்களும், தவிர்க்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் சமூகத்தை மையமாகக் கொண்டவையாகவே அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவரின் உளநலத்திற்கும், இதில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகளுக்கும் இடையிலான தொடர்பு இன்னமும் தெளிவாகப் புரிந்து கொள்ளப்படவில்லையெனலாம். சிறுபிள்ளைகளில் பல்வேறு சூழற் காரணிகள் ஏற்படுத்தும் விளைவுகள், பெரியவர்களில் ஏற்படுத்தப்படும் விளைவுகளிலிருந்து பெருமளவு வேறுபடுகின்றன. அத்துடன் பிள்ளைகளிலேயே அவர்களின் வயதைப் பொறுத்து விளைவுகளின் அளவும், தன்மையும் வேறுபடுகின்றன. வயது எந்த அளவுக்குக்குறைவாக உள்ளதோ அந்தளவிற்குப் பிள்ளைகளில் சூழற்காரணிகளினால் ஏற்படும் பாதிப்பும் அதிகமாயிருக்கும். மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் மனதின் நெகிழ்ச்சித் திறன் சிறுபிள்ளைகளில் மிக அதிகமாக இருப்பதும் வயது அதிகரிக்க இத்திறன் ( Plasticity of mind ) குறைவடைவதுமே இதற்குக் காரணமாகும். ஆயினும் சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பெறுபேறுகள் இந்தப் பாதிப்புகள் மாற்றியமைக்கப்படக் கூடியன என்பதைக் காட்டியுள்ளன. எந்த அளவு குறைந்தவயதில் பாதிப்புக்கள் இனங்காணப் படுகின்றனவோ அந்த அளவு அப்பாதிப்பிற்குச் சிகிச்சையளிப்பதும் சுலபமானதாகும், மக்டொனால்டின் ( Mac Donald, 1985 ) கருத்துப்படி மனதின் நெகிழ்ச்சித் திறனானது வயது அதிகரிக்கக் குறைவடைவதால் வயது செல்லச்செல்லப் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய சிகிச்சை சிக்கலை எதிர் கொள்வதுடன் பலாபலன்களும் குறைவாகவே உள்ளன.

பிறவுண் ( Brown 1986 ) என்பவரின் கருத்துப்படி, ஆரம்பகாலப் பாதிப்புக்கள் எந்த அளவு கடுமையாகவுள்ளனவோ அந்தளவுக்கு சிகிச்சையினளவு, தரம் என்பவையும் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது சிறுபராயத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் மனத்தில் நிரந்தர வடுவாகி அதன் பிரதிபலிப்புக்கள் பிற்காலத்தில் வெளிப்படுத்தப்படலாம். இத்தகைய பாதிப்புக்கள் வெளிப்படுத்தப்படும் வேளையில் பொதுவாக மாற்றப்படமுடியாத நிலையை அடைந்து விடுகின்றன. இதனாலேயே சிறுவயதில் அதாவது விருத்தியடையும் காலத்தில் ஆரோக்கியமான, வளமான அனுபவங்களைப் பெறக் கூடிய வகையில் சூழல் அமைய வேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. ''பிள்ளைகளின் விருத்தியைப் பொறுத்தவரை முதலிரு வருடங்களும் முக்கியமானவை இக்காலத்தில் எந்த அளவுக்குவளமான அனுபவங்கள் வழங்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு ஆளுமை விருத்தி சிறப்பாக நடைபெறும்'' என்ற வைற் ( White, 1976 ) என்னும் ஆய்வாளரின் கருத்து இதை மேலும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

பிள்ளைகள் தமது அனுபவங்களைச் சூழலுடன் தொடர்பு படும்போது குறிப்பாகச் சகமனிதருடன் தொடர்புறுகையில் பெற்றுக் கொள்கின்றனர். இத்தகைய தொடர்புகளினூடு உருப்பெறும் ஆளுமையானது பிற்காலத்தில் அப்பிள்ளையின் மனநலத்தைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாக அமைந்துள்ளது. இத்தகைய சமூகமயமாக்கலூடான ஆளுமை விருத்தியில் பெற்றோர், குடும்ப உறுப்பினர், உறவினர், நண்பர், ஆசிரியர், சமூக, சமய, அரசியற் தலைவர்கள் போன்றோர் பெரும் பங்காற்றுகின்றனர். இதனால் ஒருவரின் ஆளுமைக் கோலமும் அவரின் மனநலமும் அவர் வாழ்ந்த, வாழுகின்ற சமூகத்தின், சமூகக் காரணிகளால் தீர்மானிக்கப் படுகின்றதெனக் கூறமுடியும். இத்தகைய சமூகக் காரணிகளில் கலாசாரம், சமயம், மொழி, சுற்றாடல் நிகழ்வுகள் போன்றன பிள்ளைகளின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் சிலவாகும்.

பிள்ளைகள் சிக்கற் தன்மையுடையதும், நுட்பமுமான விருத்திச் செயற்பாட்டின் போது தமது கலாசாரம் மாறும் சமயத்தின் பல்வேறு அம்சங்களை உள்வாங்கிக் கொள்கின்றனர். இதனால் இவை அவர்களின் எண்ணக்கருக்களையும் ( Attitudes ) பெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானங்களையும் ( Values ) உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பதோடு உலகம் பற்றிய அவர்களின் தரிசனத்தைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைந்து, அதன் காரணமாக அவர்களின் நடத்தைக் கோலங்களாக ( Behavioural patterns ) விளங்கிக் கொள்ளப்படும் வெளிப்பாடுகளை ( responses ) நிர்ணயிப்பவையாகவும் அமைகின்றன.

ஒரு மனிதனின் சிந்தனையையும் தரிசனத்தையும் தீர்மானிக்கும் மற்றொரு காரணி மொழியாகும். எரிக் புறோம் ( Eric From ) மொழியின் வடிகட்டும் செயற்பாடுபற்றிக் கூறுகையில் "எந்தவொரு அனுபவமும் அது தொடர்பான சொற்பிரயோகம் குறித்த ஒரு மொழியில் இல்லாவிடில் அம்மொழிக்குரிய கலாசாரத்தைச் சேர்ந்தவரால் அரிதாகவே உணரப்படக் கூடும்'' என்கிறார்.

சூழல் மாற்றங்களை அல்லது நிகழ்வுகளைக் கருத்திற் கொள்ளுகையில், இவை இளஞ்சிறார்களில் நேரடிச் செல்வாக்குச் செலுத்துவதையோ அல்லது பெற்றோர், சமூகத்தினூடு செல்வாக்குச் செலுத்துவதையோ காணலாம். அரசியற் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள், இனமத முரண்பாடுகள், அல்லது இவைகளால் ஏற்படும் நிகழ்வுகள் போன்றன இத்தகைய சில மாற்றங்கள் அல்லது நிகழ்வுகள் ஆகும். இத்தகையதொரு மாறும் சூழலையே எமது பிரதேசச்சிறார்கள் இன்று எதிர்கொள்கின்றனர். இடப்பெயர்ச்சி, வறுமை, நோய்கள், இழப்பினால் ஏற்படும் துயரம், வன்முறைகளைக் காணல், வன்முறைகளை அனுபவித்தல், கல்வியிலேற்படும் குழப்பங்கள் போன்றவை எமது சிறார்களை எதிர்கொள்ளும் நெருக்கீடுகளிற் சிலவாகும். இவற்றை விட என்றுமில்லாதவாறு இளம் தலைமுறையினர் வெளிநாடு செல்வதால் குடும்ப உறவுப்பொறிமுறைகளில் ஏற்படும் மாற்றங்களும், வேற்றுக் கலாசாரத் தொடர்புகளால் ஏற்படுத்தப்படும் தாக்கங்களும் கூடச் சிறுவர்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. உணர்வு குறைந்த நிலை ( Apathy ) வன்மைப்படுத்தப்படல் ( Brutalization ), பதற்றம் ( Anxiety ), மனச்சோர்வு ( Depression ), அறிவு விருத்திக் குறைபாடு ( Cognitive-impairment ), உள மெய்ப்பாட்டு நோய்கள் ( Somatoform disorders ) மன வடு நோய் ( P T S D ) போன்றன இத்தகைய சிறார்களில் அவதானிக்கப்படுகின்ற உளப்பாதிப்புக்களிற் சிலவாகும். இவற்றை நிவர்த்தி செய்வதற்குச் சமூக ரீதியான நடவடிக்கைகளும், குடும்பங்களை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவது எதிர்கால சமூகத்தின் ஆரோக்கியத்துக்கு அவசியமான தென்பதில் சற்றேனும் ஐயமில்லை.

✶

"கல்வி என்பது அனுபவங்களை மீண்டும் மீண்டும் பழுதுபார்த்தலாகும் புனரமைப்பதாகும்''

ஜோன்டூயி

மாணவன் பார்திருப்பவனாகவன்றி உயிர்ப்பாக ஈடுபடுபவனாக இருத்தல் வேண்டும்

ஜோன் டூயி

"முழுமையான மனிதனைத் தோற்று வித்தல் மூலமே சமூக அபிவிருத்தி ஏற்படுகின்றது''

கால் மாக்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலர் பேனாவிலிருந்து ........

1986இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் இலங்கையின் கல்வி அபிவிருத்தியை பிரதான நோக்கமாகக் கொண்டது.

ஆசிரியர் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்ட நிறுவனம், பட்டதாரி ஆசிரியர்களின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியில் மிகுந்த அக்கறை கொண்டு கல்வித்துறையில் பாரிய புரட்சிகளை ஏற்படுத்தி வருகின்றது. பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறி தமிழ்மொழி மூலம் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்மொழி மூலம் பட்டதாரி ஆசிரியர்களும், மேற்படி கல்வித்துறையில் பயில வாய்ப்புச் செய்து கொடுத்துள்ளது. இதற்காக நாட்டின் பல பகுதிகளிலும் பிராந்திய நிலையங்கள் அமையலாயிற்று. இச்சந்தர்ப்பத்தில் எமது மண்ணில் ஒரு நிலையம் அமைவதில் பல தடைகள் ஏற்பட்டன. நாட்டின் சூழ்நிலையைக் காரணங்காட்டி யாழ்ப்பாணத்தில் பிராந்திய நிலையம் ஒன்று அமைப்பதைச் சிலர் பின்னடையச் செய்தார்கள்.

● யாழ்ப்பாணத்தில் நிலையம்

யாழ்ப்பாணத்தில் நிலையம் அமைவதில் சில பின்னடைவுகள் காணப்பட்ட போதும் அவற்றை வெற்றி கொண்டு இங்கு நிலையம் அமைவதற்கான வழிவகைகளை அன்று யாழ்ப்பாணப் பிரதேசக் கல்விப்பணிப்பாளராகவிருந்த திருவாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களும், முகாமைத்து நிலையப் பணிப்பாளராகவிருந்த திரு. என். தணிகாசலம் பிள்ளை அவர்களும் அறிந்து கொண்டனர், அவர்களது அயராதமுயற்சியால் 1992ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் பிராந்திய நிலையம் அமைவதற்கு வழி பிறந்தது.

● மாணவர் தெரிவு

ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன. மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். பெருந்தொகையான பட்டதாரி ஆசிரியர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயில ஆர்வம் காட்டியதால் யாழ்ப்பாணத்தில் இரண்டு நிலையங்கள் அமைத்துக் கொள்வதற்கும் முடிந்தது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஒன்றும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஒன்றுமாக இரு நிலையங்கள் அமைந்தன. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி நிலையத்தில் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்ட மாணவர்களும் கல்வி பயில வசதிசெய்து கொடுக்கப்பட்டது.

விரிவுரையாளர் தெரிவு

மாணவர்கள் தொகைக்கேற்ப விரிவுரையாளர்கள் உள்ளூர்ப்பத்திரிகையில், விளம்பரம் செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் 1992ஆம் ஆண்டு பங்குனி மாதம் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களால் யாழ்ப்பாண நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்ப வைபவத்துக்கு யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறை தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் ஆசியுரை வழங்கினார். நிலைய இணைப்பாளர் திரு. எம். தணிகாசலம்பிள்ளை நிலையச் செயற்பாடுகள் பற்றி கருத்துரை வழங்கினார். திரு. தி. கமலநாதன் நெறியின் அமர்வுகள் பாடங்கள் செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தார் தொடர்ந்து அமர்வுகள் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Graduate Trainees and Lecturers 1994/95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நிலைய விரிவுரையாளர் குழாம்

கலாநிதி அ. சின்னத்தம்பி அவர்களை சிரேஸ்ட விரிவுரையாளராகக் கொண்டு பின்வருவோர் எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி நிலைய விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றனர். அவர்கள் திரு. தி. கமலநாதன், திரு. கு. சண்முகநாதன்,செல்வி ரி. வீரசிங்கம், திருமதி. எம். ராஜாராம் ஆவர். பின்னர் செல்வி ரி. வீரசிங்கம்,திருமதி எம். ராஜாராம் ஆகியோர் யாழ். இந்துக் கல்லூரிக்கு மாற்றம்பெற எமது நிலையத்துக்கு திரு. ஆர். எஸ். நடராசா,திரு. தா' அமிர்தலிங்கம் செல்வி யோ. கந்தையா ஆகியோர் நிலைய விரிவுரையாளர் குழாத்துடன் இணைந்து கொண்டனர். தொடர்ந்து ஏற்பட்ட மாற்றத்தினால் கலாநிதி அ. சின்னத்தம்பி அவர்களின் இடத்திற்கு திரு தி. கமலநாதன் சிரேஷ்ட விரிவுரையாளராக நியமனம் பெற்றார். விஞ்ஞான சிறப்புக் கற்பித்தல் முறையில் விரிவுரையாற்றுதற்கு திரு. எஸ். செந்தில்மணி அவர்களும், கணிதத்துக்கு திரு. எம். பரம்சோதி அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

● நிலைய உதவியாளர்

நிலைய செயற்பாடுகளுக்குதவ இலிகிதராக செல்வி ஆர். ரஞ்சினியும் உதவியாளர்களாக திரு. ரி. வரதராசாவும் திரு. எம். முத்துராசாவும் பணி புரிகின்றனர்.

● மாணவர் தொகை

1) 92—93 ஆம் ஆண்டு கற்கை நெறியில் 189 மாணவர்கள் பயின்றனர் அவர்களில்

யாழ் மாவட்டம் — 81 மாணவர்கள்
கிளிநொச்சிமாவட்டம்—39 மாணவர்கள்
முல்லைத்தீவுமாவட்டம்—44மாணவர்கள்
மன்னார்மாவட்டம் — 22 மாணவர்கள்
வவுனியா மாவட்டம் — 3 மாணவர்கள்

போக்குவரத்துக் கஷ்டத்தை மனிதாபிமான சிந்தனையுடன் உணர்ந்து வெளி மாவட்ட மாணவர்களுக்கான நிலையமொன்று கிளிநொச்சியில் அன்றைய கல்விப் பணிப்பாளர் திருவாளர் க. கந்தசாமி அவர்களின் முயற்சியால் நிறுவப்பட்டது. எமது நிலையத்தில் யாழ் மாவட்ட மாணவர்கள் மட்டும் பயிலலாயினர்.

2) 93—94 ஆம் ஆண்டு கற்கை நெறியில் 147 மாணவர்களுளர்.

3) 94—95 ஆம் ஆண்டு கற்கை நெறியில் 99 மாணவர்களுள்ளனர்.

92/93ஆம் ஆண்டு மாணவர்கள் தமது பயிற்சியினை முடித்து வெளியேறியுள்ளனர்.

● பெறுபேறுகள்

எமது நிலையத்தின் பகுதி 1க்கான பெறுபேறுகள் 22-07-94 இல் யாழ்ப்பாணத்தில் சிரேஷ்ட விரிவுரையாளரால் வெளியிடப்பட்டன. அப்பெறுபேறுகளின்படி எமது நிலையம் சிறப்பான இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் எவரும் பரீட்சையில் தோல்வியடையாமை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடக் கூடியதாகும். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 77.9% தினர் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்தனர். எஞ்சியவர்களில் 19.5%தினர் 3பாடங்களிலும்2.6% தினர் 2 பாடங்களிலும் சித்தியடைந்து தவறிய பாடங்களில் மட்டும் மீளவும் தோற்ற வேண்டியுள்ளார்கள்.

எமது பெறுபேறுகளை பாடரீதியாக அவதானிப்பின் மிகச் சிறந்த பெறுபேறு கல்வியின் வரலாற்று அடிப்படை பாடத்திற்குக் கிடைத்தமை அவதானிக்க முடிகின்றது. அப்பாடத்தில் A —தரத்தினை ஒருவரும் B —தரத்தினை 18.1% தினரும் C —தரத்தினை 80.5% தினரும் பெற்றுள்ளனர். கல்வியின் உளவியல் அடிப்படைகள் பாடத்தில் B தரத்தினை 12.9% தினரும் C தரத்தினை 75.3% தினரும் D தரத்தினை 10.3% தினரும் பெற்றுள்ளனர். கல்வியில் தத்துவார்ந்த அடிப்படை பாடத்தில் B தரத்தினை 9.0% தினரும் C தரத்தினை 86.0% தினரும் D தரத்தினை 3.9%தினரும் பெற்றுள்ளனர் கல்வியின் சமூகவியல் அடிப்படைகள் பாடத்தில் B தரத்தினை 5.2% தினரும் C தரத்தினை 84.4% தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் D தரத்தினை 9.0% தினரும் பெற்றுள்ளனர். ஒப்படைகள் ஒப்படைக்காத சில மாணவர்களுக்கு தேசிய கல்வி நிறுவகம் பெறுபேறுகளை வெளியிடவில்லை. பின்னர் அக் குறிப்பிட்ட மாணவர்களிடமிருந்து ஒப்படைகள் பெறப்பட்டு, மதிப்பீடு செய்து புள்ளிகள் அனுப்பப்பட்டபோதும் இதுவரை அவர்களுக்கு பெறுபேறுகள் கிடைக்கவில்லை

● இணைப்பாளர்கள்

பின்வருவோர் எமது நிலைய இணைப்பாளராகக் கடமையாற்றியுள்ளனர். திரு. என். தணிகாசலம் பிள்ளை திரு. துரை தியாகராசா திரு. புலேந்திரன் திரு. சிவானந்தன்.

● வலய அமைவும் நிலையமும்

யாழ்ப்பாண மாவட்டம் இரண்டு கல்வி வலயங்களாக நிர்வாகத்துக்குட்பட்ட போது சில நிர்வாகச் செயற்பாடுகளை இலகுவாக்கும் நோக்குடன் எமது நிலையம் வலயம் 2இல் உள்ள ஆசிரியர்களை உள்வாங்கும் நோக்குடன் கருமமாற்ற வேண்டப் பட்டது. அதற்குதவியாக வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. க, கந்தசாமி அவர்கள் மேற்பார்வையுடன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. E. சிவானந்தன் அவர்களை இணைப்பாளராகவும் கொண்டு நிலையச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டன. வேண்டும் உதவிகள் அவர்களால் அவ்வப்போது செய்து தரப்படுவதோடு நிலைய செயற்பாட்டுக்கு வேண்டிய ஆக்க பூர்வ ஆலோசனைகளும் அவர்களால் தரப்படுகின்றன.

● எமது வேண்டுகோள்

1. தேசிய கல்வி நிறுவகத்தின் ஒரு கிளை தமிழ் மொழியிலே மாணவரின் நலன் கருதி யாழ்ப்பாணத்தில் நிறுவ நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென பணிப்பாளரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

2. நிறுவனத்தின் பரந்து விரிந்த செயற்பாடுகளின் பலன் எமது மண்ணுக்கும் கிட்டுதற்கு ஆவன செய்து தாருங்கள்

3. வளர்ந்து வரும் கல்வி நுட்பங்கள், செயற்பாடுகள் என்பவற்றை காலத்துக்குக் காலம் எமக்கும் தெரியப்படுத்தி எமது சமுதாய வளர்ச்சிக்கு தவுங்கள்.


4. எமது பெறுபேறுகள் அடைவுகள் என்பன கால தாமதமின்றி நாம் பெற்றுக் கொள்ள உதவுங்கள்.

5. தொடர்ந்து நாம் கற்பதற்கு மேற்படிப்புகளை மேற்கொள்வதற்கு(B. Ed, M. Ed Ee) வசதிகள் தாருங்கள்.

6. தேசிய கல்வி நிறுவகத்தின் வெளியீடுகள் அவ்வப்போது எமக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்து தாருங்கள்.

நன்றி.

2.04.95 -செயலர்-



# சங்கீதாமிர்தம்

கிருஷ்ண பரமேஸ்வரன்
இசைக்கலைமணி — சங்கீத கலா வித்தகர்
( 8-ம்வருட மாணவன் )

ஆயகலைகள் அறுபத்தி நான்கினுள்ளும் மேன்மையான கலை சங்கீதக் கலையாகும். இச் சங்கீதக்கலைமூலம் கடவுளைக்காணலாம். சங்கீதம் இதயத்தை மகிழ்வித்து ஆத்ம சுகத்தை உண்டு பண்ணும், கீதம், வாத்தியம், நிருத்தியம் எனும் மூன்றினையுமிணைத்த ஓர் ஈடிணையற்ற கலையே இச் சங்கீதக்கலையாகும். இந்த இசை, நடனம் போன்றன இறைவனையே மகிழ்விப்பன. பண்ணும் பரதமும், பாட்டும் பரதமும் பரம்பொருளான பரமேஸ்வரனின் பாதாரவிந்தங்களைப் பற்றவைப்பன. என்பது சமயத்தத்துவத்தினதும் இந்துப் பெருமக்களினதும் அசையாத நம்பிக்கையாகும்.

நிலை பேறில்லாத உலகிலே நிலை பெற்று வாழ்வது சங்கீதம் தான். இதனால் தான் மக்கள் அழிவில்லாத மேன்மையான சங்கீதத்தை என்றுமேயுள்ள இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்தனர். இசையையும் நடனத்தையும்இறைவனோடு சேர்த்து அவற்றிற்கு பெருமையும் கொடுத்தனர். இந்த சங்கீதம் தெய்வீகமானது என்பதை இந்து சமயமும் பறை சாற்றி நிற்கின்றது. இந்து சமய கடவுளர்களின் கையிலுள்ள இசைக் கருவிகளும் இதை உணர்த்துகின்றன. சிவனின் கையிலுள்ள உடுக்கையும், கிருஷ்ணன் கையிலுள்ள புல்லாங்குழலும், சரஸ்வதியின் கையிலுள்ள வீணையும் இதற்கு சான்று பகரும்.

சங்கீதம் மனத்தினை இளகச் செய்கிறது. தாலாட்டுப் பாடினால் தூக்கம் வருகிறது. சோககீதம் பாடினால் துக்கம் வருகிறது. பக்தி கீதம் பாடினால் நெஞ்சம் நெகிழ்கிறது. நமது கடவுள் வடிவங்கள் அனைத்திற்குமே இசை ஆதாரவடிவமாக நிற்கிறது. அறிவற்ற ஐந்து களையும் அசையாத பொருட்களையும் கூட இசை தன்வசப் படுத்திக் கொள்கின்றது. இதனால் தான் இசையால் வசமாகாத இதயமேதுமுளதோ, என்று கூறப்படுகிறது. இசையின் மூலமும் நாட்டியத்தின் மூலமும் இயற்கையாகவே ஒரு நிம்மதியைப் பெறமுடியும். இசையையும் நாட்டியத்தையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது. சத்தத்தைப் புரட்டுகின்றோம், இசை கேட்கிறது. அங்கங்களை புரட்டுகின்றோம் நாட்டியம் தெரிகிறது. இந்த இசை நடனத்தை அனுபவிக்கும் போது எம்மையே மறக்கின்றோம். ஆனந்த இன்பக் கடலில் சங்கமமாகிறோம். சங்கீதக் கலைகாந்தர்வ வேதமாகும், காந்தர்வர்கள் உற்சாகப் பிறவிகள். அவர்கள் எப்பொழுதுமே பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டுமிருப்பார்கள்.

மனிதன் ஆத்மீக உணர்வுகளை பயபக்தியுடன் இறைவனுக்கு அர்ப்பணிக்கும் செயலே சங்கீதமென்பர். இதில் இசையைப் பற்றி இந்துசமய சைவநாயன்மார்கள் கூறும் போது '' ஏழிசையாய் இசைப்பயனாய் '' என சுந்தரரும், ''ஓசை ஒலியெலாமானாய்' என நாவுக்கரசரும், ''பண்ணமர் வீணையினான்'' என சம்பந்தரும் கூறுவதிலிருந்து இறைவனை இசையின் இருப்பிடமாகவே வர்ணிக்கின்றன. அது போலவே அண்டசராசரங்களையும் ஆளுகின்ற ஆடல் வல்லானாகிய அப்பனே நடனத்திற்கு அதிபதியான நடராஜராக உள்ளார். எனவே அனைத்திற்கும் மூலமான இறைவனே சங்கீதம். சங்கீதமே இறைவன், சங்கீத மென்றால் இன்னதென்றுசொல்லமுயல்வது விளக்க முடியாத,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைவிலக்கணம் கூறமுடியாத, ஒன்றினை விளக்க முயல்வதைப் போன்றதாகும். சங்கீதம் உயிருள்ள, உயிரற்ற பொருட்களை உருக்கும் தன்மை வாய்ந்தது. எல்லோரையும் மகிழ்விக்கும் இச் சங்கீதத்தில் மெய்ஞானமும் விஞ்ஞானமும் இருக்கின்றது.

சங்கீதம் தீர்க்கதரிசிகளின் கலையாகும். இந்தக் கலை ஒன்றே ஆன்மாக்களுக்கு குழப்பங்களைப் போக்கி அமைதியினை கொடுக்க வல்லது. இறைவன் எமக்களித்த மேன்மையான உன்னதமான மகிழ்விக்கும் கலை சங்கீதம் என்றால் அது மிகையாகாது. சங்கீதம் மனவெழுச்சியை உண்டாக்குகின்றது. இனிமையான மன வெழுச்சிகள் மனிதனுக்கு அழகினையும் பூரணத்துவத்தையும் கொடுக்கின்றன. சமுதாய நடைமுறையிலே சங்கீதக்காரர்களின் வாழ்க்கை ஒரு வகையானது விதமானது என்பது சிலரின் கருத்து. ஆனால் அது உண்மை தான். சங்கீதக்காரர்களின் வாழ்க்கைத் துணையே சங்கீதம் தான். சங்கீதத்தோடு வாழ்பவர்கள் உலகத்தை வாழ்விப்பவர்கள். அவர்கள் சாதரண மனிதர்களைப் போலவாழ முடியாது தானே!

''கவி யொன்று நீ யெனக்கு தா – முருகா
புவி மாந்தர் மயங்கிடும் கவி தா''

என்னும் வரிகள் என்னிசை கேட்டு மக்கள் மயங்க வேண்டும். அதற்கேற்ப நல்லதொரு பாடலை முருகப் பெருமானே நீ எனக்கு தந்தருள வேண்டுமென கேட்கப்படுவதாகவுள்ளது; இசையை இரசித்து இசையில் மயங்குபவன் இறைவனைக் காண்பது நிச்சயம், அந்த இறைவனை காணவைப்பவன் சங்கீதக்காரன். அமிர்தம் உண்டவன் அழிவதில்லை அது போல சங்கீதாமிர்தம் கொண்டவனும் அவ்வாறே. அவன் இறந்தாலும் உலகில் என்றுமே வாழ்ந்து கொண்டிருப்பவன். இது தான் சங்கீத வாழ்க்கை.

சங்கீதம் தேவதூதர்களின் களங்கமற்றவர்களின் மொழி என்பதே மேலை நாட்டு அறிஞர்களினதும் கருத்தாகும். இதனை அறிஞர் கார்லைல், சேக்ஸ்பியர் போன்றோரும் கூறியுள்ளனர். இந்த சங்கீதம் இந்து சமயத்திற்கு மட்டுமல்ல ஏனைய மதங்களிலும் முக்கிய இடம் வகிக்கிறது. கிறிஸ்தவ மதத்தின் ஆராதனையின் போதும், பௌத்த சமயத்தின் நிகழ்ச்சிகளின் போதும், இஸ்லாம் மதத்தின் தொழுகைகளின் போதும் சங்கீதம் வகிக்கும் முக்கிய இடத்தை காணமுடிகிறது. இந்த சங்கீதம் இன மத மொழி சமூக வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு எல்லோரையும் மகிழ்விக்கும். ஒரு தெய்வீகக் கலையாகவுள்ளது இது மக்களின் பண்பாட்டை நாகரிகத்தை உலகறியச் செய்யும் கருவியாகும்.

❋

'' ஆசிரியர் பாடசாலைக்கு மட்டுமன்றி கிராமத்துக்கும்
ஒளி விளக்காக அமைகின்றார் ''

காந்தியடிகள்

'' ஒவ்வொரு கல்வி முறையும் யாதேனும் வாழ்க்கைக்
கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே ஒழுங்கமைகின்றது ''

ஜே. எஸ் புருனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நெறி (Our Course)

★ எங்கள் நெறி பட்டப்பின் கல்வி டிப்ளோமா [Post Graduate Diploma in Education] என்றழைக்கப்படும் P. G. D. E.

★ மகரகம தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படுகிறது.

★ எங்கள் நெறியில் பட்டதாரிகளான ஆசிரியர்கள், நுண்கலையில் டிப்ளோமாப்பட்டம் பெற்றவர்கள். [Dip Dance, Dip in Music Etc.] பட்டதாரிகளான நிர்வாக உதவியாளர்கள் பயிற்சி பெறலாம்.

★ பயிற்சிக் காலம் இரண்டு வருடங்களைக் கொண்டதாகும்.

★ முதலாம் வருடத்தில் பின்வரும் 4 பாடங்கள் உண்டு.

1) கல்வியின் உளவியல் அடிப்படைகள்
2) கல்வியின் தத்துவார்த்த அடிப்படைகள்
3) கல்வியின் வரலாற்று அடிப்படைகள்
4) கல்வியின் சமூகவியல் அடிப்படைகள்.

★ மேற்கூறப்பட்ட 4 பாடங்களிலும் ஒரு வருட முடிவில் எழுத்துமூலப் பரீட்சை [Written Examination] நடைபெறும்,

★ தவிர ஒவ்வொரு பாடங்களுக்கும் தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்படும் தலைப்புக்களில் ஒப்படைகள் [Assignments] மாணவர்களால் எழுதப்படல் வேண்டும்.

★ ஒப்படைகளுக்கு 20 புள்ளிகள் வழங்கப்படும்.

★ இப்புள்ளிகள் முதலாம் ஆண்டு எழுத்துப் பரீட்சைப் புள்ளிகளுடன் சேர்க்கப்படும்.

★ ஒப்படைகள் ஒப்படைக்காதவர்களுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் கிடைப்பதில்லை.

★ பரீட்சைகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் [Dept of Examinations Sri Lanka]

★ இரண்டாம் வருடத்திலும் 4 பாடங்களுண்டு.

1) கல்வி வழிகாட்டலும், ஆலோசனை வழங்கலும்
2) பாடவிதான அபிவிருத்தியும், பாடசாலை முகாமைத்துவமும்
3) அ) பொதுக் கற்பித்தல் முறை
   ஆ) சிறப்புக் கற்பித்தல் முறை.
4) மொழித்திறன் (தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்)

★ சிறப்புக் கற்பித்தல் முறையில் பின்வரும் பாடங்களில் ஒன்றைப் பயில வாய்ப்புண்டு.

1) கணிதம்
2) விஞ்ஞானம்
3) சமூகக் கல்வி
4) வர்த்தகம்
5) தமிழ்
6) ஆரம்பக் கல்வி
7) சமயம்.

[95ஆம் ஆண்டிலிருந்து நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய பாடங்களும் இங்கு சேர்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இவற்றுடன் கற்பித்தல் பயிற்சி [Teaching Practice] இரண்டு கட்டங்களைக் [Two Stages] கொண்டது. ஒவ்வொன்றும் 4 வாரங்கள் நடைபெறும். நிலைய விரிவுரையாளர்களே மேற்பார்வையாளராவர்.

★ இரண்டு கட்டங்களிலும் பெறப்பட்ட புள்ளிகளின் சராசரி, இறுதிப் புள்ளியாகப் பெறப்படும்,

★ இரண்டு கட்டப்புள்ளிகளிலும் அதிகளவு வேறுபாடு காணப்பட்டால் மூன்றாம் கட்ட கற்பித்தல் பற்றி தேசிய கல்வி நிறுவகம் நேரடியாக நடாத்தும்.

★ இரண்டாம் ஆண்டு மாணவர்கள் தங்கள் பயிற்சியின் பகுதித் தேவையாக செயல்திட்டம் [Project work] ஒன்றைச் சமர்பிக்க வேண்டும்.

★ அந்தச் செயல்திட்டம் ஆசிரிய மாணவர்கள் தங்கள் பாடசாலை சார்ந்ததாக பாடசாலை அபிவிருத்திக்கு வளம் சேர்ப்பதாக, பாடசாலைக் கற்றல், கற்பித்தல் செயல்பாட்டிற்குதவுவதாக தெரிதல் வேண்டும்.

★ மாணவர்கள் செயல் திட்டத்தினைத் தெரிவுசெய்யும்போது தங்கள் பாடசாலை அதிபருடன் கலந்து அவர் ஆதரவையும் அனுசரணையையும் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

★ வார இறுதி நாட்களில் [Week End] பயிற்சி நெறியின் அமர்வுகள் [Sessions] நடைபெறும்.

★ ஒவ்வொரு அமர்வுகளும் 3 மணி நேரத்தைக் கொண்டதாக நாளொன்றுக்கு இரு அமர்வுகள் இடம்பெறும்,

★ 3 மணி நேரத்தில் முதல் 1 மணிநேரம் பாடம் தொடர்பான அறிமுகமும், அடுத்து ஒருமணி நேரம் குழுவேலையும் [Group Work] இறுதி ஒரு மணி நேரமும் குழு வேலைமூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான, கலந்துரையாடலும் விளக்கமளித்தலும் இடம் பெறும்.

★ எமது பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடங்களுக்கும் மொடியூல்ஸ் [Modules] வழங்கப்பட்டு அதனூடே கற்றல் நடைபெறும்.

★ இங்கு மொடியூல்ஸ் ஆசிரியராகக் கணிக்கப்பெற்று கற்றல் நடைபெறுவதால் மாணவர்கள் செயல்பாடு பிரதானமாக ஊக்குவிக்கப்படுகின்றது.

★ நடைபெறும் அமர்வுகளில் 80% விதமான வரவு மிக அவசியமாகும். இவ்வரவினைப் பூர்த்தி செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

★ பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சி இரண்டு கட்டங்களையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கு தேசிய கல்வி நிறுவகத்தில் வாய்ப்புகளுண்டு.

★ சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் நிலைய செயற்பாடுகளுக்கு முழுப் பொறுப்பாக இருப்பர். அவர் நிலையச் செயற்பாடுகளுக்கு வேண்டிய முகாமைத்துவ கடமைகள் மேற்பார்வை ஆகியவற்றுடன் கற்பித்தல் பணியிலும் பங்கு கொள்வர்,

— சிவி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அஞ்சலி



அமரர் இ. சிவானந்தன்

*எமது நிலையத்தின் இணைப்பாளராய் (1994)*
*கடமையாற்றி*
*எம்மை இனிதே வழிகாட்டிய செம்மலுக்கு*
*எமது இதய அஞ்சலிகள்.*

**மாணவ அமைப்பு**

**பஃடப்பின் படிப்பு**
**யாழ். நிலையம்–08.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலர் நன்றி கூறுகிறார்

''நன்றி மறப்பது நன்றன்று'' என்ற மனிதப் பண்பாட்டுக்கு அமைய எமது நிலையம் எமது மண்ணில் அமைந்திடவும் சீரான வளர்ச்சியைப் பெற்றிடவும் முன்னின்று. உழைத்தவர்களை நன்றியுடன் நினைவு கொள்கின்றோம்.

தேசிய கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த பணிப்பாளர் திருவாளர் ஏ. டி. குணசேகரா, அவர்களையும் முன்னைனாள் செயற்திட்ட அதிகாரி திருவாளர் சி. ரீ. இராசேந்திரா அவர்களையும், தற்போதய பிரதம செயற்திட்ட அதிகாரி யாக கடலமயாற்றும்; எங்கள் தேவைகளை உணர்வால் உணர்ந்து உதவும், திருமதி ரி. சிதம்பரநாதன் அவர்களையும், இந்த வகையில் சற்றும் சளைக்காத செயற்திட்ட அதிகாரி திருவாளர் எம். தங்கவேல் அவர்களையும் நன்றியுடன் நினைவு கூர்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

எமது நிலையத்தின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் முழுமுதற் காரணமாகவிருந்த, நம்மால் மறக்கமுடியாத முன்னாள் கல்விப் பணிப்பாளர் - உயர்திரு இரா. சுந்தரலிங்கம் அவர்களுக்கும், முன்னைனாள் முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் திரு. என், தணிகாசலம்பிள்ளை அவர்களுக்கும், வவுனியா கல்விப் பணிப்பாளர் துரை தியாகராசா அவர்களுக்கும், முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் அவர்களுக்கும், மதிப்புக்குரிய அமரர் திரு. இ. சிவானந்தன் அவர்களுக்கும் நமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நமது நிறுவன செயற்பாட்டிற்கு பல வழிகளில் உதவிய கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன் அவர்களையும் இந்து மகளிர் கல்லூரியில் வகுப்புக்களை நடாத்துவதற்கு முழு உதவிகளையும் தந்துதவிய முன்னைனாள் இக் கல்லூரி அதிபர் திருமதி தி. நாகராசா அவர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறந்த ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் தந்து நிற்கும் யாழ் கல்வித்திணைக்களம் - 11 டைச் சார்ந்த கல்விப் பணிப்பாளர் மதிப்புக்குரிய திரு. க. கந்தசாமி அவர்களுக்கும், அத்திணைக்களத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச, ஜெயராசா கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி அதிபர் திரு. த. முத்துக்குமாரசுவாமி ஆகியோருக்கு நமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணம், உடல், மனம், நெருடும் மிகக் கடினமான நிலையில், கொழும் புப் பிரயாணத்தைச் செய்து, இந் நிறுவன மாணவ வளர்ச்சியில், கண்ணும் கருத் துமாக இருந்து வளர்த்துவரும் சிரேஷ்ட விரிவுரையாளர் திருவாளர் தி. கமல நாதன் அவர்களை இருகரம் கூப்பி நன்றி கூறுவதில் பெருமைப்படுகின்றோம்.

நமது நிறுவன விரிவுரையாளர்களாக கடமையாற்றுவதோடு கற்றல் கற்பித்தல், ஆசிரியர்களாகிய நமக்கு இடர்கள் ஏற்படும் போது இடர்களைக் களைந்து சிறந்த வழிகாட்டிகளாக இருக்கும் நமது பெருமைக்குரியவர்களிற் தன்னலமற்ற சேவையும் (1994 - மாசிமாதத்தில் இருந்து எதுவித கொடுப்பன வும் இதுவரை கிடைக்காத போதும்) பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

வசதிகள் அற்ற நிலையில் செயற்படும் எங்களுக்கு; தேவையான தக வல்களை சிறந்த முறையில் பரிமாறிக் கொள்வதில் மனங்கோணாது ஒத்துழைப்பு வழங்கிவரும் ''உதயன்'' ''ஈழநாதம்'' ''ஈழநாடு'' பத்திரிகைகளை நாம் என்றும் நினைவு கூர்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

நமது நிலைய அலுவலக சேவையினைத் திறம்பட வழங்கும் ஊழியர் களுக்கும், நிறுவனத்தின் தேவைகளை உணர்ந்து செயற்பட்ட நல்லோர்க்கும், ஏனையோர்க்கும் இரு கரம் கூப்பி நன்றி கூறுகின்றோம்,

நன்றி.

இ. சந்திரன்
செயலாளர்
மாணவர் அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PATRICIAN INSTITUTES

- ★ Computer Courses
  - Basic Languages
  - Word Processing
  - Lotus 1-2-3
  - & BASE III PLUS
  - PASCAL
  - CLIPPER
  - C Languages
- ★ Civil Draughtsman ship & Quantity Surveying
- ★ Book-Keeping & Accounts
- ★ Speak Well English & Elocution Practice (SWEEP)
- ★ TOEFL & Shorthand & Typing
- ★ General Motor Mechanism
- ★ Electrical wiring
- ★ Motor Rewinding
- ★ General Electrician
- ★ Lathe Machine operation
- ★ ARC Welding

St. Patrick's Road, JAFFNA

# ச. லிங்கநாதன் வண்ணச் சோலை

நிதான விலை சிறந்த ரகம்

திருமணம் மற்றும் வைபவங்களுக்கேற்ற

காஞ்சிபுரம், தஞ்சூர், மணிப்புரி

நைலெக்ஸ், பெனாரிஸ், மைசூர்சில்க் சிப்போன் சாறி வகைகள்

பட்டு வேட்டிகள் சேட்டிங் - சூட்டிங்

ஏனைய புடவைத் தினுசுகளையும் தெரிவு செய்ய

● சிறந்த ஸ்தாபனம் ●

13-14, மேஜர் சோதியா வீதி, யாழ்ப்பாணம்.
(பெரியகடை வீதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய லலிதா நகை மாடம்

## தங்கப்பவுண் நகை வியாபாரம்

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்

74/1, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி,)
யாழ்ப்பாணம்.

## பேராதனை - யாழ்ப்பாண

## வெளிவாரி பட்டப்படிப்பு விரிவுரைகள்

- G. A. Q. (பேராதனை)
- B. A. (பேராதனை)
- 1st in Arts (யாழ்ப்பாணம்)
- 1st in Com. (யாழ்ப்பாணம்)
- B. A. (Part I) (யாழ்ப்பாணம்)
- B. Com (Part I) (யாழ்ப்பாணம்)
- B. A. (Final) (யாழ்ப்பாணம்)
- B. Com. (Part II) (யாழ்ப்பாணம்)

பட்டப்படிப்பு விரிவுரைகளும், பதிவுகளும் நடைபெறுகிறது

# புதிய உயர் கல்லூரி

## NEW COLLEGE OF HIGH STUDIES

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகின்றோம்

## ஆனந்த்ஸ் பொத்தக நிலையம்

பாடசாலைப் புத்தகங்கள், சஞ்சிகைகள், காகிதாதிகள்,
வாழ்த்து மடல்கள் அனைத்திற்கும்
நாடவேண்டிய ஸ்தாபனம்.

21/B, இளங்கோ தெரு, யாழ்ப்பாணம்.

## லலிதா பட்டுச்சோலை

சிறந்த ரகம் நிதான விலை
சேட்டிங் - சூட்டிங் பட்டுப் பிடவைகள்
ஸ்கேட் - பிளவுஸ் சிறுவருக்கான ஆடைகள்

அனைத்தையும் மலிவாகப் பெற்றுக் கொள்ள
யாழ்நகரில் ஒரே இடம்

5, 6, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

## கிருபா நகை பூங்கா

நகை வியாபாரம்

ஆடர் நகைகள் 22கரட் தங்கத்தில்
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்

333A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வதனி ஆபரண மாளிகை

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
செய்து தருபவர்கள்

▲ வதனி ஆபரண மாளிகை ▲

டச்சு வீதி,
சாவகச்சேரி.

கிளை: யாழ். வீதி,
கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் கல்லூரி - பட்டதாரிப் பிரிவு

G. S. Q. – உயிரியல்
G. C. E. – A/L கணிதம் / உயிரியல்
G. C. E. – A/L கணக்கியல்

வகுப்புக்கள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன
மாணவர்கள் கலந்து பயன்பெறுங்கள்.

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

செல்லுங்கள்!
பெற்றுக் கொள்ளுங்கள்!!
நன்மை பெறுவீர்கள்!!!

சகல விதமான பாட உபகரணங்களுக்கும்
நூல் வகைகளுக்கும் இன்றே நாடுங்கள்

## சிறீ சுப்பிரமணிய புத்தகசாலை

235, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.

---

## பேரரசி (மகாராணி)

வண்ணச் சோலை

சகல விதமான பட்டுப்பிடவைகளும்
சிறுவர், சிறுமியர்க்கு ஏற்ற றெடிமேட்
ஆடைகள் அனைத்திற்கும் நாடவேண்டிய
※ கைராசியான ஸ்தாபனம் ※

இல. 50. சோதியா தெரு, யாழ்ப்பாணம்.
(பெரியகடை)

---

## சிவகணேசன் பட்டுச் சோலை

நங்கையர்க்கேற்ற
சகல விதமான பிடவைகள், ஆடைகள்
ஆடவருக்கேற்ற
சூட்டிங், சேட்டிங், மற்றும் துணிவகைகள்
சிறுவர்களுக்கான
றெடிமேட் ஆடைகள்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கு

# பேபி போட்டோ



இந்து மகளிர் லேன் அருகாமையில்

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசிரியம்" வளர எமது நல்லாசிகள்

## கம்சனா ஆடை அகம்

ஒளி வீசும் எழில் வடிவம்

ஒயிலான கலை வடிவம் நிறைந்த

காஷ்மீர், காஞ்சிபுரம், மணிப்புரி

நவீன நாகரீகத்திற் கேற்ற

வெளிநாட்டு ஆடைகள், திருமண பட்டுப்புடவைகள்

சேட்டிங், சூட்டிங், றெடிமேட் ஆடை வகைகளையும்

வாங்க சிறந்த ஜவுளி ஸ்தாபனம்

A. J. M.

147, சிறப்பு அங்காடி,
(நவீன சந்தை)
யாழ்ப்பாணம்.

## லக்சனா பல்பொருள் அங்காடி

எல்லா விதமான அழகு சாதனப் பொருட்கள்

பெற்றோ மாக்ஸ்

மணிக்கூட்டு வகைகள்
அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்திற்கும் லக்சனா

பல்பொருள் அங்காடியை நாடுங்கள்

119, சந்தோசம் வீதி,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.



புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org